
கோகுலம்

GOKULAM ஜூலை 2000 ரூ. 6/-




விருந்தாவனம்

ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்




விடை : 1. குடைக்கம்பி, 2. நாணயங்கள், 3. மத்தளம், 4. மனிதனின் காது, 5. கால் விரல்கள், 6. வளி



வரைந்து பழகுங்கள்

ஓவியர் சில
தவறுகளைச்
செய்துவிட்டார்.
எங்கே
கண்டுபிடியுங்கள்
பார்க்கலாம்!



விடை : 1. சிறுவன் - டெலிபோன் ரிசீவரை தலைகீழாகப் பிடித்திருத்தல் 2. சிறுவனின் இடக்கை விரல்கள் மாறியிருத்தல் 3. சிறுவன் உட்கார்ந்திருக்கும் நாற்காலியில் ஒருகால் குறைந்திருக்கிறது 4. டீ.வி. மின் இணைப்பு இல்லாமல் இயங்குகிறது 5. ஃபிளக் பாயிண்ட் தலைகீழாக இருத்தல் 6. சிறுமி எழுதும் பேனாமுனை தலைகீழாக அமைந்திருத்தல் 7. சிறுவனின் வலதுகால் விரல்கள் மாறியிருத்தல்.



கோகுலம்

2000

ஜூலை

மலர் : 18

இதழ் : 6

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

“அப்பாடா, வெய்யில் சற்று தணிந்தது” என்று நிம்மதிப் பெருமூச்சு விட முடியாமல், மனோஜ் பிரபாகர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளின் பயங்கரச் சூடு நம்மைச் சுட்டெரிக்கிறது!

கிரிக்கெட் என்ற சொல்லே கண்ணியத்துக்கு மறுபெயர் என்று கருதப்பட்ட காலம் ஒன்றிருந்தது. கனவான்களின் ஆட்டம் அது என்றும் கிரிக்கெட் மைதானம் நேர்மையின் உறைவிடம் என்றும் எண்ணப்பட்டது. இதனாலேயே கிரிக்கெட்டில் வெற்றி பெறுவது என்பது மிகப் பெரிய கௌரவமாகவும் தேசத்துக்கே பெருமை சேர்ப்பதாகவும் ஆகி விட்டது.

ஆனால் கிரிக்கெட்டிலும் சூதாட்டம் நடக்கக்கூடும் என்பதும், அதிலும் லஞ்ச லாவண்யங்களுக்கு இடமுண்டு என்பதும் அண்மையில் நிரூபணமாகி, நமது உன்னதமான கிரிக்கெட் கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டது.

இதிலே முதல் பலியானவர் தென்னாப்பிரிக்க காப்டன் ஹான்ஸி குரோனே. அதைத் தொடர்ந்து பாகிஸ்தானிய ஆட்டக்காரர்கள் சிலரும் பணத்தாசைக்கு ஆளாகி ஆட்டத்தை விற்றனர் என்று கேள்விப்பட்டோம்.

அப்புறம் நாம் கனவிலும் கருதாத பேரிடி நம்மைத் தாக்கியது. நமது இந்திய கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் விதிவிலக்கல்ல; அவர்களில் சிலரது விக்கெட்டுகளை பந்தினால் மட்டுமின்றி பணத்தினாலும் வீழ்த்த முடியும் என்ற செய்தி!

இவர்கள் மீது சி.பி.ஐ. விசாரணை நடந்து, வழக்கு தொடரப்பட்டு, குற்றம் நிரூபணமாகி, தண்டனை பெறலாம் அல்லது போதிய சாட்சியம் இல்லை என்பதால் விடுதலை பெறவும் செய்யலாம். எவ்வாறாயினும் மனோஜ் பிரபாகர் ரகசியமாகப் பதிவுசெய்து பகிரங்கமாக வெளியிட்டுள்ள வீடியோ டேப்புகள், நமது ஆட்டக்காரர்களில் பலர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக்கூடியவர்கள்தான் என்பதையும், பொது இடத்தில் ஒரு மாதிரியும் தனி இடத்தில் வேறு மாதிரியும் உரையாடக்கூடியவர்கள்தான் என்பதையும் நிரூபித்து விட்டன. இவர்களில் பலர், 'வந்தே மாதரம்' கோஷம் எழுப்பி 'தேசபக்தி, சமுதாய நலன்' என்றெல்லாம் பேசியது அவ்வளவும் வேஷம்தான்!

காசு வாங்கிக் கொண்டு ஆட்டமிழப்பது பச்சையான தேசத் துரோகம் ஆகும். அத்தகைய பாதகத்தைச் செய்த ஹான்ஸி குரோனேயாவது குற்றத்தைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு நமது அனுதாபத்துக்கு உள்ளாகி மதிப்பிலும் மீண்டும் உயர்கிறார். ஆனால் செய்த குற்றத்தை மறைக்க முயல்பவர்கள் பெரும் பாதகத்தைச் செய்பவர்களாவார்கள். நாளை உண்மை ஆதாரத்துடன் வெளிப்படுமானால் தலைகுனிவு இவர்களுக்கு மட்டுமல்ல. பாரத தேசத்துக்கே பேரவமானமாகும்.

நேர்மையற்றவர்கள் நாட்டுக்குத் தேடித் தரும் மாபெரும் வெற்றிகளைக் காட்டிலும் நேர்மையானவர்கள் முயற்சியில் பழுதின்றி பெற்றுத் தரும் தோல்வியே உயர்வானது.

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.







கோகுலம்

கோகுலம் க்விஸ் முடிவு

கோடை விடுமுறையில் மே மாதம் அறிவிக்கப்பட்ட க்விஸ் போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சரியான விடைகளைப் பன்னிரண்டு பேரே அளித்துள்ளனர்.


ரூபாய் பதினாறு பரிசு பெறுவோர்


1. ச. வெங்கடேஷ், ஜெயகோபால் கரோடியா நேஷனல் பள்ளி, கிழக்கு தாம்பரம், சென்னை.
2. அ.சுதா, தாம்பரம், சென்னை.
3. ஆ. வினோத் விக்னேஷ்வரன், ஒன்பதாம் வகுப்பு, ரோஸ்மேரி மேல் நிலைப் பள்ளி, திருநெல்வேலி.
4. எஸ். மணிகண்டன், மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம்.
5. எம்.மன்சூர் அலி, பத்தாம் வகுப்பு, கிளியூர் அஞ்சல், மயிலாடுதுறை தாலுகா.
6. வை. மதியழகன், வரிச்சிக்குடி அஞ்சல், காரைக்கால் தாலுகா.
7. எஸ். கலைச் செல்வன், சென்னை.
8. ஆர். அரவிந்தன், அரசவனங் காடு.
9. அருணா கோபி, ஒன்பதாம் வகுப்பு, அரும்பாக்கம், சென்னை.
10. வ. மிருணா, கருமண்டபம், திருச்சி.
11. அ. பாக்யராஜ், சென்னை.
12. கே. ஆர். உதயகுமார், சென்னை

சரியான விடை

1. பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா.
2. பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை.
3. மேற்கு இந்திய

இந்த இதழில்...





கிரிக்கெட் அணியின் கேப்டன் ஜிம்மி ஆடம்ஸ்.

4. மகுடி இசையைப் பாம்புக் கேட்காது.
5. நேபாள தலை நகர் காத்மண்டு.
6. அச்செழுத்துக்களை உருவாக்கும் முறை [illegible]
7. எலும்பு மற்றும் பல் வளர்ச்சிக்கு இன்றி யமையாத நுண்ணூட்டச் சத்து கால்சியம்.
8. சென்ற ஒலிம்பிக் போட்டியில் பரிசு வென்ற இந்திய வீரர் லியாண்டர் பயஸ்.
9. வோட்டுரிமை வயது 18.
10. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் கயத்தாறு.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதோடு விரைவில் அனுப்பி வைப்பதிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாதப் போட்டி : பழங்கள் சம்பந்தப்பட்ட விடுகதைகள். தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள்.

இந்த மாதமும் இன்னும் இரண்டு மாதங்களுக்கும் மேற்கண்ட மாவட்டங்களுக்குப் போட்டி தொடரும். விரைவில் மற்ற மாவட்டங்களுக்கும் வாய்ப்பு வரும். காத்திருங்கள்! பரிசை வெல்லுங்கள்.



பெயரால்

நான் பிறந்தபோது அப்பா ஊரில் இல்லை. அம்மாவுக்கு என்னவோ எனக்கு பிரேமகுமாரி என்று பெயரிட ஆசை. நடிகை டி.ஆர். ராஜகுமாரியின் சாயல் அம்மாவுக்கு இருந்தது. எனவே அவரது விருப்பம் அந்த அடிப்படையில் அமைந்திருந்தது போலும். தாத்தாவுக்கு சுவர்ணாம்பிகை என்று அழைக்க விருப்பம். தகவல் தெரிந்து வந்த அப்பா நாள், நட்சத்திரம் எல்லாம் பார்த்து 'தி' அல்லது 'து' என்ற எழுத்தில் துவங்கும் பெயர்களை யோசித்திருக்கிறார். அப்பா பக்திமான். பூஜை, புனஸ்காரம் என்று இருப்பவர். எங்கள் தெருவில் துளசியம்மா என்ற பெயரில் ஒருவர் இருந்ததால், நான் திலகவதி ஆனேன். சுலபமாக 'திலகவதி' என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் திலகவதி அம்மையார் என்ற நீண்ட பெயரிட்டு விட்டார் அப்பா. இந்த நீளமான பெயரினால் பத்து வயது வரை எந்தப் பாதிப்பும் இல்லை. தெலுங்கு பேசுபவர்கள் அதிகம் இருந்த பகுதியில் நாங்கள் வசித்ததால் அவர்களுக்குச் செல்லமாக 'அம்மாயி', பக்கத்து வீட்டு அம்மாவுக்கு 'பங்காரு தல்லி'. அம்மா பள்ளி ஆசிரியர். நடை தெரிந்த நாள் முதல் அவருடன் பள்ளிக்குச் சென்று வந்ததால் பள்ளியில் எல்லோருக்கும் பாப்பா, தாத்தா உயிரோடு இருந்த காலம் வரை அவருக்கு நான் 'சுவர்ணா'தான். அப்பா, அம்மா, பெரியம்மா ஆகியோர் 'கண்ணு', 'சாமி', 'அம்மா' என்றுதான் என்னை அழைப்பார்கள்.

எல்.கே.ஜி., முதல் வகுப்பு என்று வரிசைப்படி படிக்காமல் ஐந்தாம் வகுப்பில் நேரிடையாகச் சேர்ந்து பாஸ் செய்தேன். அம்மா வேலை பார்த்த நடுநிலைப் பள்ளியிலிருந்து சற்றுத் தள்ளி இருந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு சேர்த்தார்கள். அதன் பிறகு தான் 'பெயர்' என்னைப் பாதிக்கத் துவங்கியது. மாதந்



வந்த பாதிப்பு!


தோறும் நடக்கும் தேர்வில் முதல் மூன்று ராங்க் வாங்கும் மாணவிகளை காலைப் ப்ரேயரின்போது மேடைக்கு அழைத்துப் பாராட்டுவார்கள். ஜி. திலகவதி அம்மையார், ஆறாம் வகுப்பு பி என்று அழைத்தவுடன் ரெட்டைப் பின்னலும், சின்னப் பாவாடை சட்டையுடன் குட்டி உருவமாக நான் மேடையேற ஆசிரியைகள் சிரிப்பார்கள்.

சில காலம் கழித்து தலைமையாசிரியை பெயர்களைப் படிக்கும்போது என் பெயரைப் படித்ததும் கொஞ்சம் இடைவெளி கொடுப்பார் - மற்றவர்கள் சிரிக்க. எனக்கு மிகவும் சங்கடமாக இருக்கும். அப்பாவிடம் வந்து இந்தப் பெயர் வேண்டாம் என்று மன்றாடுவேன். "அம்மா! சைவ சமயக் குரவர் திருநாவுக்கரசரின் சகோதரியும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவருமான திலகவதி அம்மையாரின் நினைவைப் போற்றும் விதமாக ஒரு பெருமைக்குரிய விஷயமாக அந்தப் பெயரை உனக்கு வைத்தேன்" என்று பதில் சொல்லி விடுவார் அப்பா. பிற்காலத்தில் நான் ஐ.பி.எஸ் பயிற்சிக்காக போனபோது வடநாட்டு அன்பர்கள் 'அம்மையார்' என்பது உங்கள் குடும்பப் பெயரா, கணவர் பெயரா, தந்தையின் பெயரா என்று கேள்விகளால் என்னைத் திணறடித்தார்கள். அவர்களிடம் திலகவதியாரின் கதையையும் அப்பாவிற்கு அவரிடமிருந்த அபிமானத்தையும் எடுத்துச் சொல்லி, தமிழையும் சைவத்தையும் பரப்பினேன். 1983ல் முறைப்படி கெஸட்டில் அறிவித்து



திலகவதி ஐ.பி.எஸ்.





அம்மையாரை நீக்கி அப்பாவின் கோபத்துக்கு ஆளானேன்.


எங்கள் தெருக்கோடியில் இருந்த மூதாட்டியிடம் எனக்கு டியூஷன் ஏற்பாடு செய்தார்கள். அந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை. அங்கே போவதை வெறுத்தேன். டியூஷன் நேரம் நெருங்கும்போது காணாமல் போகத் துவங்கினேன். பரண்களும் சோளக் கொல்லைகளும் கோயில் பிரகாரங்களும் புளியந்தோப்பும் ஒளிந்து கொள்ள சௌகரியமான இடங்கள். என்னைத் தேடிப் பிடிப்பதற்குள் டியூஷன் போனவர்கள் திரும்பி விடுவார்கள். இன்று நடந்தது போல அந்தச் சம்பவம் நினைவிருக்கிறது. 'ஒரு நாள் டியூஷனுக்குப் போக மாட்டேன்' என்று அடம் பிடித்து புளிய மரத்து கிளையில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். அப்புறம் அம்மாவுக்கும் எனக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி அம்மாவே டியூஷன் எடுக்கத் துவங்கினார். என் ஒருத்திக்காகத் துவங்கிய டியூஷனில், தெருப் பிள்ளைகளும் வந்து சேர காலப் போக்கில் எண்ணிக்கை வெகு வேகமாக அதிகரித்தது. புதிதாக வகுப்புக்குப் போனதும் நோட்டுக்களுக்கும் புத்தகங்களுக்கும் அழகாக அட்டைப் போட்டு லேபில் ஒட்டி மணி, மணியாகப் பெயர் எழுதித் தருபவர் அம்மாதான். சரித்திர பாடத்தின் மேப்களும் விஞ்ஞானப் பாடத்தின் படங்களும் அம்மாவின் கைவண்ணமாகத்தான் இருக்கும். அம்மாவுக்குப் பிடித்த தலைவர்கள், தந்தை பெரியாரும் சுபாஷ் சந்திர போஸும்! அவ்வப்போது அவர்களின் அருமை, பெருமைகளை எனக்குச் சொல்வார் அம்மா!

என் நினைவில் பளிச்சென இடம் பிடித்திருப்பது எங்கள் வீட்டின் பின்புறமிருந்த புளியந்தோப்புதான். நானும் என்னையொத்த சிநேகிதிகளும் கொட்டம் அடிக்கும் இடம் அதுதான். எங்களுக்குப் போட்டியாக அங்கு நடமாடியவை குரங்குகள். பத்து நாட்கள் முகாம் போடும்; பின் திடீரென மறைந்து போகும். பிஞ்சுகளையும் காய்களையும் கிளையோடு ஒடித்துப் போடும். குரங்குகளுக்கு எதிரில் அவைகள் பறித்துப் போட்டதை எடுக்க நினைத்தால் அவ்வளவுதான். மாட்டிக் கொள்வோம். அப்போது எனக்கு நான்கு அல்லது ஐந்து வயது இருக்கும். குரங்குகள் பறித்துப் போட்டவற்றை சேகரித்துக் கொண்டிருந்தேன். ஒரு குரங்கு என் பாவாடையைப் பிடித்துக்கொண்டது. மற்றவர்கள் மிரண்டு ஓட, அந்தக் குரங்கின் சீற்றமும் பல்லைக் காட்டி மிரட்டுவதும் பயங்கரமாக இருந்தது. 'சேகரித்ததைப் போட்டு விடு. அப்போதுதான் குரங்கு விடும்' என்று எல்லோரும் குரல் கொடுக்கிறார்கள். ஆனால்



நான் இன்னும் இறுக்கமாக சேமிப்பைப் பற்றிக் கொண்டேன். கடைசியில் அம்மா கோலோடு வந்து குரங்கை மிரட்டித் துரத்தினார். ஆசிரியையின் கோலுக்குக் குரங்கும் பயப்படும் என்பது புரிந்தது.

அப்பா அடிக்கடி என் பள்ளி ஆசிரியைகளைச் சந்திப்பார். அவர்களிடம் 'எல்லாம் நல்லபடி இருந்தா சரிங்க; ஏதாவது தப்பு கண்டால் கண்ணை மிச்சம் விட்டுட்டு நல்லா நாலு போடுங்க' என்பார். எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது மாதத் தேர்வில் மார்க் குறைந்ததால், 'மார்க் ஷீட் தரவில்லை' என்று பொய் சொல்லி விட்டேன். உண்மை தெரிந்த அப்பா புளிய மரத்தின் மிளாறை எடுத்து விளாசிவிட்டார். அவர் அடித்த அடியில் எனக்கு ஜுரமே வந்து விட்டது. விஷயம் தெரிந்து வீட்டுக்கு வந்த விமலா டீச்சர் கடுமையாக அப்பாவைக் கோபித்துக் கொண்டார். அதற்குப் பிறகு நான் ஏதாவது தவறு செய்தால் அப்பாவிடம் இருந்து மிரட்டல்கள்தான் வரும். அதற்குப் பின் நானும் சிறிய விஷயத்துக்குக்கூட பொய் சொல்ல மாட்டேன்.



அப்பாவைப் பொறுத்தவரையில் பாடப் .புத்தகங்கள்தவிர வேறு எதையும் பார்க்கக் கூடாது. 'கதை படிப்பது வீண்' என்பது அம்மாவின் கருத்து. விடுமுறை நாட்களில் ஆங்கிலம், தமிழ், இந்தி என்று எழுதிக் காட்டச் சொல்லுவார்கள். ஜன்னலுக்கு வெளியே இருந்து தோழிகள் விளையாட 'வா.வா' என்று கூப்பிடுவதும், நான் அறைக்குள் உட்கார்ந்து ஆத்திரமும் சலிப்பும் கலந்து வர, முத்து முத்தாய் எழுதி முடிப்பதும் இன்றைக்கும் மறக்க முடியாத காட்சியாக மனதில் நிற்கிறது. அம்மா பள்ளிக்கூட நூலகத்திலிருந்து பாரதியார் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்து அறிமுகம் செய்து வைத்தார். அப்பா தீர்த்தகிரியார் (தர்மபுரி) திடலில் நடக்கும் என்.சி.பி.ஹெச் புத்தக கண்காட்சிக்கு அழைத்துப் போவார். பாரதியார், ஷெல்லி கவிதைகள், நாலாயிரம் வயது மனிதன் போன்ற புத்தகங்கள் அங்கு வாங்கிக் கொடுத்தவைதான். துரதிருஷ்டம் என்னவென்றால் வருடம் ஒருமுறை அப்பா வாங்கித் தரும் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிப்பது பாவம் என்று வலியுறுத்தப்பட்டதுதான். ஆனால் எனக்கோ அவை யானைப் பசிக்குச் சோளப்பொறி. அதை ஈடு செய்தவர் என் பாட்டிதான். மகாபாரதம், ராமாயணம் என்று துவங்கி நாட்டுப்புறக் கதைகள் அத்தனையும் சொல்லுவார் பாட்டி. அவர் கதை சொல்லும் பாணியால் கவரப்பட்டு வீட்டுத் திண்ணையில் ஒரு குட்டி மகாநாடே கூடும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அக்கம் பக்கத்திலுள்ள புத்தகச் சுரங்கங்களை விசாரித்துச் சொல்பவர் அவர்தான். அப்படித்தான் ஸ்டேட் பாங்க் ஊழியர் வெங்கடேசன் வீட்டில் இருந்த கல்கி, நா.பார்த்தசாரதி நாவல்கள் எனக்கு அறிமுகமாகின. வாத்தியார் ரங்கசாமிதான் எனக்குப் பொதுநூலகம் இருப்பதை அறிமுகப்படுத்தியவர். அப்பா, அம்மாவுக்குத் தெரியாமல் பொது நூலகத்துக்குப் போகத் துவங்கினேன். அது ஒரு நாள்



தெரிந்துபோய் பெரிய கலாட்டா. கடைசியில் பாட்டியின் துணையுடன் நூலகம் போய் வரலாம் என்று ஏற்பாடாகியது. தவிர படிப்பதற்குப் பத்துக்கு ஏழு புத்தகங்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமென்று கண்டிஷன் போடப்பட்டது. ஆங்கிலம் என்பதற்கு 'மொழி பெயர்ப்பு' என்ற திருத்தத்தை நான் போட்டுக் கொண்டேன். இப்படியாகத் தான் எனக்கு டால்ஸ்டாயும் கார்க்கியும் மாப்பசானும் தாகூரும் அறிமுகமானார்கள்.

நான் நல்ல புத்தகங்கள் படித்து நல்ல சிந்தனைகளுடன் வளர வேண்டும் என்பதே அப்பாவின் நோக்கமாக இருந்தது. எங்கள் ஊர் திடலில் நடக்கும் அரசியல் கூட்டங்களுக்கும் என்னை அழைத்துப் போவார். பெரியார், காமராஜ், அண்ணா ஆகியோர் பேச்சை பத்துப் பதினோரு வயதில் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. வாரியார் பிரசங்கம், மகா பாரத கதாகாலட்சேபங்கள் ஆகிய வற்றுக்கும் அழைத்துப் போயிருக் கிறார். அவர் அடிக்கடி என்னை அழைத்துச் செல்லும் இடம் துணிக் கடை. விதம்விதமாக வாங்கி எனக் குப் போட்டு அழகு பார்ப்பார். பள்ளி நாட்களில் நான் ரிசர்வ் டைப்தான். என்னை என் கூட் டுக்கு வெளியே இழுத்த ஒரே சக்தி புத்தகங்கள்தான்!

யாரோ ஒரு ஜோஸியர் அப்பா விடம் 'நான் போலீஸ், சட்டம், கோர்ட் ஆகியவை தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்துக்குப் போவேன்' என்று சொல்லியிருக்கிறார். எனவே பி.ஏ முடித்த வுடன் நான் பி.எல் படிக்க வேண்டும் என்பது அப்பாவின் எண்ணம். ஆனால் நான் எம்.ஏ பொருளாதாரம் படித்து முடித்து சிவில் சர்வீஸ் தேர்ச்சி பெற முடிவு செய்தேன்.

நான் ஐ.பி.எஸ் பணிக்குத் தேர்ச்சி பெறும்வரை என்னுடன் அப்பா பேசவே யில்லை. ஆனால் அதன் பின் சொன் னார்: ''ஜோஸியன் சரியாகத்தான் சொல்லியிருக்கிறான். போலீஸ் வேலைக் குப் பொண்ணுங்க போகாத காலமாத லால் நீதித்துறைன்னு நினைச்சுட்டேன்.''

சந்திப்பு - **ப்ரியன்**




ஓவியப் போட்டி


ஓவியப் போட்டியின் இந்த மாதத் தலைப்பு : **துள்ளி ஓடும் மான்கள்.** அது புள்ளி மானாகவோ கொம்பு மானா கவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஓவியம் வண்ணத்திலிருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண் டும். **கடைசி தேதி 20.7.2000.** ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

நிம்மதியானவர் யார்?

கதை: ஜானகி குமார்　　படம்: சசி




"அமைச்சரே! நீங்கள் சொன்னதில் எனக்குத் திருப்தி இல்லை. என் குறை தீர்ப்பவருக்குப் பத்தாயிரம் பொன் பரிசு என அறிவித்து விடுங்கள்."
நாடெங்கும் தண்டோரா போடப்பட்டது. ஆனால் யாரும் அரசரைத் தேடி வரவில்லை.
அரசருக்கு இதே கவலையில் உடல்நிலை சரியில்லாமல் போனது. இதைப் பார்த்த இளவரசன் கவலை இல்லாத நபரைத் தேடிக் கிளம்பினான்.
இளவரசன் நீண்டதூரம் பயணம் செய்ததால் களைப்புற்றான். ஒரு மரத்தடியில் அமர்ந்தான்.
அந்த மரத்தடிக்கு ஒருவர் வந்தார். கொண்டு வந்த உணவைச் சாப்பிட்டு, துண்டை விரித்துப் படுத்தார்.
'எப்படி இந்த வெயிலில் இவரால் நிம்மதியாகத் தூங்க முடிகிறது?' என்று இளவரசனுக்கு வியப்பாக இருந்தது.



தூங்கி எழுந்தவர் நடக்க ஆரம்பித்தார். "ஐயா, சற்று நில்லுங்கள். நீங்கள் நிம்மதியாக இருக்கிறீர்களா?" என்றான் இளவரசன்.
"எனக்கென்ன கவலை? தினமும் உழைத்துச் சாப்பிடறேன். கையில் பொருளில்லை. அதனால் பாதுகாக்க வேண்டிய கவலையுமில்லை" என்றார் மகிழ்ச்சியுடன்.
இளவரசனுக்குத் தான் தேடிய ஆள் கிடைத்ததில் மகிழ்ச்சி. அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.
நடந்ததைக் கேட்டறிந்த அரசர் "துன்பங்களுக்குக் காரணம் நிறைவில்லாத மனம்தான் என்பதை உன் மூலம் அறிந்தேன். என் கவலை தீர்ந்தது. இதோ பத்தாயிரம் பொன் பரிசு" என்றார்.
"அரசே! நான் கவலையின்றி நிம்மதியாக இருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லையா? இந்தப் பரிசால் எனக்கு நிம்மதி போய்விடும். இதை நாட்டு நலப்பணிகளுக்குச் செலவிடுங்கள். இனி இது போன்ற கவலைகளில் மூழ்காதீர்கள். நான் வருகிறேன்" என்றபடி கிளம்பினார்.



புதிர் உலகம்!

I எனக்கு மூன்று தம்பிகள் உள்ளனர். அவர்களைப் பார்க்கப் போனேன். முதல் தம்பி ''அண்ணா எனக்கு எழுத பேனா இல்லை. ஒரு பேனா வாங்கித் தாருங்கள்'' என்றான். ''என்னிடம் கொஞ்சம் பணம்தான் உள்ளது. அதே அளவுக்கு பணம் தந்தால் உனக்கு பேனா வாங்கித் தருகிறேன்'' என்றேன். அவனும் சரி என்று பணம் கொடுத்தான். அவனுக்குப் பேனா ஒன்று வாங்கிக் கொடுத்து விட்டு மீதி பணத்துடன் 2-வது தம்பியைப் பார்க்கச் சென்றேன்.

அவனும் பேனா கேட்டான். அவனிடமிருந்து என்னிடம் எவ்வளவு பணம் இருந்ததோ அதே அளவு பணம் வாங்கிக் கொண்டேன். முதல் தம்பிக்கு வாங்கிக் கொடுத்த அதே பேனா, அதே விலையில் வாங்கிக் கொடுத்தேன்.

மீதி பணத்துடன் 3-வது தம்பியைப் பார்க்கச் சென்றேன். அவனும் பேனா கேட்டான். அவனிடமிருந்தும் என்னிடம் எவ்வளவு பணம் இருந்ததோ அதே அளவு பணம் வாங்கி பேனா வாங்கித் தந்தேன். மீதிப் பணம் என்னிடம் இல்லை. அப்படியெனில் நான் கொண்டு வந்த பணம் எவ்வளவு? பேனாவின் விலை என்ன? தம்பிகள் தந்த பணம் எவ்வளவு? கண்டுபிடியுங்கள்!

— பெ. இராமசாமி,
பனிரெண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
செந்துறை.

II 2519 என்ற எண்ணின் சிறப்பைப் பாருங்கள்!

2519. இந்த எண்ணை
1 ஆல் வகுக்க மீதி = 0
2 ஆல் வகுக்க மீதி = 1
3 ஆல் வகுக்க மீதி = 2
4 ஆல் வகுக்க மீதி = 3
5 ஆல் வகுக்க மீதி = 4
6 ஆல் வகுக்க மீதி = 5
7 ஆல் வகுக்க மீதி = 6
8 ஆல் வகுக்க மீதி = 7
9 ஆல் வகுக்க மீதி = 8
10 ஆல் வகுக்க மீதி = 9 என்று விடை வரும்.

— ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார்பாளையம்.

III கட்டத்திற்குள் வார்த்தை மாறி இருக்கிறது. அதைச் சரியாக எழுதுங்கள். சரியாக எழுதிய வார்த்தைகளில் வட்டமிட்டிருக்கும் எழுத்துகளைச் சேர்த்தால் ஒரு வார்த்தை கிடைக்கும். அதைக் கண்டுபிடியுங்கள். பார்க்கலாம்!

ன் | சி | கி | நே | த	☐ ☐ ☐ ☐ ○
று | ம் | ண | ந | ம	☐ ☐ ○ ☐ ☐
த் | ரை | மு | தி	☐ ○ ☐ ☐
ள | த | ம் | யா	○ ☐ ☐ ☐
வ | லை | ர் | த	○ ☐ ☐ ☐
ர் | மை | நே	☐ ☐ ○
பு | னி | இ | ப்	☐ ○ ☐ ☐

நம்மிடம் இருக்க வேண்டியது :

☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐

— ஹெச். ஸ்ரீநந்தினி, ஒன்பதாம் வகுப்பு,
அசிசி மெட்ரிக் மேல்நிலை பள்ளி,
சென்னை – 89.

IV 1. சங்கர் ஒரு கதையை 120 நிமிடத்தில் படித்து முடிக்கிறான். அதே கதையை பூபதி இரண்டு மணி நேரத்தில் படித்து முடிக்கிறான். இவர்களில் யார் சீக்கிரமாகப் படித்தவர்?

2. வரிசையான மூன்று எண்கள். அவைகளைக் கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே தொகை வர வேண்டும். அந்த மூன்று எண்கள் யாவை?

— க. பூங்கொடி
சித்தோடு.

V ஒரு கம்பத்தின் உயரம் 13 அடி. ஒரு குட்டிப் பல்லி அதன் மீது ஏறுகிறது. நிமிஷத்துக்கு மூன்று அடி ஏறும். இரண்டு அடி சறுக்கும். அப்படியானால் அது உச்சிக்குப் போக எத்தனை நிமிஷங்கள் ஆகும்?

ஆதாரம்: கணக்கு விளையாட்டு

— ஆறுபாதி புகழேந்தி

VI 1) ஒரு கல்யாணத்துக்கு மொத்தம் நூறு பேர் சென்றார்கள். அங்கு நூறு தோசைகள் இருந்தன. ஒரு குழந்தைக்கு அரை தோசை, ஒரு பெண்ணிற்கு ஒரு தோசை. ஒரு ஆணிற்கு இரண்டு தோசை எனப் பங்கிடப்பட்டது. மொத்தம் எவ்வளவு ஆண், எவ்வளவு பெண் மற்றும் எவ்வளவு குழந்தைகள் சென்றார்கள் என்று கூறுங்கள் பார்ப்போம்?

2) ஒரு நான்கு இலக்க எண் இருக்கிறது. அது ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களால் (எட்டை தவிர) வகுபடும். அது என்ன எண் என்று கூறுங்கள் பார்ப்போம்.

— ப. கவிதா, பத்தாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி,
தி. நகர், சென்னை – 17

VII 1. ஒரு எண்ணை இரண்டால் வகுத்தால் ஒன்று மீதியாகிறது. மூன்றால் வகுத்தால் இரண்டு மீதியாகிறது. நான்கால் வகுத்தால் மூன்று மீதியாகிறது. ஐந்தால் வகுத்தால் ஒன்றும் மீதியில்லை. அவ்வெண் யாது?

2. மூன்று வேடர்கள் வேட்டையாட காட்டிற்குச் சென்றனர். முதல் வேடன் கூட்டத்தில் இருந்த ஒரு பறவையைச் சுட்டு வீழ்த்தினான். இரண்டாவது மற்றும் மூன்றாவது வேடர்களும் சுட்டார்கள் எனில் அவர்கள் எத்தனை பறவைகளைச் சுட்டு வீழ்த்தியிருப்பார்கள்?

— எம். நவமணி, பழனிபட்டி.

விடை 57ஆம் பக்கம்

மாலதி

பார்த்தனர். ரஹீம் மட்டும் மனம் உருக அல்லாவை நினைத்து தொழுகை நடத்திக் கொண்டிருந்தான். 'தம்பி!' என்ற குரல் கேட்டு



எடுபிடி வேலை செய்ய ரஹீமை அழைத்துச் சென்றிருந்தார் அப்துல்லா. அவர் வாழ்நாளில் பெரும்பகுதி கப்பலிலேயே கழிந்தது. சீனத்துப் பட்டை நயமாக வாங்கிச் சட்டை தைத்து வேறு தேசத்தில் விற்பார். கேரளத்தில் மிளகு மலிவு. அதை வாங்கி மிளகு கிடைக்காத தீவில் லாபமாக விற்பார். அதனால் அவரிடம் நிறையப் பொருள் சேர்ந்தது.

தானும் வியாபாரம் செய்து செல்வந்தனாக வேண்டும் என்று ரஹீம் ஆசைப்பட்டான். அதற்கான மார்க்கத்தைக் காட்டும்படி தினமும் அல்லாவைத் தொழுதான்.

மாணிக்கத் தீவில் வியாபாரம் முடிந்து எல்லோரும் தீவைச் சுற்றிப்

கண் விழித்தான் ரஹீம். ஒரு வயதான கிழவர் எதிரே நின்று கொண்டிருந்தார்.

"பசியால் உயிர் போய்விடும் போலிருக்கிறது" என்றார்.

தொழுகை முடிந்து சாப்பிடலாம் என்று வைத்திருந்த ரொட்டிப் பொட்ட



கேட்டதைக் கொடுக்கும்

யந்திரம்!



லத்தை அவரிடம் கொடுத்தான் ரஹீம்.

"நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார் கிழவர். "காலையில் சாப்பிட்டதே 'திண்' ணென்றிருக்கிறது. மறுபடி கப்பலுக்குப் போன உடனே ரொட்டி தருவார்கள். அது போதும். நீங்கள் சாப்பிடுங்கள்" என்று அன்புடன் கூறினான் ரஹீம்.

கிழவர் ஆவலோடு சாப்பிட்டார்.

'க்கக்' விக்கல் வந்தது. ரஹீம் பதறியபடி மண்கூஜாவுடன் கடலுக்கு ஓடினான். அப்போதெல்லாம் கடல் தண்ணீர் உப்பாக இருக்காது. ஆற்று நீர் போல தாகம் தணிக்கும் சுவையுடன் இருக்கும்.

தண்ணீருடன் திரும்பி வந்தால் கிழவரைக் காணோம். ரொட்டியுடன் ஒரு பொறி யந்திரமும் இருந்தது.

"தம்பீ! உன்னை சோதிக்கவே வயோதிகனாக வந்தேன். கருணை மனம் கொண்ட உனக்கு இந்த வெகுமதி தந்திருக்கிறேன். இதன் வலது புறமிருக்கும் விசையை ஆறு முறை சுழற்றி உனக்கு வேண்டியதைச் சொல்லி 'கொடு' என்று கேள். கொடுக்கும். போதும் என்று நினைக்கும்போது இடது புறமுள்ள விசையைப் பதினோரு முறை திருப்பி 'இப்போதைக்குத் திருப்தி' என்று சொல். நின்று விடும். ஏழைகளிடம் இரக்கம் காட்டும்வரை இது அமுதசுரபியாக இயங்கும். மனதில் தீய எண்ணங்கள் குடி கொண்டால் இது வற்றி விடும். இந்த தேவ ரகசியத்தைக் காப்பாற்று."

எங்கிருந்து குரல் வருகிறது என்று சுற்று முற்றும் பார்த்தான் ரஹீம். 'அல்லாவின் அருள்' என்று மகிழ்ச்சியோடு பொறியைத் தனது அழுக்குத் துண்டால் மூடி எடுத்துக் கொண்டு கப்பலுக்குப் போய்விட்டான்.

கப்பல் ஊர் போய்ச் சேர்ந்தது.

மாம்பழம் கிடைக்காத காலத்தில் மாம்பழம் வரவழைத்து விற்றான். ஏழைகளுக்குக் குறைந்த விலையிலும் தன்னைப் போன்ற அனாதைகளுக்கு இனாமாகவும் கொடுத்தான்.

மிளகாய், பருப்பு வகைகள் போன்றவற்றை தீவுகளுக்கு எடுத்துச் சென்று விற்பான். ரஹீம் விரும்பியபடி செல்வந்தனானான். அவன் தன் பழைய வாழ்க்கையை மறக்காமல் ஏழைகளுக்கு உதவி வந்தான்.

ரஹீமுக்கு கரீம் என்று ஒரு நண்பன் இருந்தான். அவன் பசுத்தோல் போர்த்திய புலி. ரஹீமிடம் செல்வம் சேர்ந்த விதத்தை அறிய திட்டம் தீட்டினான்.

அதன்படி ரஹீமோடு அவன் வீட்டில் பேசிக் கொண்டிருந்தவன் "தலை

சுற்றுகிறதடா'' என்றான். ரஹீம் அவனைப் படுக்க வைத்தான். சற்று நேரத்தில் தூங்குவது போல் குறட்டை விட்டான் கரீம்.

அந்தச் சமயம் கரீம் ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு ஆள் வந்து "ஆயிரம் இராணுவ உடுப்புகள் அவசரமாக வேண்டும். தர முடியுமா?" என்று கேட்டான்.

''எப்போது வேண்டும்?'' என்று ரஹீம் கவலையுடன் கேட்க, "இப்போதே வேண்டும்" என்று பரபரத்தான் வந்தவன்.

"இருங்கள் வருகிறேன்" என்று உள்ளே போய்கதவைத் தாழிட்டுக் கொண்டான் ரஹீம். ஜன்னல்களும் மூடி இருந்தன.

கரீம் சத்தமிடாமல் எழுந்து சாவித் துவாரம் வழியே பார்வையை ஓட விட்டான். ரஹீமின் நடவடிக்கைகளைக் கூர்மையாகக் கவனித்து நினைவில் பதித்துக்கொண்டான்.

ஆயிரம் உடுப்புகள் ஆனதும் அள்ளிக் கொண்டு, கதவைத் திறக்க முற்பட்டான் ரஹீம். பொறி இராணுவ உடுப்புகளை மேலும் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒருவேளை அந்த மனிதர் மேலும் வேண்டும் என்று கேட்டால்... என்று நினைத்தான்.

கரீம் ஓடி வந்து படுத்துக்கொண்டான். இராணுவ உடுப்புகளை எண்ணி வாங்கிக் கொண்டு, வந்தவர் போய்விட்டார். அந்தச் சமயம் ரஹீமின் வேலைக்காரன் வரவே அவனை ஹாலில் நிற்க வைத்துவிட்டு ரஹீம் உள்ளே சென்று பொறியை நிறுத்தி விட்டு வந்தான். இதனால் கரீமால் பொறியை நிறுத்தும் விதத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை!

ஒரு வாரம் சென்ற பிறகு ரஹீமை விருந்துக்கு அழைத்தான் கரீம். ரஹீமுக்குக் கொடுத்த பழச் சாற்றில் மயக்க மருந்து கலந்திருந்ததால் ரஹீம் மயங்கி விழுந்தான். ரஹீமின் வீட்டிற்கு ஓடினான் கரீம். கள்ளச் சாவி போட்டு வீட்டைத் திறந்தான். பொறியைத் திருடிக்கொண்டு தயாராக இருந்த கப்பலில் வணிகப் பொருட்களோடு புறப்பட்டான்.

ரஹீமின் மயக்கம் தெளிந்தபோது கப்பல் வெகு தூரம் போய்விட்டிருந்தது. கரீமின் மோசடியைப் புரிந்துகொண்ட ரஹீம் 'எல்லாம் அல்லாவின் செயல்' என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு தன்னிடமுள்ள பணத்தில் ஒரு பெரிய வியாபார ஸ்தலம் தொடங்கி நியாயமாக



''வியாபாரத்துல அவருக்கு ஏக நஷ்டம். தினமும் கண்ணீர் விட்டு அழுதுக்கிட்டேயிருக்கார்''

''அவர் என்ன வியாபாரம் செய்தார்?''

''கைக்குட்டை!''

— ராமகிருஷ்ணன்

வியாபாரம் செய்து பிழைத்தான்.

கப்பலில் கரீமிடம் சமையற்காரன், "ஐயா! புறப்படும் அவசரத்தில் உப்பு எடுத்து வர மறந்து விட்டேன். மற்ற எல்லா சாமான்களும் இருக்கின்றன. ஏதாவது ஒரு தீவில் இறங்கி உப்பு வாங்கி வந்தால்தான் சாப்பிட முடியும்" என்று கையைப் பிசைந்தான்.

''பூ! இவ்வளவுதானா? கேட்டதைக் கொடுக்கும் கற்பக விருட்சமாய் யந்திரப் பொறி இருக்கையில் உனக்கேன் கவலை? நான் ரஹீமைப் போல் ஒளிந்து செயல்படப் போவதில்லை! அதிசயத்தை எல்லோரும் பார்க்கட்டும்" என்றபடி பொறியை இயக்கி "உப்பைக் கொட்டுவாய்" என்றான். பொறி உப்பைக் கொட்டத் தொடங்கியது.

எல்லோரும் இதை அதிசயமாய் பார்த்தனர். பாரம் தாங்காத கப்பல் ஒருபுறமாய் சாய்ந்தது. மறுபுறத்துக்குப் பொறியைத் தூக்கிக்கொண்டு போனான் கரீம். அங்கும் உப்பு மலையாய் குவியவே கப்பல் கடலுக்குள் இறங்கத் தொடங்கியது.

மாலுமி கரீமிடம் "அபூர்வமாகச் செயல்படும் இது ஆபத்தைத் தந்துவிட ஆரம்பித்துவிட்டது. முதலில் இதை நிறுத்து'' என்றான்.

கரீமுக்குத்தான் நிறுத்தத் தெரியாதே! என்னென்னவோ செய்து பார்த்தான். ஒன்றும் பிரயோஜனமில்லை!

உயிருக்குப் பயந்த அவன் நண்பர்கள் அதை மேலேயிருந்து கடலில் எறிந்தார்கள். உலகத்துக்குத் தேவையான உப்பை எடுத்தும் கூட கடலில் உப்புக் கரித்துக் கொண்டிருக்கிறது. பொறி உப்புக் கொட்டுவதை நிறுத்தவேயில்லை!

1962 ஜூன் மாதம் 7ம் தேதி ஜமைக்காவில் போர்ட் ரையல் பகுதியில் திடீரென பூகம்பம் ஏற்பட்டு பூமி பிளந்தது. இதில் லூயாஸ்கல்தி என்பவர் உயிருடன் புதைந்தார். மறு நிமிடம் ஏற்பட்ட மற்றொரு பூகம்ப அதிர்ச்சியால் அவர் வெளியே தூக்கி எறியப்பட்டார், பின்னர் இவர் 47 வருடம் நலமுடன் வாழ்ந்தார்.

– க. பூங்கொடி,
சித்தோடு.

பறவைகளைப் பிடித்துத் தின்னும் சிலந்திகள் தென் அமெரிக்காவில் உள்ளன. இவை வலை பின்னுவது இல்லை. பகலில் மறைவிடத்தில் தூங்கும். இரவில் கூடுகளில் உள்ள சிறு பறவைகளைத் தாக்கி உடலில் விஷம் செலுத்தி மயக்கமுறச் செய்து சாவகாசமாகச் சாப்பிடும்!

– எஸ். மோகன் ராஜ்,
சீர்காழி.

அரபு நாடுகளில், அரசர்களுக்கான குதிரைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையே அலாதிதான். முதலில் உயர்ஜாதி குதிரைகள் ஐம்பதில் ஐந்தைத் தேர்ந்தெடுப்பர். அந்த ஐந்து குதிரைகளுக்கும் உணவு கொடுப்பர். அதன்பின் ஐந்து குதிரைகளையும் பல நாட்கள் பட்டினி போடுவர். தாகத்தால் தவிக்க வைப்பர். பின்னர், நீர் தடாகத்துக்கு அழைத்துச் சென்று குதிரையின் கட்டுகளை அவிழ்த்து விடுவர். குதிரைகள் நீரைப் பருக, பாய்ந்தடித்து ஓடும். அப்பொழுது குதிரையின் நடத்துனர் சீட்டியடிப்பார். தாகமான அந்நிலையிலும் விசிலுக்குக் கீழ்ப்படிந்து எந்தக் குதிரை வருகிறதோ அதுவே மன்னனின் குதிரையாகத் தேர்ந்தெடுக்கப்படும்.

ஆதாரம்: பல்சுவை துணுக்குள் என்ற நூல்.

தகவல்: **மலர் சூர்யா, வில்லியனூர்.**

ஒரு மனிதன் ஒரு நாளில் 25920 தடவைகளுக்குக் குறையாமல் சுவாசிக்கிறான். இப்படி அவன் சுவாசிக்கும் காற்றின் எடை சுமார் முப்பத்தைந்து பவுண்டுகளாகும். தினந்தோறும் ஒரு பவுண்டு எடையுள்ள பிராணவாயுவை மனிதன் உட்கொள்கிறான்.

– எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி.

யானைக் குட்டிகளுக்கு அதைப் பெற்ற தாய் மட்டும் பால் கொடுப்பதில்லை. கூட்டத்தில் உள்ள மற்ற பெண் யானைகளும் பால் கொடுக்கும். குட்டி, எதிர்ப்படும் எந்தப் பெண் யானையிடமும் பால் குடிக்கும்.

– கே. விஜயலட்சுமி,
வேளாந்தாங்கல்,
வந்தவாசி வட்டம்.

ரயிலில் அருங்காட்சியகம்!





ஆகாய விமானம் கண்டுபிடிப்பதற்கு முன்பு ஆகாயக் கப்பல் தான் பயன்பட்டு வந்தது. காற்றை விட லேசான ஹைட்ரஜன், ஹீலியம் போன்ற வாயுக்களை பலூன்களில் நிரப்பி பறக்க விட்டனர். இந்தப் பலூன்களில் மனிதர்களும் ஏறி பறந்து சென்றனர். இவை எளிதில் தீப்பற்றி எரிந்து விடும் தன்மை உடையது. அதனால், இக்கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சி அடையவில்லை.

– ஏ.எல். பாத்திமா,
காரைக்கால் – 609 602.





உலகில் உள்ள பள்ளி வாசல்களி





லேயே மிகவும் உயரமானது மொராக்கோ நாட்டில் உள்ள காஸ பினாங்கா என்ற இடத்தில் அமைந்துள்ள கிரேட் ஹசன் என்ற பள்ளி வாசல்தான். சுமார் 700 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது இப்பள்ளி வாசல். கோபுரத்தின் உயரம் 57 அடி. இதனை மன்னர் ஹுஸைன் கட்டி முடித்தார்.

– டி. அஹமது இப்ராஹீம்
ஜின்னா,
அபிவிர்த்திஸ்வரம்,
திருவாரூர் மாவட்டம்.

“ராணி கஞ்ச்' என்னுமிடத்தைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி அஜய்குமார் என்பவர். சாவிக் கொத்தில் இணைக்கக் கூடிய உலகத்திலேயே மிகச் சிறிய காலண்டரை உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளார். இந்தக் காலண்டரின் மூலம்

5,000 வருடத்திற்குண்டான நாள், கிழமைகளைப் பார்த்துக் கொள்ளலாம். இந்த வட்ட வடிவ காலண்டரின் அமைப்பு லீப் வருஷங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது!

– ஆர். சுமதி,
நாமகிரிப் பேட்டை.

உலக சுற்றுச் சூழல் நாள் வருடந்தோறும் ஜூன் 5ம் நாள் அனுசரிக்கப்படுகிறது. இதன் முதல் கூட்டம் சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் 1972ல் நடந்தது. உலக நாடுகள் பல கலந்து கொண்ட இம் மாநாட்டில்தான் சுற்றுப்புறச் சூழ்நிலை கேடுகளால் மனிதருக்கு ஏற்படும் இன்னல்களைப் போக்க வழிவகை செய்வதற்காக உலக நாடுகள் உறுதி மொழி எடுத்துக் கொண்டன. இந்நாளைத் தான் சுற்றுச் சூழல் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

– மலர் சூர்யா,
வில்லியனூர்.

ஜூலியஸ் சீசரின் காலத்தில் உப்பு சம்பளமாக ரோமப் பேரரசில் வழங்கப்பட்டது. சால் என்னும் உப்பின் லத்தீன் வார்த்தையிலிருந்து சேலரி என சம்பளத்திற்கான ஆங்கில வார்த்தை உருவானது. பால்டிக் கடல்தான் உலகிலேயே மிகக் குறைந்த அளவு உப்பு உடைய கடல்.

– எஸ். சபிதா,
நான்காம் வகுப்பு, ஆர்.சி.
நடுநிலைப் பள்ளி,
ரத்தினபுரம், தூத்துக்குடி.

கிரிக்கெட் விளையாட்டில் தொடர்ந்து வீசும் மூன்று பந்துகளில் மூன்று பேரை அவுட் ஆக்கினால் அதை 'ஹாட் ரிக்' என்பார்கள். இது உங்களுக்குத் தெரியும்.

1858ல் இங்கிலாந்தில் உள்ள ஷெப்பீல்டில் நடைபெற்ற பந்தயத்தில் ஹீத்ஃபீல்ட் ஸ்டீபன்சன் என்பவர் முதன்




முதலாக இச் சாதனையை நிகழ்த்தினார். இதைப் பாராட்டி அவருக்கு ஒரு தொப்பியைப் பரிசாக அளித்தார்கள். அதுமுதல் தான் ஹாட்ரிக் என்று அழைக்கும் பழக்கம் வந்தது.




– ஆர். ஆர். பூபதி,
திண்டுக்கல்.



‘சகாரா பாலைவன ரொட்டி’ என்று செல்லமாக அழைக்கப்படும் பேரிச்சம்பழம், பழமாகவும் உலர்ந்ததுமாக இரு வகையில் கிடைக்கின்





றது. 70 சதவீதம் சர்க்கரைப் பொருள் கொண்ட இப் பழம் புளித்துப் போகும் தன்மை கொண்டது. இதனை வெயிலில் உலர்த்திப் பக்குவப்படுத்துவார்கள். இப்பழம் உலர்ந்தால் ‘கர்ஜூர்’ என்று அழைக்கப்படுகிறது. இப்பழம் சூரிய சக்தியை ஈர்க்கும் ஆற்றல் உடையது. சர்க்கரைச் சத்து இதில் இருப்பதால் சாப்பிட்டவுடன் இரத்தத்தில் சேரும் தன்மை இதில் ஏராளமாக உண்டு.

– சு. இலக்குமணசுவாமி,
திருநகர்,
மதுரை.

கனடா நாடு, ரயிலிலேயே அருங்காட்சியகத்தை அமைத்துள்ளது. இதில் மொத்தம் 15 பெட்டிகள், 1200 சரித்திரப் புகழ் பெற்ற கலைப்பொருட்கள், ஓவியங்கள், சமூகம், பொருளாதாரம், தொழில் துறை, அரசியல் என எல்லாத் துறைகளும் பங்கு பெற்றுள்ளன. மின்னணுவியல் துறையில் அந்நாட்டின் முன்னேற்றத்தை பறைசாற்றும் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. 1978ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் லிங்ஸ்டனிலிருந்து தன் பயணத்தைத் தொடங்கிய இது 22 ஆண்டுகளாகத் தன் பணியை விடாமல் செய்து வருகிறது.

ஆதாரம்: அறிவியல் பூங்கா.

– க. விவேக்,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ விஸ்வபாரதி மெட்ரிகுலேஷன் பள்ளி,
தருமபுரி.

சுரங்கம் வெட்டுபவர்கள் தங்கம் என்று எண்ணி வெட்டிச் சுத்தம் செய்து பார்க்கும் போது பல சமயங்களில் ஏமாந்திருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் தங்கம் என்று எண்ணியது, உண்மையில் இரும்பு பைரைட்டு என்னும் தாதுப் பொருளாகும். இது தங்கம் போலவே பளபளப்பாக இருக்கும். பலரும் ஏமாந்து விடுவார்கள். இதனால் இதற்கு முட்டாள் தங்கம் என்று பெயர்.

உடம்பில் புள்ளிகளுடைய கழுதைப் புலிக்குச் சிரிக்கும் கழுதைப் புலி என்று பெயர். இரவில் உணவைத்தேடி அலையும்போது குரலெழுப்பும். இது சிலவேளைகளில் சிரிப்பொலி போல் கேட்கும்.

ஆதாரம்: அறிவியல் 1000 தொகுதி.

– வே. அவந்திகா,
பொ.வெ.க.நா.
மேல்நிலைப் பள்ளி,
பொங்கலூர்.



உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

அதோ மான்; இதோ சாம்பார்!



காரைக்குடி தெரியுமா என்றால் எல்லோருமே 'ஓ' என்பார்கள் - நாங்கள் சென்றது கார்குடி. முதுமலை வனவிலங்கு சரணாலயத்திலிருந்து மூன்று கி.மீ தொலைவில் அழகான, அடர்ந்த வனப் பகுதி. இங்கே என்னைப் போன்ற வனவிலங்குப் பிரியர்கள் தங்குவதற்கென்று விடுதி அமைத்துக் கொடுத்திருக்கிறது வனத்துறை. வெளியே தேக்கு மரத்தில் தாவும் ராட்சத அணில்; மேயும் காட்டுப் பன்றி; எங்கள் குழுவின் பேச்சொலியை மீறி கேட்கும் வனப் பிரதேச சங்கீதம்...

'ஆவிஷ்கார் - இந்தியா' என்ற வனவியல் ஆர்வல அமைப்பும் வோர்ல்ட் வைல்ட் லைஃப் ஃபண்டும் இணைந்து ஏற்பாடு செய்த அந்த நான்கு நாள் கானக விருந்தில் காட்டுப் பகுதியை அணுஅணுவாய் ஆராய்ந்து வியக்கவும் ரசிக்கவும் கற்றுக் கொண்டோம்.

காலை ஐந்தரை மணிக்கு எழுந்து காட்டுக்குள் நடை! பறவைகளைப் பார்ப்பதற்கு ஏற்ற நேரம் அதுதான். தலா பத்துப் பதினைந்து வகை பறவைகளைப் பார்த்துக் குறிப்பெடுத்துக் கொண்டு தகவல் பரிமாறிக் கொள்ள முடிந்தது.

புள்ளி மான்கள், காட்டுக் கோழிகள், எங்களுடன் வந்த விலங்கியல் நிபுணர் பிரெஸ்டன் மிகுந்த சினேகத்துடன் தூக்கிக் கையில் பிடித்துக் கொண்ட பச்சைப் பாம்பு, பாறைகளின் இடுக்குகளில் குடித்தனம் செய்து கொண்டிருந்த தவளை, அரணை, பூச்சி இனங்கள் என்று கார்குடி உயிர்த்துடிப்புடன் இருந்தது.

ஒரு குறுகிய பாதையைக் கடந்து திரும்புகையில் மான் கூட்டத்தை சிறுத்தை ஒன்று துரத்திச் சென்றதற்கான அடையாளத் தடங்களைக் காட்டினார் பிரெஸ்டன்.

காட்டுக்குள் நடக்கும்போது வலமும் இடமும் பார்த்து அதோ மான் இதோ சாம்பார் (இதுவும் ஒருவகை மான்தான்) என்று வியந்துகொண்டிருந்தால் போதாது. காலடியில் கிடக்கும் சாணம்கூட பாடம் சொல்லித்தரும். புலியின் சாணத்தை ஆராய்ந்து, சாம்பார் மானை அது வீழ்த்திச் சாப்பிட்டிருக்கிறது என்று கற்றுத் தந்தார் பிரெஸ்டன்.



வலிமையும் திண்மையும் பொருந்திய காட்டெருமைக் கூட்டத்தினிடையே ஓர் இளம் கன்றுக்குட்டி! தூரத்தில் மெள்ள ஆடி அசைந்தபடி நகர்ந்த யானைக் கூட்டம். உள்ளத்தை உலுக்கும் மயிலின் ஒய்யாரமான அகவல், மோயாறு நதிக்கரையில் தேடியபோது கண்ணில் படாமல் டிமிக்கி கொடுத்த முதலைகள், நள்ளிரவில் ரத்தம் உறையச் செய்த சிறுத்தையின் தூரத்து உறுமல் என்று மறக்க முடியாத காட்சிகளையும் நினைவுகளையும் சுமந்து சென்னை திரும்பினோம்.

காட்டில் அலைந்த நேரம் போக மற்ற சமயத்தில் க்விஸ், போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கினார்கள். ஆனால் அனைத்திலும் பெரிய பரிசு அந்த நான்கு நாள் கார்குடி அனுபவமேதான்!

— கே.என்.பாலசுப்ரமணியம்,
பத்தாம் வகுப்பு, சென்னை.

கோபம் கொண்ட அலைகள்!

நாங்கள் படிப்பது திருவனந்தபுரத்தில். வார விடுமுறைக்கே சொந்த ஊரான இரணியலுக்குச் சென்று விடுவோம். அதேபோல் தான் இந்தக் கோடை விடுமுறைக்கும் போய்ச் சேர்ந்தோம். தினமும் காலை நான்கு மணிக்கு எழுந்து கண்ணாட்டி விளை என்ற ஊர் நீச்சல் குளத்திற்கு மாமாவுடன் செல்வோம். பதினைந்தே நாட்களில் நானும் என் தங்கையும் நீச்சல் கற்றுக் கொண்டோம். நீச்சல் ரொம்ப சுவாரசியமானது. பகல் நேரங்களில் கம்ப்யூட்டர் வகுப்புகள். மாலையில் சைக்கிள் ஓட்டுதல், விளையாட்டுகள் என பொழுது ஓடிப் போனதே தெரியவில்லை.

எங்கள் ஊர் கடற்கரையில் நின்று ரசித்தால் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழியும். கடற்கரையில் மணலில் வீடுகட்டுவோம். கோபம் கொண்ட அலைகள்





பொங்கி வந்து நொடியில் அடிச்சிட்டுப் போய் விடும். எல்லா விடுமுறைகளையும் இங்கு கழித்தாலும் ஒவ்வொரு முறை வரும் போதும் ஏதோ புது ஊருக்கு வருகிற மாதிரி தோன்றுவதற்கு விதவிதமான அனுபவங்கள் கிடைப்பதுதான் காரணம்!

ஆர். சிவபெருமான்.
இரணியல்,
குமரி மாவட்டம்.

குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. மென்மையான காற்று (4)
2. பெருங்கடல்களில் ஒன்று (4)
6. பாடல் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
12. ஆற்றின் குறுக்கே இதைக்கட்டி நீரைச் சேமித்து வைப்பர் (2)
14. இரவில் பறந்து திரியும் ஒளி வீசும் பூச்சி (4)


வலமிருந்து இடம்

3. மலைகளில் காணப்படும் சிறிய நீர் ஊற்று (2)
5. பறக்க இயலாத பறவைகளில் ஒன்று (2)
8. மக்கள் என்பதை இப்படியும் கூறலாம் (4)
9. வீடுகளில் திரிதிரியாகத் தொங்கும் தூசி (4)
10. உயிர் (3)
11. தந்திரமான விலங்கு (2)
15. கல்லூரி படிப்பு முடித்ததும் இது கிடைக்கும் (4)

மேலிருந்து கீழ்

1. ஓலைகளோடு கூடிய மட்டைகளே கிளைகளாகக் கொண்ட மரம் (3)
2. கிரிக்குப் பாம்பு ____________ (2)
7. வெயில் மற்றும் மழையிலிருந்து இது நம்மைக் காக்கும் (2)
8. இன்று சுற்றுச்சூழல் பெருமளவில் ____________ பட்டுள்ளது.
11. கழுகு இரையைப் பிடிக்க அலகுடன் இதையும் பயன்படுத்தும் (3)
13. மார்கழி மாதம் இது அதிகம் பொழியும் (2)





கீழிருந்து மேல்

4. இந்தப் பிராணியைக் காதைப் பிடித்துத் தூக்க வேண்டும் (3)
9. இந்த ஆண்டு சிட்னியில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன (5)
14. பர்மாவின் தற்போதைய பெயர் (5)
15. பெருமளவில் கால்நடைகள் வளர்க்கப்படும் இடம் (3)

— தி. பிரசன்னா, பதினோராம் வகுப்பு,
எஸ்.டி.ஹெச் உயர்நிலைப் பள்ளி,
மதுரை.

விடை 57 ம் பக்கம்

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெறும் முதல் கதை

சாதனை நண்பர்கள்!

அ. கங்காதரன்



கண்ணாடியின் முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்த ராகுலின் காதுகளில், சமைய லறையிலிருந்து வந்த அம்மாவின் குரல் விழுந் தது.

''காலையிலிருந்து அப்படி எங்கே அவ சரமா கிளம்பிக்கிட்டு இருக்கே?''

அவசரமாக சாப்பாட்டு மேஜையின் முன் வந்து அமர்ந்தான் ராகுல்.

''சீக்கிரம் சாப்பாடு வைங்கம்மா. டைம் ஆச்சு!''

''அதான் எங்கேன்னு கேட்கிறேன்?''

''நேத்திக்கே சொன் னேனே! இன்னிக்கு மேட்ச் இருக்குன்னு''

அப்பாவும் அங்கே வந் தார்.

''பாருங்க இவனை. சனி, ஞாயிறு ஆனால் காலைல பேட்டைத் தூக்கிட்டுக் கிளம்பிடறான். திரும்பி வருவதற்கு சாயங்காலம் ஆயிடுது. மத்தியானம் சாப்பிட றது கூட இடையாது. நான் சொன்னா காது கொடுத்து கேட்கறது இல்லை. நீங்களாவது கண்டிச்சு வைங்க''

''என்ன பிரச்னை ராகுல்?''

மூக்குக் கண்ணாடியை கழற்றியபடி ராகுலின் அருகில் அமர்ந்தார். அவன் அவ ருக்கு பதில் சொல்வதை விடவும் அவசர அவ சரமாகச் சாப்பிட ஆரம்பித்தான்.

''அப்பா ப்ளீஸ். இன்னிக்கு முக்கியமான மேட்ச். நேத்தே ஹோம்வொர்க் எல்லாம் முடிச் சுட்டேன். தயவு செஞ்சு போகவிடுங்கப்பா''

அப்பா ஏதோ சொல்ல நினைத்தார். ஆனால் அவ னது அவசரமும் ஆர்வமும் அவரைத் தடுத்து விட்டன.

"சரி. போய்ட்டு சீக்கிரம் வந்துடு"

அவன் நன்றி சொல்லிவிட்டு நிமிடத்தில் பறந்துபோனான்.


இரவு.

மறுநாள் பள்ளிக்குத் தேவையான புத்தகங்கள் அனைத்தையும் பையில் எடுத்து வைத்துவிட்டு, படுக்கைக்கு வந்தான் ராகுல். அப்பா ஏதோ படித்துக் கொண்டிருந்தார். அருகில் வந்து படுத்தவன். "குட் நைட்ப்பா" என்றான்.

"ஒரு நிமிஷம் ராகுல். உங்கிட்ட கொஞ்சம் பேசணும்"

ஆச்சரியத்துடன் எழுந்து உட்கார்ந்தான். என்னவாயிருக்கும் ஆர்வம் கண்களில் கொப்பளித்தது.

"இன்னிக்கு மேட்ச் எப்படியிருந்தது ராகுல்?"



"சூப்பர்ப்பா. ரொம்ப விறுவிறுப்பா இருந்தது. ஆனால் நாங்கதான் தோத்துட்டோம். ஜஸ்ட் ஏழே ரன்தான் தேவை"

"பரவாயில்லை. நீ கூட இப்ப நல்லா கிரிக்கெட் விளையாடறியாமே. அன்னிக்கு உங்க பி.ஈ.டி மாஸ்டர் சொன்னார்"

ராகுலின் கண்கள் மின்னின. லேசாக வெட்கப்பட்டுக் கொண்டே அப்பாவின் மீது சாய்ந்தான்.

"அதுசரி, உங்க க்ரூப்லே எத்தனை பேர்?"

"நம்ம காலனியில உள்ள எல்லோரும். இருபத்தியஞ்சு பேர் இருக்கோம். ரெண்டு கிரிக்கெட் டீம். ஒவ்வொரு சனி, ஞாயிறும் மேட்ச். கிரிக்கெட் மட்டும் இல்லை. இன்னும் நிறைய கேம்ஸ் இருக்கு"

மிகவும் சந்தோஷமாக அவன் விவரித்தான்.

"ஒவ்வொரு வாரமும் இப்படி எல்லோரும் சேர்ந்து விளையாடுறீங்க சரி. ஆனால் காலையிலிருந்து மாலை வரைக்கும் விளையாடினா உடம்பு கெட்டுப் போகாதா? படிப்பு பாதிக்காதா ராகுல்?"

இதைக் கேட்டதும் ராகுலுக்கு எரிச்சல் வந்தது. அப்பா எதைச் சொல்லப் போகிறார் என்பதைப் புரிந்து கொண்டான்.

"அப்படியெல்லாம் இல்லை. நாங்க கரெக்டா படிச்சு முடிச்சுட்டுத்தான் விளையாடப் போவோம்" என்றான் தொய்வுடன்.

"நோ! நோ! நீங்க விளையாடக் கூடாதுன்னு நான் சொல்லலை. ஆனால் ஏன் ரெண்டு முழு நாளை வீணடிக்கணும்னு கேட்கறேன். அதுக்குப் பதிலா வேற ஏதாவது உபயோகமா பண்ணலாம் இல்லையா?"

ராகுல் வியப்புடன் அப்பாவைப் பார்த்தான்.

"வேற என்ன பண்ணலாம்?" அவன் குரலில் எதிர்பார்ப்பு இருந்தது.

"நீங்க 25 பேர் ஒற்றுமையா இருக்கீங்க. இதை நாட்டுக்கு உபயோகமா பயன்படுத்தலாம். உதாரணமா, இப்ப குஜராத், ராஜஸ்தானில் வறட்சியால நிறைய பாதிக்கப்பட்டிருக்காங்க தெரியுமா ராகுல்?"

தெரியும் என்பதுபோல தலையசைத்தான்.

"அதுக்கு நீங்க நிதி வசூல் பண்ணி, உங்க ஸ்கூல் மூலமா அனுப்பலாமே! அதுக்கப்புறம், மாதத்தில் ஒரு சனி, ஞாயிறு பக்கத்து சேரிப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரலாம். நம்ம ஊருக்குள்ளே மரங்கள் நடலாம். ஹெப்படைட்டிஸ், போலியோ

சொட்டு மருந்து போட்டுக்க படிக்காதவங்க நிறைஞ்ச ஏரியாவுல பிரச்சாரம் பண்ணலாம். என்ன சரியா?"

"நல்ல ஐடியாப்பா. செய்யறோம்"

அவனுக்கு அப்பாவின் யோசனை பிடித்திருந்தது. ஆனால் 'அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டுமே!' என்ற கவலையும் இருந்தது.

முதலில், சீக்கிரமாக யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. விளையாட்டை இரண்டு வாரங்கள் விடுவதில் பலருக்கு உடன்பாடில்லை. ஆனால் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் சரவணன் - அவன்தான் இருப்பதில் பெரியவன் - அனைவரிடமும் பேசி சம்மதிக்கச் செய்தான்.

"முதலில் நிதி வசூல் செய்வோம். சரிப்பட்டா தொடர்ந்து செய்வோம். இல்லேன்னா விட்டுடுவோம்" என்றான் சரவணன்.

முழு மனதுடன் சிலரும் அரை மனதுடன் சிலரும் இணைந்தனர். அவர்களின் குழுவிற்கு 'ப்ரெண்ட்ஸ் டீம்' என்று புதிதாய்ப் பெயர் சூட்டினார்கள்.

அடுத்து வந்த சனிக்கிழமை எல்லோரும் வசூலுக்குப் புறப்பட்டனர்.

ஆர்வத்துடன் போனவர்கள் கூட, சாயங்காலம் சோர்ந்து போய் வந்தனர்.

"கொஞ்சமாத்தான் கலெக்ஷன் ஆச்சு. யாருமே பணம் தரலை. இதே வேலையான்னு சிலர் எரிஞ்சு விழுறாங்க"


ஐநூறு ரூபாய் அளவுதான் வசூலாகியிருந்தது. முடிவெடுக்க முடியாமல், நாளை காலை பார்த்துக் கொள்ளலாம் என கலைந்து சென்றனர்.

ராகுல் நடந்த விஷயங்களை அன்று இரவு அப்பாவிடம் விவரித்தான். அவர்களின் பொறுப்புணர்வு அவருக்கு மகிழ்ச்சி அளித்தது.

"ராகுல், எல்லோரும் ஒரே நேரத்துல - ஒரே இடமா போனது தவறு. மொத்தமா உள்ளவங்களை ஐந்து டீமா பிரிச்சுக்கங்க. ஐந்து டீமும் நம்ம ஊரில் ஐந்து இடங்களைச் சுற்றிவாங்க. காலைல ஒரு இடம். சாயங்காலம் ஒரு இடம். ஒரு தடவை கேட்டுட்டு விட்டுடாதீங்க. திரும்ப திரும்ப முயற்சி பண்ணுங்க. கண்டிப்பா சக்ஸஸ் ஆகும். ஏன்னா நீங்க பிறருக்காக கஷ்டப்படறீங்க" என்றார் அப்பா.

அப்பாவின் அறிவுரை சிறப்பாகச் செயல்பட்டது.

ஐந்து குழுக்களாகப் பிரிந்து கொண்டு அவர்கள் நடத்திய வசூல் வேட்டை மனமில்லாதவரையும் கொடுக்க வைத்தது. குஜராத்தில் குழந்தைகள் படும் அவலங்



"பக்கத்து நாட்டில் பஞ்சம் தலை விரித்து ஆடுகிறது."

"ஏன் ரிப்பன் கட்டவில்லையா?

– இராஜவேல்

களைப் பற்றி அவர்கள் கூறி, உதவி கோரிய போது எவருக்குமே மறுக்கும் எண்ணம் வரவில்லை.

நாளுக்கு நாள் அவர்களின் ஆர்வமும் வேகமும் அதிகமானது. அதே சமயம் படிப்பும் கெட்டுவிடாதபடி ஜாக்கிரதையாக இருந்தனர்.

ஒரே மாதத்தில் உள்ளூர் வெளியூர் என செய்த வசூல் கிட்டத்தட்ட ஐம்பதாயிரத்தைத் தொட்டிருந்தது. ஊரிலுள்ள ஒவ்வொருவரிடமும் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் வாங்கியிருந்தனர்.

ஞாயிறு மாலை.

அனைவரும் சந்தோஷமாகக் கூடினர்.

"நீங்க எல்லாம் கஷ்டப்பட்டு உழைச்சதுக்கு நன்றி!" என்றான் சரவணன்.

"நன்றி எல்லாம் ராகுலுக்குத்தான். அவன்தானே இந்த ஐடியாவை கொடுத்தது" என்றான் ஒருவன்.

மறுநாள் காலை அவர்கள் அதனை பள்ளி தலைமையாசிரியரிடம் கொடுத்தனர். அவரோ விக்கித்துப் போய் விட்டார். அவர்களின் சாதனையைப் பாராட்டி ஒற்றுமைக்கும் பொறுப்புணர்வுக்கும் நன்றி சொல்லி காலை ப்ரேயரில் பேசினார்.

பள்ளிக்கூடமெங்கும் இதே பேச்சு!

அடுத்த நாள் பேப்பரிலும் இந்தச் செய்தியை வெளியிடும்படி செய்தார் தலைமை ஆசிரியர். அதோடு மட்டுமல்லாமல், இத்தகைய பொறுப்பும் கடமையுணர்வும் ஒவ்வொரு இந்திய மாணவனுக்கும் இருந்தால் வருங்காலம் சிறக்கும் என இவர்கள் பணியை ஒரு செய்திக் கட்டுரையாய் எழுதி அனுப்பினார்.

இத்தனைக்கும் காரணம் ராகுல்தான் என அவனை அனைவரும் பாராட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் அவனோ, ஒவ்வொருமுறை புகழப்படும்போதும் மானசீகமாக அப்பாவுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தான்.


திருந்திய ஹாசிம்!
வேணுவாரியத்
ஃபைசால் மிகவும் நல்லவர். மர வியாபாரம் செய்து வந்தார். அவருக்குப் பக்கத்து வீட்டில் ஹாசிம் என்ற ஏழை வசித்து வந்தான். ஹாசிமை யாருக்கும் பிடிக்காது.
ஹாசிம், இந்த மரக் கட்டைகளை விறகாகப் யன்படுத்தித் கொள்!
ரொம்ப நன்றி ஃபைசால்!
ஃபைசால் நிறைய உதவிகளைச் செய்தாலும் ஹாசிம் அவருக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருப்பான்.
இந்த உடைந்த பாட்டிலை அவன் தோட்டத்திற்குள் எறியறேன்.
ஹாசிமின் குணத்தை நன்கு அறிந்த ஃபைசால் எதையும் கண்டு கொள்வதில்லை.
இந்தா ஹாசிம் பேரிச்சம் பழங்கள்.
ரொம்ப சுவையா இருக்கு. இன்னும் கொஞ்சம் தர்றியா?
வேணும்கிறதை எடுத்துக் கொள்.



ஒரு நாள் அவ்வழியே கழுதை ஒன்று வந்தது. ஹாசிம் கழுதையை ஃபைசால் வீட்டிற்கு அனுப்பினான்.
உனக்குத் தேவையான உணவைச் சாப்பிட்ட பிறகு திரும்பி வா.
வெளியே சென்றிருந்த ஃபைசால் திரும்பி வந்து பார்க்கும்போது செடியில் இலைகளே இல்லை. பக்கத்து வீட்டுக்காரர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.
இவன் உங்க வீட்டுக்குள் கழுதையை விட்டுட்டான்.
இது ஹாசிமின் வேலை தான்!
ஹாசிம் இவ்வளவு மோசமானவனாக இருந்தும் நீங்கள் ஏன் உதவுறீங்க?
நண்பர்களே, கஷ்டப்படுபவர்களைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கக் கூடாது. நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யணும்.
மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதை ஹாசிமும் ஒரு நாள் தவறு என்று உணர்வான். அதுவரைக்கும் பொறுமையாக இருக்கணும்.
ஃபைசால் பேசியதைக் கேட்ட ஹாசிம் வெட்கப்பட்டான். அன்றிலிருந்து பிறர் நேசிக்கும்படி நல்லவனாக வாழ்ந்தான்.
saifeatures


எங்கள் பள்ளியில் நடந்தது



எங்களுக்கு கணிப்பொறி பாடம் புதிதாக ஆரம்பித்திருந்தார்கள். முதல் நாள் ஒவ்வொருவரும் கணிப்பொறியைப் பற்றி தாங்கள் அறிந்ததை ஆசிரியரிடம் கூறி விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவன் மவுஸ் பற்றிக் கேட்டான். ''இது கணிப் பொறியில் பொருத்தப்பட்டிருக்கும். கீ போர்டு செய்யும் வேலையை மவுஸ் நிறைய செய்கிறது. மவுஸ் மூலம் படம் வரையலாம்...'' என்று பாதியில் நிறுத்தினார். கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த மாணவனை எழுப்பி ''மவுஸ் என்ன செய்யும்?'' என்று கேட்டார் ஆசிரியர். உடனே அவன் ''பூனையைப் பார்த்து பயந்து ஓடும், நெல்லைக் கொறிக்கும்'' என்றான். ஆசிரியருக்குக் கோபம் வந்ததே பார்க்கலாம்!

– ஏ.எஸ். பாத்திமா,
காரைக்கால்.





வெளியில் போடவும்!

எங்கள் வகுப்பில் கிருஷ்ணன் என்ற மாணவன் இருந்தான். அவனை நாங்கள் கிட்டு என்றுதான் அழைப்போம். முழு ஆண்டுத் தேர்வு நடந்து கொண்டிருந்தது. தேர்வு அறையில் ஆசிரியர் நுழைந்ததும் ''பிட்டு, கிட்டு இருந்தால் வெளியே போட்டுடுங்க'' என்றார். எல்லோரும் அமைதியாக உட்கார்ந்திருக்க என் குறும்புக்கார நண்பன் எழுந்து ''பிட்டு இங்கே இல்லை சார். கிட்டு மட்டும்தான் இருக்கான். அவனை வெளியில் தள்ளிடவா சார்?'' என்றான். பரீட்சை அறை என்பதை மறந்து அனைவரும் சிரித்து விட்டோம். கிட்டு கோபப் பார்வை பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

– ஆர். பாலமுரளி,
தாரமங்கலம்,
சேலம் மாவட்டம்.

கடி!

எங்களுக்கு ஓவிய வகுப்பு என்றால் மிகவும் கொண்டாட்டமாக இருக்கும். காரணம் ஓவிய ஆசிரியர் சிரிக்கும்படி நகைச்சுவையாகப் பேசுவதுதான்! ஒரு நாள் ஓவிய வகுப்பில் ஆசிரியர் ''ஆளுக்கொரு கடி ஜோக் சொல்லுங்கள்'' என்றார். ஒவ்வொருவரும் ஒரு ஜோக் சொல்லிக் கொண்டு வந்தார்கள். குமார் என்ற மாணவனின் முறை வந்தது. அவன் அமைதியாக நின்றான். ஆசிரியர் அவனிடம் ''நீயும் ஒரு கடி கடிச்சிட்டு உட்கார்'' என்றார். ''ஒரு வாரமா பல் ஆடிக்கிட்டு இருக்கு. ரொம்ப வலிக்குது. அதனால் என்னால கடிக்க முடியாது சார்'' என்றான் மெதுவாக. ''பல் ஆடுவதால் கடிக்க முடியலையா? இதுவே ஒரு கடிதான் உட்கார்'' என்றார் ஆசிரியர்.


– அ. சரவணகுமார்,
புதுச்சத்திரம், நாமக்கல் தாலுகா.


பாட, ஆட முடியாது!

எங்கள் தமிழாசிரியர் பள்ளி ஆண்டு விழாவிற்குப் பாடல், நடனம், நாடகம் என சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு மாணவனுக்கு நடனம் சரியாக வரவில்லை. அவனைப் பாடச் சொன்னார். "எனக்குப் பாட வராது சார்" என்றான் அவன். "ஆடவும் முடியாமல் பாடவும் முடியாமல் இருந்தால் என்ன செய்யறது?" என்றார் ஆசிரியர். உடனே அவன் "நாடகத்தில் எனக்கு ஊமை வேஷம் இருந்தால் கொடுங்க சார்?" என்றானே பார்க்கலாம்! எல்லோரும் சிரித்து விட்டோம்.

– ஆர். பாலகுமார்,
செம்பனார் கோவில்.







உனக்காக நான்...

நான் ரெக்கார்டு நோட்டில் படம் வரைந்து கொண்டிருந்தேன். என் தோழி புத்தகத்தைப் பார்க்காமல் எழுதிப் பார்த்த கேள்வி பதிலைக் கொடுத்து "திருத்திக் கொடு" என்றாள். "நான் வரையணுமே" என்றேன். அவள் "நான் வரைகிறேன். நீ திருத்து" என்றாள். மறுநாள் நான் எழுதிப் பார்த்த கேள்வி பதிலுடன் அவளிடம் சென்றேன். அவள் படித்துக் கொண்டிருந்தாள். நான் திருத்தித் தரச் சொன்னேன். அவள் "படிக்கணுமே" என்றாள். நான் சற்றும் யோசிக்காமல் "உனக்குப் பதில் நான் படிக்கிறேன். நீ திருத்து" என்றேன். தோழி ஒரு நொடி திகைத்து விட்டுச் சிரித்தாள்.

– சு. சரண்யா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

நன்றி

தமிழ் ஆசிரியர் திருக்குறள் நடத்திக் கொண்டிருந்தார். அதில் 'காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மானப் பெரிது' என்ற குறளைக் கூறி அதற்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது கடைசி இருக்கையில் பேசிக் கொண்டிருந்த ஒரு மாணவனை எழுப்பி, குறளுக்கான விளக்கத்தைக் கூறுமாறு சொன்னார். அந்த மாணவன், "தேர்வு என்ற ஆபத்தான சூழ்நிலையில் பாஸ் மார்க் என்ற உதவி செய்தீர்களென்றால் அதுவே இந்த உலகத்தை விட பெரியது" என்றவுடன் வகுப்பறையே சிரிப்பலையில் நனைந்தது. ஆசிரியரும் எங்களோடு சேர்ந்து சிரித்து விட்டார்!

– தே இளங்குமரன்,
திருப்பத்தூர்.

சிங்கத்தைக் காட்டு ராஜா என்று அழைக்கிறோம். ஆனால் அந்த சிங்கத்தை விடவும் உடல் எடையும் வலிமையும் கொண்ட விலங்கு புலி!

நாம் வீட்டில் பாலூட்டி வளர்க்கும் பூனையின் குடும்பத்தைச் சேர்ந்தது புலியென்றால் வியப்பாகத்தானே



புலி உறுமுவது

இருக்கிறது?

ஆசியா கண்டத்திற்கே உரிய விலங்கு புலி. பசுமையான காடுகள், உலர்ந்த மேய்ச்சல் நிலங்கள் மற்றும் சதுப்பு நிலப் பகுதிகளில் வாழ்கின்றன. இந்தியாவில் ராஜபுதன பாலைவனம், பஞ்சாப், கச்சு, சிந்து ஆகிய பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் வாழ்கின்றன புலிகள். கங்கை, பிரமபுத்திரா டெல்ட்டா பகுதிகளில் நீரிலும் புலிகள் வாழ்கின்றன. நன்றாக நீந்தவும் செய்கின்றன. குளிர்ப் பிரதேசங்களில் வாழும் புலிகளின் தோல் குளிரைத் தாங்குவதற்கு ஏற்றவாறு தடித்த முடியுடன் காணப்படுகிறது.

தலை, உடல், கை, கால்கள், வால் ஆகிய பகுதிகளில் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் இருக்கும். இந்நிறத்திற்கு நடுவே கறுப்பு நிறப்பட்டைகள் அழகாக வீற்றிருக்கும். இந்தக் கோடுகள் ஒவ்வொரு புலிக்கும் வித்தியாசப்படும். உடலின் அடிப்பகுதி, கால்களின் உட்பக்கம், கன்னம் மற்றும் கண்ணுக்கு மேலும் வெண்மையான புள்ளிகள் இருக்கும்.

ஆண்புலி 10 அடி நீளம் இருக்கும். பெண் புலி சற்றுச் சிறியது. எடையிலும் பெண்புலி குறைவாக இருக்கும். புலி சராசரியாக 30 ஆண்டுகள் உயிர் வாழும்.

தெற்கு ஆசியப் பகுதிகள் போன்ற வெப்பப் பகுதிகளில் வாழும் புலிகளுக்கு முடி குட்டையாகவும் வழுவழுப்பாகவும் இருக்கும். நிறமும் பிரகாசமாகவும் தெளிவாகவும் காட்சி தரும். சீனாவின் வட பகுதி, சைபீரியா போன்ற பகுதிகளில் வாழ்வனவற்றின் முடி நீளமாகவும் நிறம் சற்று வெளுப்பாகவும் இருக்கும். புலிகளில் எட்டு இனங்கள் உள்ளன.





... ஏன்?

எஸ். சுஜாதா


சூரியன் மறையும் நேரத்திலிருந்து உதிக்கும் நேரம் வரை அலைந்து திரிந்து வேட்டையாடும். பகலில் குளிர்ச்சியான, மழை நேரங்களில் தன் இருப்பிடத்தை விட்டு வருவதும் உண்டு. மரங்கள், புதர்ச் செடிகளால் சூழப்பட்ட பாதுகாப்பான இடத்தைத் தனது வீடாக்கிக் கொள்ளும் புலி.


புலிகளுக்கு உணவில் வஞ்சனையே கிடையாது. எல்லாவிதப் பிராணிகளையும் வேட்டையாடும். யானைகளில் குறிப்பாக பெண் யானை, காட்டுப் பன்றி, காட்டெருமை, மான், கரடி, முள்ளம் பன்றி என இவற்றின் விருப்ப உணவுப் பட்டியல் நீண்டது. சில வேளைகளில் சிறுத்தையையும் சாப்பிடும்.

இரை கிடைக்காத காலங்களில் கிராமங்களில் புகுந்து மாடுகள், கன்றுகளைத் தூக்கிச் செல்வதும் உண்டு.

பொதுவாகப் புலிகள் மரம் ஏறுவதில்லை. காடுகளில் வெள்ளம் ஏற்படும் போதும், வேறு ஏதேனும் ஆபத்துகள் ஏற்படும் போதும் மரங்களில் ஏறித் தப்பிக்கும்.

ஆண் புலியும் பெண் புலியும் தனித்தனியாகவே வாழும். மழைக்காலத்துக்குப் பிறகு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை நடத்தும். பிப்ரவரி முதல் மே மாதம்





வேறு உணவைச் சாப்பிடாது.

குட்டி ஆறு மாதம் வரை தாயுடன் சென்று வேட்டையாடும். இரண்டு வருடங்களுக்குப் பின் தாயைப் பிரிந்து தனித்து வாழத் துவங்கும்.

புலிகள் நடந்து செல்லும் போது உரத்த குரலில் முழங்கும். இந்த முழக்கம் மூன்று கிலோ மீட்டருக்கு அப்பாலும் கேட்கும். 'இது என் எல்லை' என்று மற்ற பிராணிகளுக்கு உணர்த்



வரை பெண் புலி குட்டி போடும் பருவம். ஒரு தடவைக்கு இரண்டு முதல் நான்கு குட்டிகள் வரை பிறக்கும்.

குட்டிகள் பிறந்ததும் பெரும்பான்மையான நேரத்தை தூங்குவதிலும் பால் குடிப்பதிலுமே செலவிடுகின்றன.

பிறந்த இரண்டாவது வாரத்தில் கண்களைத் திறந்து உலகத்தைப் பார்க்க ஆரம்பிக்கின்றன குட்டிகள்.

குட்டி படுவேகமாக வளர ஆரம்பிக்கும். பிறந்த ஆறாவது வாரத்தில் முதல் முறையாக இறைச்சியை சாப்பிடத் துவங்கும்.

தாய், குட்டிகளுக்கு விளையாட்டையும் வேட்டையையும் கற்றுக் கொடுக்கும். விலங்குகளின் காலடித் தடத்தை வைத்து திடீரெனப் பாய்ந்து தாக்குவது எப்படி என்பதையும் செய்து காட்டும். தந்தைப் புலி, குட்டிகளுக்கு எவ்வித உதவியும் செய்யாது! குட்டி பிறந்ததும் அது தனியாக வசிக்க ஆரம்பித்து விடும்.

சத்தம் இல்லாமல் பதுங்கிச் சென்று தாக்குவதில் புலி திறமையானது. கூர்மையான பற்களின் உதவியால் இறைச்சியைக் கடித்து வேகமாகச் சாப்பிடும். ஒருமுறை வயிறு நிரம்பி விட்டால் சில நாட்களுக்கு

தவும் சக புலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கவுமே புலிகள் உறுமுகின்றன.

புலிகள் அழகான தோலுக்காக அதிக அளவில் வேட்டையாடப்படுகின்றன. தோலிலிருந்து கம்பளம், பைகள், கோட்டுகள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. பல், நகம், எலும்புகளும் பயன்படுகின்றன.

கம்பீரமாகவும் அழகாகவும் காட்சி தரும் புலிகள் இந்தியாவில் ஏராளமாக வேட்டையாடப்பட்டு விட்டன. நம் நாட்டின் தேசிய விலங்கிற்கே இந்த நிலை என்றால் மற்ற பிராணிகளின் நிலை எப்படியோ?

இந்திய அரசு புலி பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தி கட்டுப்பாட்டுடன் வளர்ப்பதால் இப்போது ஓரளவு புலி பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஈற்றுவாக்கியப் போட்டியில் பரிசு பெறும் கதை

உதவி!

சுந்தரலிங்கம் மிகவும் வசதியான பண்ணையார். ஆனால் இரக்கக் குணமே இல்லாதவர். எனவே அவரை அவ்வூர் மக்கள் யாரும் மதிப்பதே கிடையாது.

ஒருநாள், "ஐயா ஏன் வருத்தமா இருக்கீங்க?" என்று கேட்டான் வேலைக்காரன் முனுசாமி.

"இவ்வளவு பணமிருந்தும் என்னை யாரும் மதிக்க மாட்டேங்கிறாங்களே!" என்றார் சுந்தரலிங்கம்.

"ஐயா! நம்ம ஊர் சேவை சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்துடுங்க. நாலு பேருக்குத் தெரிகிற மாதிரி சின்னச் சின்ன உதவிகள் செய்யுங்கள். அப்புறம் உங்களை எல்லாரும் எப்படி மதிக்கிறாங்கன்னு பாருங்க" என்றான்.

அன்றிலிருந்து முனுசாமி சொன்னபடி சிறு சிறு உதவிகள் செய்ய ஆரம்பித்தார் சுந்தரலிங்கம்.

அன்று பட்டணத்தில் வேலையை முடித்துக் கொண்டு காரில் திரும்பிக் கொண்டிருந்தார் சுந்தரலிங்கம். அவருக்கு முன்னால் ஒரு லாரி சென்று கொண்டிருந்தது. திடீரென லாரியிலிருந்து ஒரு பார்சல் கீழே விழுந்தது. இதைக் கண்டு புதிதாக இரக்கப்பட ஆரம்பித்த சுந்தரலிங்கம் பதறினார். உடனே காரை நிறுத்தி விழுந்த பார்சலை எடுத்துக் கொண்டு லாரியைப் பின்தொடர்ந்தார்.

சிறிது நேரத்தில் மற்றொரு பார்சல் விழுந்தது. 'என்னது! ஒரே தொல்லையா போச்சு' என்று எண்ணியபடி அதையும் எடுத்தார். லாரியில் செல்பவர்களிடம் கொடுப்பதற்காக காரை வேகமாக ஓட்டினார்.

அடுத்த கால் மணி நேரத்தில் லாரியிலிருந்து மேலும் இரு பார்சல்கள் விழுந்தன. அதையும் சுந்தரலிங்கம் எடுத்துக் கொண்டார்.

மேலும் பத்து நிமிடப் பயணத்தில் லாரி முன்னால் காரை நிறுத்தி மடக்கினார் பண்ணையார்.

"என்னங்க, இப்படி லாரியிலிருந்து பார்சல் விழுவதைக் கூட கவனிக்காமல் வண்டி ஓட்டறீங்க. இந்தாங்க நீங்க கீழே போட்ட நாலு பார்சல்கள்" என்றார் பெருமிதத்துடன் சுந்தரலிங்கம்.

இதைக் கேட்ட லாரி ஓட்டுனரின் முகம் கோபம் அடைந்தது.

"என்னங்க இவ்வளவு பெரிய உதவி செஞ்சிருக்கேன். ஒரு நன்றி கூடச் சொல்லாமல் முறைக்கறீங்களே?" என்றார் பண்ணையார்.

"சார்! இந்தப் பார்சலில் செய்தித்தாள்கள் இருக்கு. அந்தந்த ஊர் ஏஜெண்ட்களுக்குத்தான் தள்ளி விட்டு வந்தோம். இப்படிப் பண்ணிட்டீங்களே?" என்றார் லாரி ஓட்டுனர்.

இதைக் கேட்ட சுந்தரலிங்கம் அதிர்ந்து நின்றார்.

— க. தினேஷ்குமார்,
ஐயப்பா நகர்,
திருச்சி.






ஓவியப் போட்டி முடிவுகள்

மே இதழில் ‘ஒட்டகம்’ என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.


முதல் பரிசு

எஸ். அனுஷா,
சிவகிரி,
திருநெல்வேலி
மாவட்டம்.



ஆறுதல் பரிசு


என். மைதிலி,
எட்டாம் வகுப்பு,
நாமக்கல்.





இரண்டாம் பரிசு

என். சசிகலா,
மேலசரக்கல்விளை,
நாகர்கோவில்.




மூன்றாம் பரிசு

ஹெச். கணேஷ்,
திருநெல்வேலி.

ஆறுதல் பரிசு

டி.ராபின்சாலமன்
ரத்ன ராஜ்,
ஏழாம் வகுப்பு,
வேலூர்.





விடுகதைப் பக்கம்

முடியவில்லை – அது என்ன?

5) நம் தலையில் விழுவதை அவன் தலையில் போட்டுக் கொள்வான் – அவன் யார்?

6) இவன் இருந்தாலும் தொல்லை, இல்லையென்றாலும் தொல்லை – அவன் யார்?

7) வீட்டின் மேல் வீடு கட்டியிருப்பான். வீட்டிற்குச் சென்றவர்களை விருந்தாக்கிக் கொள்வான் – அவன் யார்?

– பாரதிசெல்வம்,
சென்னை–93

ஐந்து ஊருக்கு ஒரு மைதானம் – அது என்ன?

I 1) உச்சாணி கொம்பில் ஒய்யாரத் தொட்டில்கள் – அது என்ன?

2) ஐந்து ஊருக்கு ஒரு மைதானம் – அது என்ன?

3) ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வார்கள்; ஆனால் இவர்களுக்குத் தகராறு இல்லை – யார் அவர்கள்?

4) மூன்று கண்களிருந்தும் இவனால் பார்க்க முடியாது – யார் அவன்?

5) நோயில்லாமல் இளைப்பான்; உணவின்றி பருப்பான் – யார் அவன்?

6) நசுக்கிப் பிழிய – நாவிற்கு இனிமையாவான் – யார் அவன்?

7) ஆடுவான், பாடுவான். ஆனால் நகர மாட்டான் – யார் அவன்?

8) நூல் நூற்கும் அக்காவின் நூலை தனியாக நெய்ய முடியாது – அது என்ன?

9) வெள்ளை உடம்புக்கு கறுப்பு மேலாடை – அது என்ன?

– சா. அனந்தகுமார்,
பேச்சிப்பாறை.

II 1) தண்ணீரில் பிறந்து தண்ணீரிலே அழியும் பூ – என்ன பூ?

2) ஒன்றைப் பிரிந்து மற்றொன்று வாழாது. – அது என்ன?

3) அவன் கழற்றிய சட்டையை அடுத்தவர் போட முடியாது – அவன் யார்?

4) புள்ளிகள் இருந்தும் கோலம் போட

III 1) கள்ளென்று இருப்பான்; சோற்றுக்குச் சுவை கூட்டுவான் – அவன் யார்?

2) வெந்து கரியாகி விருந்து படைப்பான் –அவன் யார்?

3) கட்டி வைத்த பந்தலாம்; காற்றிலாடும் பந்தலாம்; ஒட்ட வைக்கும் பந்தலாம், மத்தியிலே மகராசி கொலுவிருப்பாளாம் – அது என்ன?

4) கூரையில்லா வீட்டுக்குள் குடிக்கும் பொருளுண்டு – அது என்ன?

5) பகலில் சுருண்டு கிடப்பான், இரவில் விரிந்து படுப்பான் – அவன் யார்?

– தங்கவேல் சரவணன்,
பதினோராம் வகுப்பு,
விக்கிரமசிங்கபுரம்.

விடைகள்:

I 1) தூக்கணாங்குருவிக் கூடு 2) உள்ளங்கை 3) கண் – இமைகள், 4) தேங்காய், 5) நிலா, 6) கரும்பு, 7) மரம், 8) சிலந்தி வலை 9) உளுந்து

II 1) உப்பு, 2) செருப்பு, 3) பாம்பு 4) நட்சத்திரம், 5) குடை, 6) சூரியன், 7) சிலந்தி

III 1) ஊறுகாய், 2) விறகு, 3) சிலந்தி வலை, 4) கிணறு, 5) பாய்.



குழந்தையின் வயது என்ன?

"டிக்கெட், டிக்கெட்" சத்தமிட்டுக் கொண்டே கண்டக்டர் ஒவ்வொருவருக்கும் டிக்கெட் வழங்கிக் கொண்டு வந்தார்.

"இங்கே ஒரு டிக்கெட் கொடுங்கள்" கவிதா இரண்டு ரூபாய் நாணயத்தைக் கொடுத்தாள். "பாப்பாவுக்கும் டிக்கெட் எடுக்க வேண்டும்" என்று கண்டக்டர் கூறினார். "குழந்தைக்கு இரண்டரை வயதுதான் ஆகிறது. டிக்கெட் தேவையில்லை" என்று கவிதா மறுத்தாள்.

"பெரிய குழந்தையாக இருக்கிறது, டிக்கெட் வாங்க வேண்டும்" என்று கண்டக்டர் உறுதியான குரலில் கூறினார். "பெற்றவள் எனக்குத் தெரியாதா, ஒரு டிக்கெட்தான் எடுக்க முடியும். உன்னால் முடிந்ததைச் செய்து கொள்" என்று வார்த்தைகளைக் கொட்டினாள் கவிதா.

கண்டக்டர் எதுவும் பேசாமல் அடுத்த நபருக்கு டிக்கெட் கொடுக்கச் சென்று விட்டார். "ஒருதடவை சொன்னால் புரியாது" என்று கூறியபடி வெற்றிக் களிப்புடன் அருகில் உள்ளவர்களைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டாள் கவிதா. இதற்குள் தான் இறங்க வேண்டிய இடம் வந்துவிடவே குழந்தையை அழைத்துக்கொண்டு பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினாள்.

"ஜூன் மாதம் பிறந்து விட்டது. இன்னும் வெயில் குறையவில்லையே" என்று கூறியபடி அருகில் இருந்த கடைக்குச் சென்று, சர்பத் வாங்கித் தானும் குடித்து குழந்தைக்கும் கொடுத்தாள். களைப்பு நீங்கியவளாக அருகில் இருந்த பள்ளியில் தன் குழந்தையைச் சேர்ப்பதற்காகச் சென்றாள்.

இனிய முகத்துடன் வரவேற்ற முதல்வரை எங்கோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதே என்று யோசித்தாள். பஸ்ஸில் தனக்கு அருகில் அமர்ந்திருந்தவர் அவர்தான் என்பது நினைவுக்கு வந்தது. சிரித்துக்கொண்டே தன் மகள் அமுதாவை எல்.கே.ஜியில் சேர்க்க வேண்டும் என்று கூறினாள்.

முதல்வர் புன்னகையுடன் "எங்கள் பள்ளியில் மூன்று வயது ஆன குழந்தைகளை மட்டுமே சேர்க்க முடியும்" என்று கூறினார். "மூன்று வயது ஆகிவிட்டது. அதற்கான பிறப்புச் சான்றிதழ் இதோ உள்ளது" என்று கவிதா கூறினாள்.

முதல்வரின் புன்னகை மறைந்தது. "மன்னிக்கவும், எங்கள் பள்ளியில் கல்வியை விட ஒழுக்கத்திற்கே முக்கியத்துவம் அளிக்கிறோம். பஸ்ஸில் உங்கள் குழந்தைக்கு இரண்டரை வயது என்று கூறினீர்கள். இப்பொழுது மூன்று வயது என்று கூறுகிறீர்கள். உங்களிடமே உண்மை இல்லை. அதனால் உங்கள் குழந்தைக்கு இங்கு இடம் கிடையாது. நீங்கள் போகலாம்" என்றார்.

இதைக் கேட்ட கவிதா அதிர்ந்து நின்றாள்.

— க. சபரீஸ்வரி,
ஏழாம் வகுப்பு,
சென்னம்ரெட்டிபட்டி
தூத்துக்குடி மாவட்டம்.

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை


அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் மூன்றாவது பரிசு பெறும் முதல் கவிதை
தொட்டுப் பார்த்த வட்ட நிலா!

வட்ட நிலா வானத்திலே
சுற்றி வருகுது — நன்றாய்ச்
சுற்றி வருகுது — அதைச்
சுற்றிச் சுற்றி விண்மீன்கள்
கொட்ட மடிக்குது — நன்றாய்க்
கொட்ட மடிக்குது!

பட்டுப் போன்ற மேனியுடன்
பவனி வருகுது — நன்றாய்
பவனி வருகுது — அதைத்
தொட்டுப் பார்க்க எந்தன்மனம்
துடி துடிக்குது — மனமோ
துடி துடிக்குது!


மொட்டை மாடி மீதிலேறி
தொட்டுப் பார்க்கவே — நிலாவைத்
தொட்டுப் பார்க்கவே — ஒரு
திட்டம் போட்டு மொட்டைமாடி
ஏறிச் சென்றேனே — நானும்
ஏறிச் சென்றேனே!


மொட்டை மாடி ஏறிச்சென்றும்
வட்ட நிலாவை — அந்த
வட்ட நிலாவை — நானும்
தொட்டுப் பார்க்க முடியாமல்
துவண்டு போனேனே — மிகவும்
துவண்டு போனேனே!

எட்டி எட்டித் தொட்டிடவே
எண்ணம் கொண்டேனே — நானும்
எண்ணம் கொண்டேனே — அதை
எட்டிப் பிடிக்க முடியாமல்
ஏக்கம் கொண்டேனே — நானும்
ஏக்கம் கொண்டேனே!

கொட்டிக் கிடக்கும் தண்ணியிலே
குட்டி நிலாவை — அந்தக்
குட்டி நிலாவை — ஜோராய்த்
தொட்டுப் பார்த்து எந்தன்மனம்
துள்ளி ஆடுதே — மனமும்
துள்ளி ஆடுதே!

— **பால. நடராஜன்,**
கோனாபட்டு






மலேரியாவை

'மலேரியா' என்பது ஒரு தொற்றுநோய். உஷ்ணம் அதிகம் நிறைந்த பகுதிகளில் தோன்றும் நோய். மரணத்தைத் தழுவ வைக்கும் மிகப் பெரிய நோய்களில் மலேரியாவும் ஒன்று. யாருக்குமே காரணம் புரியாமல் சவால் விட்டுக் கொண்டு, பயங்கர அழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இந் நோய் குறித்து விஞ்ஞானிகளே குழப்பத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தபோது 1897-ம் ஆண்டு ஆகஸ்ட் 20ந் தேதி மலேரியா நோய் தோன்றுவதற்கான காரணத்தை 'ரொனால்டு ராஸ்' என்பவர் கண்டுபிடித்தார்.

இவர் ஒரு ஆங்கில மருத்துவர். 'அனோபிலஸ்' என்றொரு வகை கொசு மூலம் மலேரியா பரவுவதைக் கண்டுபிடித்தார். கல்கத்தாவிலுள்ள பிரசிடென்சி பொதுமருத்துவமனையில் (தற்போதைய எஸ்.எஸ்.கே.எம். மருத்துவமனை) 'அனோபிலஸ்' கொசுவில் மலேரியாவைப் பரப்பும் ஒட்டுண்ணிகள் இருப்பதைக் கண்டார். இவருடைய இந்தக் கண்டுபிடிப்பிற்குப் பிறகு உலகம் முழுவதும் திகில் ஏற்படுத்திக் கொண்டிருந்த மலேரியா நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடிந்தது.

உத்திரப் பிரதேசத்திலுள்ள 'அல்மோரா' என்னும் இடத்தில் 1857ம் ஆண்டு மே மாதம் 13ந் தேதி ரொனால்டு ராஸ் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி. 'செயிண்ட் பார்த்தொலோமியூ' மருத்துவமனையில் ரொனால்டு ராஸ் மருத்துவப்படிப்பு பயின்றார். பிறகு, 1881ல் இந்திய மருத்துவத் துறையில் சேவை புரிய சேர்ந்தார். தென் இந்தியாவிலுள்ள செகந்திராபாத்தில் முதன்முதலாக இவர் மருத்துவப் பணியில் சேர்ந்தபோதுதான் அங்கு மக்கள் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு செத்து மடிவதைக் கண்டார். இக் கொடிய நோயிலிருந்து மக்களை எப்படியும் காப்பாற்றியே திருவது என உறுதி எடுத்துக்கொண்டார்.

1880க்கு முன்னர், சார்லஸ் லேவ்ரான் என்கிற பிரெஞ்சு விஞ்ஞானி 'பிளாஸ்மோடியம்'





வெற்றி கொண்டவர்!

என்கிற ஒரு செல் உள்ள ஒட்டுண்ணியே மனித உடலில் மலேரியா தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதை அறிந்தார். ரொனால்டு ராஸ் இதன் அடிப்படையில் சோதனைகளை மேற்கொண்டபோது 'அனோபிலஸ்' கொசுவின் வயிற்றுச்சுவர்களில் காணப்பட்ட பை அமைப்பினாலான நிறமிக் கொப்புளங்கள் லேவ்ரான் கண்டுபிடித்திருந்த 'பிளாஸ்மோடியம்' ஒட்டுண்ணியுடன் ஒவ்வொரு விஷயத்திலும் ஒத்துப் போவதைக் கண்டுபிடித்தார். இதை நிரூபிப்பதற்காக மலேரியா கிருமிகளற்ற கொசுக்களைப் பிடித்து, மலேரியா நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளியின் ரத்தத்தை உறிஞ்சச் செய்தார். பிறகு அக் கொசுக்களின் வயிற்றைச் சோதித்தபோது 'பிளாஸ்மோடியம்' ஒட்டுண்ணி முதிர்ச்சியடைவதைக் கண்டார். பிளாஸ் மோடியம் ஒட்டுண்ணியால் பாதிக்கப்பட்ட பெண் அனோபிலஸ் கொசு கடிப்பதின் மூலமாகத்தான் மலேரியா பரவுகிறது என்பது தெளிவாகியது. பிறகு இவ்வகைக் கிருமிகளை அழிப்பதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு மலேரியா நோயை ஒழிக்க ஆரம்பித்தனர்.

'ரொனால்டு ராஸ்' மலேரியாவை வெற்றி கொண்டதால் உலகம் முழுவதும் இவரது கண்டுபிடிப்பு அங்கீகரிக்கப்பட்டு, 1902ல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1911ல் 'சர்' பட்டமும் இவருக்கு அளிக்கப்பட்டது. 1932-ம் ஆண்டு செப்டம்பர் 16ந் தேதி ரொனால்டு ராஸ் லண்டனில் உயிர் நீத்தார்.


— எஸ். ராஜகோபால்,
திருச்சி.

20 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா




மறுநாள் —
நான் என்ன செய்வேன்? நண்பர்களே நம் எல்லோரின் விதி முடிந்துவிட்டது.
என்ன சொல்றீங்க?
தலைவரே, என்னாச்சு? ஏன் இப்படி பயப்படறீங்க?
நாம் போய்க் கொண்டிருக்கும் இடம் ஆபத்தானது. மலைமீன்கள் கப்பலை அப்படியே விழுங்கி விடக் கூடியவை.
அவ்வளவு பெரிய மீனா?
கடல் கொந்தளித்தது. கப்பலை நோக்கி இரண்டு மீன்கள் வந்தன.
ஐயோ, சின்ன மலையே நீந்தி வருகிற மாதிரி இருக்கே!
கப்பலைச் சுற்றி வட்டமிடுகிறதே!


மீன்கள் ஏற்படுத்திய கொந்தளிப்பில் கப்பல் மலை மீது மோதியது.
கடலில் மூழ்கியும் மீன்களுக்கு இரையாகியும் நிறைய பேர் இறந்து விட்டார்களே!
நீந்தி ஒரு நகரத்தை அடைந்தான் சிந்துபாத்.
தம்பி, நீ யார்? புதுசா தெரியுதே!
என் பெயர் சிந்துபாத். கப்பல் உடைந்து விட்டது.


பெரியவர் சிந்துபாத்தின் கதையைக் கேட்டார்.
என் வீட்டிலேயே நீ தங்கலாம்!
உங்களைப் போன்ற நல்லவர்களால்தான் ஒவ்வொரு முறையும் நான் உயிர் பிழைக்கிறேன்.
எனக்கு ஏராளமான சொத்து இருக்கு. என் பண்ணைகளைக் கவனிக்கிறாயா?
நீங்கள் சந்தோஷப்படும்படி நல்லா வேலை செய்வேன்...
நாட்கள் சென்றன. ஒருநாள் —
சிந்துபாத், உன் திறமையும் உழைப்பும் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. என் மகளைத் திருமணம் செய்து கொள்கிறாயா?
தங்கள் விருப்பமே என் விருப்பம்.
திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது. ஆனால்...
— தொடரும்

2 அழகன் வந்தான்...!

அழகன், செந்தில், குமரன்!

எதிரே படமெடுக்கும் பாம்பு! அகலமான நாமம் தெரிந்தது. நொடிக்கொரு தரம் நீளும் நாக்கு. ஸ்ஸ்ஸ் என்ற எச்சரிக்கை சீறல் வேறு.

அதிர்ச்சியில் இருந்து சில விநாடிகளில் சுதாரித்துக் கொண்டான் செந்தில். இப்போது என்ன செய்வது? எப்படித் தப்பிப்பது? ஓடினால் துரத்துமா? பாம்பு மேலே பாய்ந்து விடும் என்று செந்திலுக்குத் தோன்றியது. உதவிக்குக் குமரனும் அருகில் இல்லை. வேகமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

'அட்டென்ஷனில்' ஒரே இடத்தில் உறுதியாக நின்றான் செந்தில். பக்கத்தில் உள்ள மரம் போல. விறைப்பாக்கிக் கொண்ட அவன் உடம்பில் சிறிதும் அசைவு இல்லை. இமைக்காமல் பாம்பையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். பாம்பும் நகராமல் இருந்தது. சில யுகங்கள் போல் சில நொடிகள் கடந்ததும் –

'வள்' என்ற குமரனின் குரைப்பு அருகில் கேட்டது! செந்திலுக்குள் மகிழ்ச்சி துள்ளியது. 'அப்பாடி' என்று பெருமூச்சு விட்டான். அவன் பக்கத்தில் வந்த குமரன், பாம்பை உற்றுப் பார்த்தது. பாயவும் தயாரானது.

அந்தப் பாம்பிற்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. தன் படத்தைத் தாழ்த்திக் கொண்டது. பின், எதிர்த்திசையில் வேகமாக சரசரவென்று ஊர்ந்து செல்லத் தொடங்கியது. செந்தில் தடுத்தும், குமரன் பாம்பைப் பின்பற்றியது. வேறு வழியில்லாமல், செந்திலும் பின் சென்றான். முதலில் பாம்பு; அப்புறம் குமரன்; பின் செந்தில்.

மலை உச்சியில் இந்த வினோதப் பயணம் தொடர்ந்தது. மேகம் லேசாகக் கலைந்திருந்தது. பத்து நிமிடம் சென்றதும் தென்பட்ட ஒரு பாறைப் பொந்தினுள் பாம்பு புகுந்துகொண்டது. சடுதியில் மறைந்து விட்டது. செந்தில் நின்று விட்டான்.

குமரன் மட்டும் பொந்தின் அருகே சென்றது. விடாமல் குரைத்தது. விஷயம் இல்லாமல் குமரன் குரைக்காது. துணிந்து அருகே சென்றான்.

பொந்தினுள் பளபளப்பாக ஏதோ தென்பட்டது. அது என்ன? பாம்பைக் காணவில்லை. அடி ஆழத்திற்குள் சென்றிருக்கும்.

ஒரு தடித்த குச்சியைப் பொந்தினுள் விட்டு அந்தப் பளபள சமாச்சாரத்தைக்

பத்மா ரவிசங்கர்

செந்தி வெளியே எடுத்தான்.

அது ஒரு கத்தி! கையில் எடுத்துப் பார்த்தான். மிகவும் கூர்மையாக இருந்தது. முக்காலடி நீளம். உறுதியான கைப்பிடி. சினிமாவில் பார்த்தது போலவே இருந்தது. அது ஒரு கொலைக் கருவிதான் என்று செந்திலுக்குத் தோன்றியது.

சற்று முன் காலடி ஓசை கேட்டது. தற்போது இந்தக் கத்தி கிடைக்கிறது. மலையில் நிகழும் மர்மம் என்ன? ஏதோ ஆபத்து காத்திருப்பதாக அவன் உள்ளுணர்வு சொல்லியது. பொறுமையாகத் துப்பறிந்து எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று செந்தில் முடிவு செய்துகொண்டான்.

சரி. இந்தக் கத்தியை என்ன செய்வது? திரும்பவும் கத்தியைப் பொந்தினுள் வைத்து விட வேண்டியதுதான். ஏனெனில், அதை வைத்த மர்ம மனிதனுக்குச் சந்தேகம் எதுவும் வரக் கூடாது. அவன் சுதந்திரமாகச் செயல்பட்டால்தான் சதித் திட்டம் முழுவதையும் அறிய முடியும். செந்தில் மனசுக்குள் ஆர்வம் கொப்பளித்தது.

கத்தியைத் திரும்ப வைத்துவிட்டு, பொந்தைப் பார்த்து ஒரு சல்யூட் அடித்தான் செந்தில். 'கத்தியைக் காண்பித்துக் கொடுத்த நல்ல பாம்பே! உனக்கு என் நன்றி!'

செந்தில் வீட்டுக்குத் திரும்பியபோது மாலை நான்கு மணி. அப்பா வெளியே சென்றிருந்தார். தெருவில் கிரிக்கெட் இன்னமும் ஓயவில்லை.

தேநீர் பருகிவிட்டு பெட்ரூமுக்கு வந்தான். அங்கே தரையில் பொம்மைகள் இறைந்திருந்தன. மத்தியில் விளையாடும் கீதா.



செந்திலின் தங்கை கீதாவுக்கு இரண்டரை வயது. வீட்டின் கடைக்குட்டி; படுசுட்டி. கொழு கொழுவென்று கொள்ளை அழகு. 'லட்டுப் பாப்பா!' என்றுதான் அவளைச் செந்தில் கொஞ்சுவான்.

அவனைக் கண்டதும் ஆசையுடன் ஓடி வந்தது. அவன் மடியில் உட்கார்ந்தது. மழலையில் கொஞ்சியது. தங்கைப் பாப்பா எடுத்துக் கொண்ட உரிமையில், காட்டிய அன்பில் செந்தில் மகிழ்ச்சி அடைந்தான்.

"ஏ லட்டுப் பாப்பா!"

"என்ன...?"

"பெரியவளானதும் என்ன செய்வே?"

"ஸ்கூலுக்குப் போவேன்!"

"அது இல்லைடா! நீ பெரியவளானதும் என்னை வெறுக்க மாட்டியே?"

"என்ன?"

"இப்ப மாதிரியே பாசத்தோட இருப்பியா?"

"என்ன...?" என்றது கீதா திரும்பவும். குழந்தைக்கு எதுவும் புரியவில்லை. குழந்தைகளுக்குத்தான் கலப்படமில்லாமல் எவ்வளவு நல்ல மனம்! என்று நினைத்தான்.

இருட்டத் தொடங்கியது. பாஸ்கர் உள்ளே வந்தான். செந்திலைக் கண்டு கொள்ளாமல் தாண்டிச் சென்றான். அலட்சியம்! செந்திலை நம்பிக்கையுடன் இருக்கச் சொல்லி இருக்கிறாள் அம்மா. என்றாவது ஒரு நாள், இந்தச் சொந்த அண்ணன் செந்திலைப் பாஸ்கர் புரிந்து கொள்வான்; பாசம் செலுத்துவான்.

பாஸ்கர் நேராகச் சென்று நிலைக் கண்ணாடி முன் நின்றான். அழகான பாஸ்கர் எப்போதும் கண்ணாடி முன் நிற்பது வழக்கம். இப்போதும் அவன் முகத்தில் பெருமை வழிந்தது.

இந்த வீட்டில் செந்திலுக்குப் பிடிக்காதப் பொருள், அந்த ஆளுயர நிலைக் கண்ணாடிதான்! அழகற்றவனுக்கு ஒரு நிலைக் கண்ணாடியில் என்ன சுவாரசியம் இருக்கப் போகிறது... அது அவனுடைய நல்ல உளளத்தையா பிரதிபலிக்கப் போகிறது?

திங்கள் காலை. அப்பா மோட்டார் பைக்கில் ஃபாக்டரிக்குக் கிளம்பிச் சென்று விட்டார்.

இருபது நிமிட தூரத்தில், பள்ளிக்கூடம். தம்பி பாஸ்கரும் அங்கேதான் படிக்கிறான். பாஸ்கர் தன் நண்பர்களுடன் ஸ்கூலுக்குக் கிளம்பி விட்டான். செந்திலும் புறப்பட்டான்; எப்போதும் போலத் தனியாகத்தான்.

ஆயிரம் மாணவ, மாணவியர் படிக்கும் பெரிய பள்ளி அது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இடப்புறம் பெரிய சோலை போல் பல மரங்கள். நடுவில் பள்ளிக் கட்டடங்களும் 'அசெம்பிளிக்காக' சிறு மைதானமும் உள்ளது. வலப்புறம் விளையாட்டுக்களுக்கான மிகப் பெரிய மைதானம்.

நீலம், வெள்ளைச் சீருடையில் மாணவ, மாணவியர் பள்ளிக்குள் சென்று கொண்டிருந்தனர். செந்திலை எவருமே கண்டு கொள்ளவில்லை. ஓரிருவர் போனால் போகிறதென்று புன்னகை செய்தனர். அவன் உள்ளத்தில் சாதிக்கத் துடிக்கும் லட்சியத் தீ மேலும் கொழுந்துவிட்டது.


முதல் வகுப்பு, தமிழ் பாடம் ஆரம்பித்ததும், வாசலில் பியூன். உடன், ஒரு புதிய மாணவன்! வகுப்பு முழுவதும் வாய் பிளந்து பார்த்தது.


புதிய மாணவன் அவ்வளவு அழகாக இருந்தான்! அவனுக்குச் சரியான உயரம்; மிகவும் சிவந்த நிறம்; அடர்ந்த சுருள் கேசம்; கூரிய நாசி; ஒளி வீசும் கண்கள். முகம் வசீகரமாக இருந்தது; பார்த்துக்

"உன் பையன் இப்பவே கால்குலேட்டர் கேட்கிறானா ஏன்?"

"அவன் ஆசிரியர் எழுத்துக் கூட்டி படிக்கச் சொன்னாராம். அதனாலதான்!"

— ப. காளிதாசன்





கொண்டே இருக்கலாம் போல.

ஒருவன் இவ்வளவு அழகாகக் கூட இருக்க முடியுமா? புதியவனின் மின்னல் அழகில் மிரண்டான் செந்தில்.

தமிழாசிரியர் அவனை உள்ளே அழைத்தார். "உன் பேர் என்ன?" என்றார்.

"அழகன்!"

"அழகன்! உனக்கு எவ்வளவு பொருத்தமான பெயர் வெச்சிருக்காங்க! உன் அப்பா என்ன செய்யறார், தம்பி?"

"அழகன் தொழிலகம் வெச்சிருக்கார்!"

"ஓ... அழகன் தொழிலகம் முதலாளி சுந்தரம் உன் அப்பாவா?"

மதியம் ரேங்க் கார்டு வழங்கினார்கள். வழக்கம் போல் செந்தில்தான் முதல் ரேங்க். செந்தில் உற்சாகமாக வீட்டுக்குத் திரும்பினான். பாஸ்கர் முன்னதாகவே வந்திருந்தான்.

"பாஸ்கர்! நீ என்ன ரேங்க்?"

"முதல் ரேங்க் வாங்கிட்ட பெருமையில கேட்கறியா செந்தில்?"

"அப்படிச் சொல்லாதேடா பாஸ்கர்! அக்கறையிலத்தான் கேட்டேன்."

"போடா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு..." என்றான் முறைப்பாக.

குனிந்த தலையுடன் நகர்ந்த செந்தில் தோள் மீது ஒரு கரம் விழுந்தது. மென்மையாக அழுத்தவும் செய்தது. திரும்பிப் பார்த்தான்.

அம்மா!

அலுவலகத்திலிருந்து அரை மணி கழித்து அப்பா தியாகராஜன் திரும்பினார்.


"ரேங்க் கார்டா பாஸ்கர்? இப்படிக் கொண்டா!" தம்பியிடம் அப்பா அன்புடன் விசாரிப்பது செந்திலுக்குக் கேட்டது.

"குட்! இங்கிலீஷ்ல நல்ல மார்க்! ம்... மாத்ஸ்ல மார்க் பத்தாது... அடுத்தமுறை ரேங்க் இன்னும் இம்ப்ரூவ் செய்யணும், என்ன?" அப்பாவின் குரலில் அக்கறை.

சிறிது நேரம் கழிந்தது. செந்தில் மெதுவாக அறைக்குள் பிரவேசித்தான். அவனையும் மீறி அவன் மனசுக்குள் ஆவல்.

"என்னடா?" என்று அப்பா நிமிர்ந்தார். அவர் முகத்தில் சிடுசிடுப்பு. அவர் குரலில் 'என்னை வீணாகத் தொந்தரவு செய்யாதே!' என்பது தொனித்தது.

"அப்பா... வந்து... ரேங்க் கார்டு...."



''வாழைப்பழத்துல சத்து இருக்கிற மாதிரி அதோட தோலுல சக்தி இருக்குதுடா!''

''எப்படி?''

''அதை மிதிச்சா வழுக்கி விழ வச்சுடுதே!''

— க. குழந்தைவேல்

"உம்... உம்... அப்படி வெச்சுட்டுப் போ..."

செந்தில் காற்று போன பலூன் போலானான்..

"வந்து... இந்த முறையும் முதல் ரேங்க் வாங்கியிருக்கேன்..."

"சரி சரி.. நான் பார்த்துக்கறேன். இப்ப இந்த ஆபீஸ் பைலைப் பார்க்க விடறியா?"

முகத்தில் அறை வாங்கியது போல உணர்ந்தான் செந்தில். வகுப்பில் முதல்வனாக வந்ததற்கு நல்ல பரிசு. வேகமாக அங்கிருந்து வெளியேறி குமரனிடம் வந்து சரணடைந்தான்.

'குமாரா! என் புண்பட்ட மனம் உனக்குப் புரியுதா? ஏன் இந்த உலகம் என்னை ஒதுக்குது? என் அன்பை எப்போ புரிஞ்சுப்பாங்க?'

குமரன் தீவிரமாக வாலை ஆட்டியது.

"அண்ணா!" என்று குரல் கொடுத்தபடி கீதா உள்ளிருந்து ஓடி வந்தாள்.

"இந்தா! எடுத்துக்க!" என்று தன் பிஞ்சுக் கையை செந்திலிடம் நீட்டியது. குழந்தை கையில் ஒரு சாக்லேட்.

"நீ சாப்பிடலியா குட்டிமா?"

"நான் தின்னுட்டேன். உனக்குத்தான் எடுத்துக்கிட்டு வந்தேன்."

சட்டென்று செந்தில் நெகிழ்ந்தான். தங்கையின் பாசத்தில் லேசாகியது அவன் மனம். அந்தச் சாக்லெட்டை குழந்தைக்கே ஊட்டி விட்டான்.

திடுதிப்பென்று குமரன் 'வள்' 'வள்' என்று குரைத்தது. நாயின் பார்வை தெருமீதிருந்தது. சுமாராக ஜன நடமாட்டம் இருந்தது. நன்றாக இருட்டியும் விட்டிருந்தது. மங்கலான விதிவிளக்கு, தெளிவில்லாமல் மசமசப்பாக இருந்தது. குமரன் யாரைப் பார்த்திருக்கும்? எதற்காக இந்தக் குரைப்பு? குமரன் காரணமில்லாமல் ஒரு நாளும் குரைப்பதில்லை.

''சனியன்! சனியன்! எதுக்காக இப்படிக் குரைச்சு நிம்மதியைக் கெடுக்குது?'' உள்ளிருந்து அப்பா சத்தம் போடுவது கேட்டது.

குழந்தையை வீட்டுக்குள் அனுப்பி விட்டு குமரனைக் கட்டியிருந்த சங்கிலியை அவிழ்த்துவிட்டான். அவ்வளவுதான்.

ஆவேசமுடன் நாய் நாலு கால் பாய்ச்சலில் தெருவில் பாய்ந்தது. ஆங்காங்கே தயங்கியது. நின்று மோப்பம் பிடித்தது. தெருமுனைக்கு வந்தது. பின், மேற்குப்புறமாகத் திரும்பியது. அந்தச் சாலையில் சிறிது தூரம் ஓடியதும் குமரன் நின்றுவிட்டது. பின்னாலேயே போன செந்திலும் நின்றான். இதற்கு மேல் குமரனுக்குத் திசை புரியவில்லை போலும்.

தொலைவில் இருளில் மலை கரிய அவுட் லைனில் தெரிந்தது. அன்று மலைக்கு வந்துபோன அந்த மர்ம ஆசாமியைத் திரும்பவும் தெருவில் குமரன் பார்த்திருக்குமா? பார்த்துவிட்டுத்தான் குரைத்திருக்குமோ?

செவ்வாய் மதியம். பள்ளியில் உணவு இடைவேளை. ஆங்காங்கே மர நிழலில் மாணவ முடிச்சுகள்; டிபன் பாக்ஸ் திறந்தபடி; உற்சாகமாகப் பேசியபடி; உல்லாசமாகச் சிரித்தபடி. செந்தில் விலகி நடந்தான். தொலைவில் தனிமைத் தவத்தில் இருந்த புங்க மரம் நோக்கிச் சென்றான்.

பாதி வழியில் சட்டென்று நின்றான். கீழே தரையில் சருகுகளில் ஒரு பர்ஸ் கிடந்தது! குனிந்து அதைக் கையிலெடுத்தான்.

செந்தில் சுற்றிலும் பார்த்தான். எவருமில்லை. பர்ஸைத் திறந்தான். உள்ளே சில நூறு ரூபாய் நோட்டுகள் இருந்தன. அப்புறம் –

அழகனின் போட்டோ இருந்தது!

(தொடரும்)





தேங்காய் ஓடு பொம்மைகள்!




நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் ஆர்வம் இருக்கும். நாம் தேவை இல்லை எனத் தூக்கி எறியும் தேங்காய் ஓடுகளில் அற்புதமான பொம்மைகளை உருவாக்கி விடுகிறார் கேரளாவைச் சேர்ந்த ஜோஸ் சம்பக்கரா. சிறிதும் பெரிதுமான ஓடுகளை வைத்து எறும்பு, விளக்கு, ஆமை, எலி, கரண்டி, ஜாடி என கண் கவர் பொருட்களை உருவாக்கி விடுகிறார்.

இந்தத் தேங்காய் ஓடு பொம்மைகளை நீங்களும் செய்யலாம்! வெவ்வேறு அளவுள்ள தேங்காய் ஓடுகளைச் சேகரியுங்கள். ஓடுகளைச் சொர சொரப்பான தரையில் வைத்துத் தேய்த்து வழவழப்பாக மாற்றுங்கள். அந்த ஓடுகளுக்கு ஏற்ப உருவங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். உதாரணமாக தலைக்கு சிறிய மூடியையும் உடல் பகுதிக்கு பெரிய மூடியையும் பயன்படுத்தலாம். ஆமை செய்வது சுலபம். ஒரு தேங்காய் மூடியைக் கவிழ்த்து வைத்தால் ஆமை உடல் தயார். இன்னொரு ஓட்டை உடைத்து நான்கு சம அளவு குச்சிகளாக மாற்றவும். தலைப் பகுதிக்கு தகுந்தவாறு ஓட்டை வெட்டிக்கொள்ளுங்கள். இப்போது கவிழ்க்கப்பட்ட ஓட்டை எடுத்து நான்கு புறமும் உடைத்த குச்சிகளைக் கால்களாக வைத்து தலைப்பகுதியை முன்புறம் வைத்து பசை கொண்டு ஒட்டுங்கள். ஆமை தயார். மட்டையுடைய தேங்காயை வைத்து போட்டோவில் காட்டியபடி செதுக்கியும் பொம்மை செய்யலாம்.

இது போல் உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு பல உருவங்களைச் செய்து மகிழுங்கள்! இதற்கு பொறுமையும் கற்பனை வளமும் மிக அவசியம்.



ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை



அதிசய முத்துமாலை!

பகாலை என்ற ஒரு அழகான சிறிய கிராமம் இருந்தது. அங்கு மக்கள் நேர்மையாகவும் கடுமையாகவும் உழைத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவ்வூரில் 'பசுபதி' என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் நேர்மையே வடிவானவர். எனவே அவ்வூர் மக்கள் அவரிடம் தங்கள் வழக்குகளைக் கூறினார்கள். அவரும் வழக்குகளை நன்றாக ஆராய்ந்து சரியாக நீதி வழங்குவார். எனவே அவரை அவ்வூர் தலைவராக நியமனம் செய்தார்கள்.

ஞானி ஒருவர் பசுபதியின் நேர்மையைக் கேள்விப்பட்டு, அவருக்கு ஒரு அதிசய முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அந்த முத்துமாலையை அணிந்து கொண்டால் முதல் நாள் நடந்த செயல்களை முத்துமாலை படம் பிடித்தது போலக் காட்டி விடும்.

மற்றொரு பக்கம் அவருடைய மகன் மாணிக்கம். அவனுடைய தீய நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு அவரின் சொத்துகளை அழித்து வந்தான். எனவே அந்த அதிசய முத்துமாலையை அணிந்துகொண்டு அவனது தீய செயல்களைத் தெரிந்து கொள்ள விரும்பினார் பசுபதி.

ஒருநாள் அவர் வழக்குகளை விசாரணை செய்யும்போது ஒருவர் ஓடி வந்து "ஐயா நேற்று என் வீட்டில் இருந்த நகைகளை யாரோ திருடிச் சென்று விட்டனர். நீங்கள்தான் கண்டுபிடித்து உதவ வேண்டும்" என்று கதறினார். பசுபதி அவரைச் சமாதானம் செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

மறுநாள் காலை அவர் வழக்கம் போல முத்துமாலையைச் சுழற்றினார். அப்போது அவர் மகன் அவனுடைய நண்பர்களுடன் சேர்ந்து நகைகளைத் திருடிச் சென்று விற்றுவிட்டதை முத்துமாலை காட்டியது. பசுபதியின் மனம் மிகவும் வருந்தியது. தான் செய்த தவறை தந்தை அறிந்துகொண்டார் என மாணிக்கத்திற்குத் தெரிய வந்தது.

அவனை வழக்குகள் நடக்கும் இடத்திற்கு வரச் சொல்லி விட்டுச் சென்றார் பசுபதி. மாணிக்கம் சிறிதும் பயம் இல்லாமல் சென்றான். இதற்குக் காரணம் தன் தந்தைதானே நீதிபதி. எனவே தனக்குச் சாதகமாக நீதி சொல்வார் என்ற எண்ணம்தான்!

குற்றம் நிரூபிக்கப்பட்டது. மாணிக்கம் சிறிதும் அஞ்சாமல் நின்றிருந்தான்.

பசுபதி கூறினார்: "நகைகளைத் திருடியது மாணிக்கம் என்று நிரூபிக்கப்பட்டதால் அவன், நகை சொந்தக்காரருக்குத் தனது சுய சம்பாத்தியத்திலிருந்து பதினைந்து ஆயிரம் ரூபாய் தர வேண்டும். அல்லது 7 ஆண்டுகள் அவர் வீட்டில் நேர்மையாகவும் இலவசமாகவும் வேலை செய்ய வேண்டும்" என்று உறுதியாகத் தீர்ப்பு அளித்தார்.

இதனைக் கேட்ட மாணிக்கம் அதிர்ந்து நின்றான்!

ஆ. ராஜ்குமார்,
எட்டாம் வகுப்பு, விழுப்புரம்



சஷ்டி கவச வரிகளின் மூலம் சாகசம்!

நில், கவனி, பவானி, ஆர்.பி. சாரதி, பக். 112, ரூ. 24/- ராஜேஸ்வரி புத்தக நிலையம், 8. முத்து கிருஷ்ணன் தெரு, பாண்டி பஜார் அருகே, தி.நகர், சென்னை – 17.

தேர்வில் தேர்ச்சி பெறாமல் அப்பாவின் அடிக்குப் பயந்து மும்பையிலிருந்து சென்னைக்கு ரயிலேறி வருகிறான் வேலு. பிள்ளைகளைப் பிடித்துப் பிச்சையெடுக்க வைத்து சம்பாதிக்கும் பயங்கரக் கும்பலில் சிக்கி, தனது புத்திசாலித்தனத்தால் துணிச்சல் மிக்க பவானியின் உதவியால் தப்பிக்கிறான். பிறகு தனது தவறை உணர்ந்து பெற்றோரிடம் சேருகிறான். நாசகாரக் கூட்டம் ரயிலைக் குண்டு வைத்துத் தகர்க்க முயல்வதையும் தடுத்து பயணிகளின் உயிரைக் காக்கிறாள் பவானி. இதற்கெல்லாம் பெருந் துணையாக இருந்து அவளுக்கு உதவுவது 'சஷ்டி கவச' வரிகள். இதை வைத்தே நாவல் துள்ளுநடை போடுகிறது. ஒரு படம் கூட இல்லை என்பது வருந்த வைக்கிறது.

தந்தை பெரியார், கவிஞர் ஆ. கோவிந்தராசலு, பக். 83, ரூ. 20/- அம்சா பதிப்பகம், 34, கோட்டைமேடு வீதி, கரிக்கலாம்பாக்கம் – 605 007.

இந்தியத் துணைக் கண்டத்தில் சீர்திருத்தக் கருத்துகளையும் சுய மரியாதை உணர்வையும் உறுதியாக ஊன்ற வைத்தவர். மதுவிலக்குக் கொள்கைகளுக்காகவும் கதர் இயக்கத்திற்காகவும் தமிழ்நாட்டில் அருந்தொண்டாற்றிய தந்தை பெரியார் எனும் அரிய மாமனிதரின் புகழ் வாழ்வை விளக்கும் நூல் இது.

தண்ணீர் பற்றிய சுவையான செய்திகள், செந்துறை முத்து பக்.76, ரூ.14/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை 600 017.

தண்ணீரின் பண்புகள், இன்றியமையாத் தன்மை, அதன் பயன்பாடுகள், உலகம் இயங்கத் தேவைப்படும் தண்ணீர் போன்ற தகவல்கள் மிக விளக்கமாக அலசப்பட்டிருக்கின்றன.

மோதிலால் நேரு, எம்.வி. வெங்கட்ராம், பக். 74, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், 14. பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.

இலட்சக்கணக்கான வருவாய் தந்த வக்கீல் தொழிலை சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் துச்சமாக உதறிய மோதிலால் நேருவின் வாழ்க்கை வரலாறு. சாகித்ய அகாதமி பரிசு பெற்ற எழுத்தாளரின் சிறுவர்க்கான அருமையான படைப்பு. இன்றைய சிறுவர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல். சாகரின் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

— ரே

புதிர் உலகம் விடைகள்

I

நான் கொண்டு வந்தது	ரூ. 1.75
முதல் தம்பி கொடுத்த பணம்	ரூ. 1.75
	ரூ. 3.50
பேனா விலை	ரூ. 2.00
	ரூ.1.50
இரண்டாவது தம்பி கொடுத்த பணம்	ரூ. 1.50
	ரூ. 3.00
	ரூ. 2.00
	ரூ. 1.00
மூன்றாவது தம்பி கொடுத்த பணம்	ரூ. 1.00
	ரூ. 2.00

III

சி	நே	கி	த	(ன்)
ந	று	(ம)	ண	ம்
மு	(த்)	தி	ரை	
(த)	யா	ள	ம்	
(த)	லை	வ	ர்	
நே	ர்	(மை)		
இ	(னி)	ப்	பு	

நம்மிடம் இருக்க வேண்டியது :

ம	னி	த	த்	த	ன்	மை

IV 1. இருவருமே ஒரே நேரத்தில் படித்து முடித்திருக்கின்றனர்.

2. 1, 2, 3 (1+2+3 = 6; 1 x 2 x 3 = 6)

V 11 நிமிஷம்

VI 1.


ஆண்கள்	– 25	25 x 2 = 50
பெண்கள்	– 25	25 x 1 = 25
குழந்தைகள்	– 50	50 x ½ = 25
	100 பேர்	தோசைகள் 100


2. அந்த நான்கு இலக்க எண்: **1260**


VII 1. அந்த எண் 215

2. ஒரு பறவையை சுட்டதும் மற்றப் பறவைகள் பறந்து சென்றுவிடும். எனவே அவர்கள் ஒரே ஒரு பறவையை மட்டும் சுட்டு வீழ்த்தியிருப்பார்கள்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!







செல்ல நாய்!


எனது பெரியப்பா வீட்டு வளர்ப்பு நாய்க்கு நோய் வந்துவிட்டது. கால்நடை மருத்துவர் இந்த நாயை இனிமேல் வீட்டில் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லிவிட்டார். பிரியமான நாயைக் கொல்ல பெரியப்பா வீட்டில் யாருக்கும் மனம் வரவில்லை. வீட்டில் வைத்துக் கொள்ளவும் முடியாத நிலை. அதனால் எங்காவது கண்காணாத தூரத்தில் கொண்டு போய் விட்டுவிடலாம் என்று முடிவு செய்தார்கள். நாயுடன் பெரியப்பா ஆட்டோவில் கிளம்பினார். சிவகங்கை செல்லும் சாலையில் மூன்று கிலோ மீட்டர் தாண்டி ரயில்வே கேட் டருகில் ஆட்டோவை நிறுத்தினார். நாயை இறக்கி, அதற்குப் பிடித்த இறைச்சியைப் போட, ஆர்வமாக அதனை உண்ணத் தொடங்கியது. ஏற்கெனவே பேசியபடி ஆட்டோ டிரைவர் ஆட்டோவை ஸ்டார்ட் செய்யாமல், சிறிது தூரம் தள்ளிச் சென்றார். பிறகு பெரியப்பா ஏறியவுடன் ஆட்டோ கிளம்பியது. பெரியப்பா பெரிய பிரச்னை தீர்ந்த சந்தோஷத்தில் வேறு இரு இடங் களுக்குச் சென்று விட்டு வீட்டுக்கு வந்தார். வாசலில் பிரியமான நாய் வாலை ஆட்டியவாறு நின்றிருந்தது. பெரியப்பா முகத்தைப் பார்க்க வேண்டுமே!


– பொன்திருவரங்கன்,
ஆறாம் வகுப்பு,
ஆர்.சி. பள்ளி,
மானாமதுரை.

குத்து!

அத்தைப் பெண் சபீதா விடுமுறையைக் கழிக்க எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். நாங் கள் தாயம் விளையாடும்போது அவளும் பிடிவாதமாகச் சேர்ந்து கொண்டாள். விளையாட் டைப் பற்றி சரியாகத் தெரியாமல் இஷ்டத்திற்குக் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தாள். வெளிச் சுற்று முடிந்து உள் சுற்றுக்கு அவள் காயை நகர்த்த முயன்றபோது என் அக்கா, ''யாரையாவது குத்தினால்தான் உள்ளே போக முடியும்'' என்றாள். உடனே அவள் என் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டாள். நானும் அக்காவும் திருதிருவென விழித்தோம். ''சௌமியைக் குத்திட்டேன். இப்ப உள்ளே போறேன்'' என்று சபீதா காய்களை நகர்த்த வலியை மறந்து நானும் அக் காவும் சிரித்தோம்.

– எஸ். சௌமியாயனி,
ஏழாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ்
உயர்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.







நகரத்தில் ஆடு கூட அதிசயம்!

அறிவு வளரும்!

என் தம்பி ஏழாம் வகுப்பு படிக்கிறான். அவன் படிக்கும் நேரம் மிகவும் குறைவு.
டீ.வி. பார்ப்பது, கதைப் புத்தகம் படிப்பது, விளையாடுவதில்தான் அதிக நேரத்தைச்
செலவிடுவான். "ஏண்டா இப்படி நேரத்தை வீணடிக்கிறே? ஒழுங்காகப் படிக்கக்
கூடாதா?" என்று புத்திமதி சொல்லிக் கொண்டே இருப்பேன். அரையாண்டுத் தேர்வு
முடிந்து ரேங்க் கார்டு வாங்கி வந்தான் தம்பி. ஆச்சரியம்! என்னைவிட மதிப்பெண்
கள் அதிகம் பெற்றிருந்தான். என் ரேங்க் கார்டைப் பார்த்துவிட்டு "வெறும்
புத்தகத்தை மட்டும் படித்தால் போதாது. விளையாட்டு, டீ.வி. கதைப்
புத்தகங்களும் பொது அறிவை வளர்க்கும்" என்றானே பார்க்கலாம்!
அவன் சொல்வது உண்மை என்று எனக்குப் புரிந்தது.

– ஆர். பாலகுமார்,
செம்பனார் கோயில்,
தரங்கம்பாடி தாலுக்கா.






நட்சத்திரம் தெரியுமா?

வீட்டில் எல்லோரும் கோவிலுக்குச் சென்றிருந்தோம். பக்கத்து வீட்டுச் சுட்டிப்பையனும் எங்களுடன் வந்திருந்தான். அர்ச்சனை சீட்டு வாங்குமிடத்தில் கோவில் ஊழியர் பெயர் கேட்டார். சுட்டிப் பையனும் "பிரசாந்த்" என்று சொல்லி விட்டான். அவர் "நட்சத்திரம் தெரியுமா?" என்று கேட்டார். அவன் "இப்ப தெரியாது. ராத்திரிதான் தெரியும்" என்று சொல்லவும் அங்கிருந்த அனைவரும் சிரித்து விட்டனர்.

– மா. மகேஷ்,
தாரமங்கலம்.

ஆடு!

கிராமத்திலிருந்து ஒரு தாத்தா எங்கள் வீட்டிற்கு வந்தார். நானும் தங்கையும் சுவாரசியமாக டீ.வியில் வரும் விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். தாத்தா "நான் வந்ததைக் கூட கவனிக்காமல் டீ.வியில் இப்படி மூழ்கியிருக்காங்களே" என்றார் வருத்தத்துடன் அம்மாவிடம். "அவங்களுக்கு 'ஆட்'(விளம்பரம்) என்றால் ரொம்பப் பிடிக்கும்" என்றார் அம்மா. "நகரத்துல வளர்கிற குழந்தைகளுக்கு ஆடு கூட அதிசயமா தெரியுது. கிராமத்துக்கு ஒருமுறை அழைச்சிட்டு வந்தால் நிறைய ஆடுகளைப் பார்த்து சந்தோஷப்படுவார்களே" என்றார் தாத்தா. நாங்கள் பட்டென்று சிரித்துவிட அம்மா கண்டித்தார்.




– ப. சௌந்தர்யா,
ஐந்தாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி, மடிப்பாக்கம்.


விதைகளின் விந்தைகள்

ஆழி


அதிகமான தாவரங்கள் விதைகளின் மூலம்தான் இனப் பெருக்கம் செய்கின்றன. தாவரங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பது போல, விதைகளும் மாறுபடுகின்றன!

விதைகளில் 'ஒற்றைவிதை இலை', 'இரட்டை விதை இலை' என இருக்கின்றன. ஒற்றைவிதை இலைத் தாவரங்கள்: நெல், சோளம், மூங்கில் முதலியவை. இரட்டை விதை இலைத் தாவரங்கள்: அவரை, கடலை, முருங்கை முதலியவை.


நெல்



அவரை

ஓர் அவரை விதையின் பாகங்கள்:





விதைகளின் வடிவங்கள் பல விதங்களில் இருக்கின்றன; பல விதங்களிலும் பரவுகின்றன. காற்றினால், நீரினால், விலங்குகளால், பறவைகளால், பூச்சிகளால்....

இது ஆர்சிஸ் என்னும் செடி. இதன் விதை மிகவும் சிறியது. ஓர் அரிசியின் எடையில் 15,000-இல் 1 பாகம் தான் இருக்கும். உலகில் மிகவும் சிறிய விதை இதுதான். இந்த விதை காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு, பல கி.மீ. தூரம் பரவும்!




உலகிலேயே மிகப் பெரிய விதை 'கடல் பனை'யின் விதைதான். இதன் எடை சுமார் 23 கிலோ. கடல்பனை முளைத்து 100 ஆண்டுகள் கழித்துத்தான் பூக்கத் தொடங்கும். காய் முற்றுவதற்கு 10 ஆண்டுகள் ஆகும்! விதை முளைப்பதற்கு 3 ஆண்டுகள் ஆகும்! இது கடல் நீரில் மிதந்து சென்று பரவுகிறது. இந்த விதையினை இரண்டாக அறுத்துத்தான் திருவோடு செய்யப்படுகிறது. கடல் பனையின் பிறப்பிடம் ஸீசெல்ஸ் தீவுகள்.







இது 'நார்வே மேப்பில்' என்னும் தாவரத்தின் விதை. இது காற்று வீசும் போது, வானத்தில் சிறகடித்துப் பறப்பது போல் வெகுதூரம் சென்று பரவுகிறது.

இது ஜாவாவில் உள்ள 'ஜானோனியா' என்னும் தாவரத்தின் விதை. சுமார் 8 செ.மீ. நீளமும் 5 செ.மீ. அகலமும் இருக்கும். கிளைடர் விமானம் மாதிரி காற்றில் பறந்து சென்று பரவும். இந்த விதையை மாதிரியாக வைத்து 1897-ஆம் ஆண்டு 'இகோ எட்ரிச்' என்னும் விஞ்ஞானி 10 மீட்டர் நீளமும் 70 கிலோ எடையும் உள்ள ஒரு கிளைடரைச் செய்து அதில் 900 மீட்டர் தூரம் வானில் பறந்தார்!






'சைகாமோர்' என்னும் செடியின் விதை கனமானது தான். ஆனால், நான்கு இறகுகள் போன்ற இதன் அமைப்பினால் காற்றில் மிக உயரத்தில் தூக்கிச் செல்லப் பட்டுச் சுழன்று சுழன்று கீழே இறங்கி முளைக்கும்!





'பூனைக் காது' என்னும் செடியின் விதை இது. நீண்ட உரோமங்களுடன் கூடியது. காய் முற்றி வெடித்தால், விதைகள் காற்றினால் வெகு தூரம் தூக்கிச் செல்லப் பட்டுப் பல திசைகளிலும் பரவி விடும்!


இது 'குர்ச்சி' என்னும் செடியின் காய். காய்கள் இரட்டையாகக் காய்க்கும். காய் முற்றி வெடித்துக் குஞ்சம் போன்ற விதைகள் காற்றில் தூக்கிச் செல்லப் படுகின்றன!




இது 'நீலப் புட்டி' என்னும் செடியின் விதை. பார்ப்பதற்குச் சிறிய ஷேவிங் பிரஷ் மாதிரி இருக்கும். இதில் உள்ள நார் இழைகளினால் காற்றின் மூலம் தூக்கிச் செல்லப்பட்டுப் பரவுகிறது.













'டச் மீ நாட்' (என்னைத் தொடாதே) என்னும் செடியில் உள்ள காய்ந்த காயை யாராவது ஈர விரலால் தொட்டால் போதும்; அது பட்டென்று வெடித்துப் பல திசைகளிலும் விதைகள் சிதறிவிடும்!


அமெரிக்காவில் 'பாங்ஷியா' என்னும் மரங்கள் வளர்கின்றன. காடுகளில் ஏற்படும் தீயினால் இந்த மரங்கள் தாக்கப்படும் போது, விதைகள் வெப்பத்தினால் வெடித்துச் சிதறி முளைக்கின்றன.

இது 'கிராப்பில்' என்னும் கொடித் தாவரத்தின் விதை. இது மேய்ச்சலுக்கு வரும் பிராணிகளின் மேல் குத்தி, மாட்டிக் கொண்டு, அவை போகும் இடங்களில் பரவிவிடும்!







இது 'தேள் கொடுக்குக் காய்ச் செடி'யின் விதை. காய் முற்றியவுடன் தேளின் கொடுக்குப் போன்ற விதை வெளிப்படும். பிராணிகளின் உடலில் மாட்டிக் கொண்டு பரவும்.



'காம்போசிட்டா' என்னும் வகையைச் சேர்ந்த செடியின் விதை இது. ஏராளமான முட்களுடன் இருக்கும். உரோமம் அடர்ந்த கால்நடைகளின் உடலில் குத்திக் கொண்டு பரவும்!






'பர்டோக்' என்னும் தாவரத்தின் காய் இது. காய் முற்றியவுடன் ஏராளமான சின்னச் சின்ன கொக்கிகளுடன் இருக்கும். பிராணிகளின் உடலில் ஒட்டிக் கொண்டு போகும்.


இது மற்றொரு கொக்கிப் பழச் செடியின் விதை. இதன் முனைகள் தூண்டில் முள் போல் மிகக் கூர்மையாக இருப்பதால் சுலபமாக விலங்குகளின் மேல் தோலில் குத்தி மாட்டிக் கொண்டு போய் எங்காவது விழுந்து முளைக்கும்!




மூங்கிலில் 'மூஸி' என்னும் ஓர் இனம் ஜப்பானில் இருக்கிறது. இதன் விதை மரத்தில் இருக்கும் போதே வேருடனும் குருத்துடனும் உருவாகிவிடும். விதை கீழே விழுந்தவுடனே முளைத்து வளரத் தொடங்கிவிடும்!

'ப்ரையோ ஃபைலம்' என்னும் செடிக்கு விதை என்று தனியாக இல்லை. இதன் இலையே நிலத்தில் விழுந்தால் முளைத்துச் செடியாகிறது. இலையின் ஓரங்களில் சிறு சிறு முளைகள் உள்ளன.





காளான்கள் தாவர இனம்தான். ஆனால் இவற்றுக்கு விதை, பூ, இலை, என எதுவும் இல்லை. 'விதைத்தூள்' என்னும் பொருளின் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன. இந்த விதைத் தூள்கள், காற்று, மண், நீர் முதலிய எல்லா இடங்களிலும் கலந்து இருக்கின்றன.



காய் உண்டாவதற்கு முன்பே விதையை வெளியே உருவாக்கி விடுவது முந்திரி மரம். விதையின் மேல் இருக்கும் பகுதியே பருத்துக் கனியாகிவிடும்!

விதைகளிலேயே மிகவும் புனிதமாகக் கருதப் படுவது உருத்திராட்சம். இதில் சுமார் 90 இனங்கள் இருக்கின்றன! மாலையாகக் கோப்பதற்கு வசதியாக இயற்கையிலேயே துளை உள்ளது உருத்திராட்சம்!



● **எஸ். நாகராஜன், மேலப்பாதி.**

? ரத்தசோகை என்றால் என்ன? எப்படி குணப்படுத்துவது? தவிர்ப்பது எப்படி?

! ரத்தம் சிவப்பாக இருப்பதற்கு ரத்தச் சிவப்பணுக்களில் உள்ள 'ஹீமோகுளோபின்' என்ற நிறமி தான் காரணம். 100 மி.லி ரத்தத்தில் 14.5 கிராம் ஹீமோகுளோபின் இருக்க வேண்டும். இந்த இயல்பு அளவு குறையும்போது ரத்தசோகை (Anaemia) என்ற நோய் ஏற்படுகிறது. நம் நாட்டைப் பொறுத்தவரை ஆண்களுக்கு 13 கிராமிற்கும், பெண்களுக்கு 11 கிராமிற்கும் குறைவாக ஹீமோகுளோபின் இருந்தால் ரத்த சோகை என்று கொள்ளலாம். இந்த நோய் ஏற்பட்டவர்களுக்குத் தோல், கண்கள், நகங்கள் வெளிறிக் காணப்படும். அடிக்கடி தலைவலி, சோர்வு, மயக்கம், பெருமூச்சு வாங்குதல் ஆகியவை ஏற்படும். நகங்களில் குழி விழுதல், கைகால்களில் ஊசி குத்துதல் போன்ற உணர்ச்சி ஏற்படுதல், கை, கால், முகம் ஆகியவை வீங்குதல் போன்ற அறிகுறிகள் ரத்த சோகை நோய் தீவிரமாக உள்ளது என்பதை எடுத்துக் காண்பிக்கும். இந்த நோயைக் குணப்படுத்தவும் தடுக்கவும் இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் - சி மற்றும் வைட்டமின் பி12 சத்துகள் உள்ள உணவுகள் உதவும். கீரைகள் (குறிப்பாக முருங்கைக் கீரை), பழ வகைகள் (குறிப்பாக, பேரீச்சம் பழம், எலுமிச்சை, திராட்சை) பச்சைக் காய்கறிகள் (முட்டைக்கோஸ்), இறைச்சி, ஈரல், பால், முட்டை போன்ற உணவுகளில் மேற்சொன்ன மூன்று சத்துகள் நிறைந்துள்ளன. இவற்றை அடிக்கடி உணவாக உண்ண வேண்டும். வெல்லம் கலந்த உணவு நல்லது. குடலில் கொக்கிப் புழுக்கள் இருந்தால் ரத்த சோகை மோசமடையும். இதனைத் தவிர்க்க மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குடல் புழுக்கொல்லி மாத்திரை ஒன்றைச் சாப்பிட வேண்டும். காலில் செருப்பு அணியும் பழக்கம் அவசியம். மூல நோய் இருந்தால் தக்க சிகிச்சை பெற வேண்டியது முக்கியம். ரத்தசோகை மிக மோசமாக இருந்தால் இரும்புச்சத்து ஊசிகள், மாத்திரைகள், மருந்துகள் தேவைப்படும்.





மஞ்சள் காமாலை வருவது

● **ஓ.சே. அறிவழகன், திருபுவனம்.**

? மஞ்சள் காமாலை நோய் ஏற்பட என்ன காரணம்? இந்த நோய் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

! வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களினால் ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் அளவுக்கதிகமாக சிதைவடையும்போது மஞ்சள் காமாலை தோன்றும். பித்த நீர்க் குழாய் அடைத்துக் கொண்டாலும் மஞ்சள் காமாலை ஏற்படும். இவை தவிர, மதுவின் பாதிப்பு,





கல்லீரலில் கட்டி, சிழ்க்கட்டி, புற்றுநோய் போன்றவை ஏற்படும்போதும் பிறவியிலேயே கல்லீரலில் வளர்ச்சிக் குறை இருந்தாலும் மஞ்சள் காமாலை ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

ஏன்?

இந்த நோய் வராமலிருக்க குடிநீரைக் காய்ச்சி ஆறவைத்துக் குடிக்க வேண்டும். மருத்துவமனைகளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்திவிட்டு நிராகரிக்கக் கூடிய ஊசிகளை (Disposable Syringes and Needles)யும் ஊசிக்குழல்களையும் பயன்படுத்த வேண்டும். ரத்தம் ஒருவருக்குத் தேவைப்படும்போது தானமாகப் பெறப்படும் ரத்தத்தில் மஞ்சள் காமாலைக் கிருமிகள் இல்லை என்று பரிசோதித்து உறுதி செய்த பிறகே அவருக்கு ரத்தம் ஏற்றப்பட வேண்டும். குளத்து நீரில் குளிக்கக் கூடாது. முறைப்படி மஞ்சள் காமாலைத் தடுப்பூசிகளை அந்தந்த வயதில் போட்டுக் கொள்ள வேண்டும்.



● **கனக. முத்துச்சிதம்பரம், கிழாய்.**

? தண்ணீர் குடிக்கும்போதும் உணவுப் பொருள்களை விழுங்கும்போதும் பற்கள் கூசுவது போல் உள்ளது. இதற்கு என்ன காரணம், டாக்டர்?

! பற்களில் பற்சொத்தை இருந்தால் பற்கூச்சம் ஏற்படலாம். பற்களில் தேய்மானம் இருந்தாலும், ஈறுகள் அதிகம் தேய்வுற்று, வேர்கள் தெரிந்தாலும் பற்கூச்சம் இருக்கலாம். பல் எனாமலில் மட்டும் சொத்தை இருக்குமானால் அந்தச் சொத்தையை எடுத்துவிட்டு பல்லை அடைக்க வேண்டும். பற்கூழ்ப்பகுதி வரை சொத்தை பரவியிருந்தால், பல்லை அகற்றி விட வேண்டியதுதான். வேறு வழியில்லை.



● **கே. சரஸ்வதி, வடுகபட்டி.**


? சாம்பலால் பல் துலக்கினால் பற்களுக்குக் கெடுதலா? பிரஷ் கொண்டு பல் துலக்கும்போது பல்லில் ரத்தம் வருகிறது. இதற்கு என்ன காரணம்?

! சாம்பல், செங்கல், கரித்தூள், உமிக்கருக்கு போன்றவற்றால் பல் துலக்கினால் பற்கள் தேய்ந்துவிடும். எனவே, பற்பொடி அல்லது பற்பசையும் பல் துலக்கியும்தான் நல்லது. இவற்றை வாங்க வசதி இல்லாதவர்கள் ஆலங்குச்சியையோ, வேப்பங்குச்சியையோ அதன் முனையைக் கடித்து இழை இழையாக ஆக்கி, பல்துலக்கியை உபயோகிப்பது போல உபயோகிக்கலாம். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்று சொல்வது இதற்குத்தான். பல் துலக்கும்போது பற்களிலிருந்து ரத்தம் கசிகிறதென்றால் பல் ஈறுகளில் நோய்த் தொற்று இருக்கும்; பற்களில் காரை படிந்திருக்கலாம்; ரத்தம் உறையும் தன்மையில் குறைபாடு இருக்கலாம். நீங்கள் உடனடியாக பல் மருத்துவரை நேரில் அணுகி ஆலோசனை பெறுங்கள்.

இளமை திரும்பிய ரகசியம்!

திருவண்ணாமலைக் குகை ஒன்றில் குக நமச்சிவாயர் படுத்திருந்தார். சீடன் நமச்சிவாயன் கால் அமுக்கிக் கொண்டிருந்தான்.

திடீரென்று சீடன் தனது வேஷ்டியைக் கசக்கி 'ப்பூ' என்று ஊதினான். துள்ளி எழுந்து காலால் தள்ளி விட்டான். குரு எழுந்தார். 'என்ன சமாசாரம்?' என்று கேட்டார்.



"குருநாதா! சிதம்பரத்தில் உள்ள சுவாமி திரை தீப்பிடித்துக் கொண்டது. கசக்கி விட்டேன்" என்றான். ஞான திருஷ்டியால் சிதம்பரம் தில்லைக்கூத்தனின் கர்ப்பக்கிரகத்தைப் பார்த்தார் குகநமச்சிவாயர். அங்கே திரைச்சிலை ஒழுங்கில்லாமல் இருந்தது. பக்தர்கள் ''தானே பிடித்தது. தானே அணைந்தது'' என்று பேசிக் கொண்டனர். குரு திருஷ்டியை திருவண்ணாமலை குகைக்குத் திருப்பினார்.

''அப்பனே! நீ பழுத்துவிட்டாய்! எனக்கே குருவாகி விட்டாய்! இன்றுமுதல் நீ குரு நமச்சிவாயம். நான் ஞான திருஷ்டியில் கண்டதை நீ நொடியில் உணர்ந்து தடுத்தாயே!'' என்று மனமாரப் பாராட்டினார்.


ஒரு இடையன் சினை ஆடு இறந்ததற்காக வருந்தினான். மணலில் விளையாடிக்கொண்டிருந்த குறும்புக்கார சிறுவர்கள் "அதோ அந்தக் குகையில் ஒரு சாமியார் இருக்கிறார். அவர் அற்புத சக்தி வாய்ந்தவர் என்று ஊரெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். நீயும் ஆட்டைக் கொண்டு போய் நிவாரணம் கேளு.

ஆர். பொன்னம்மாள்

உன் பிரச்னையைத் தீர்த்து வைப்பார்'' என்றனர்.

இதை நிஜமென்று நம்பிய அப்பாவி இடையன் குக நமச்சிவாயர் முன் சென்று வணங்கி ஆடு இறந்துவிட்டதால் தன் குடும்பம் படும் கஷ்டத்தைச் சொன்னான். "சரி! ஆட்டை போட்டு விட்டுப் போ. நாளை இதே நேரம் வா" என்றார் குக நமச்சிவாயர்.

ஆட்டைப் போட்டுவிட்டு இடையன் போனான். மறுநாள் குகைக்கு வந்தவன் சாமியார் முன் ஆடும் குட்டியும் விளையாடுவதைக் கண்டு ஆனந்தம் கொண்டான். "எடுத்துக் கொண்டு போ" என்றார் குக நமச்சிவாயர். அவரை வணங்கிவிட்டு ஆட்டையும் குட்டியையும் எடுத்துக் கொண்டு போனான்.



சிறுவர்களிடம் ''பெரிய நஷ்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள்! சாமியார் ஆட்டையும் குட்டியையும் பிழைக்க வைத்து விட்டார். உங்களுக்கு ரொம்ப நன்றிங்க'' என்று சொல்லிச் சென்றான் இடையன்.

அவன் போன பின் "என்னடா இது அதிசயமா இருக்கு! செத்துப் போன ஆடு பிழைச்சதுங்கறதை நீ நம்புறியா?" என்றான் ஒருவன்.

''சுத்த பைத்தியக்காரத்தனம்! ஆடு ஏதாவது விஷச் செடியைத் தின்னு மயக்கமாகியிருக்கும். இந்த அசடு செத்துடுச்சுன்னு அழுதான். அந்தச் சாமி யாருக்கு மூலிகை வைத்தியம் தெரியும். குடுத்துப் பிழைக்க வைச்சிருப்பார்'' என்றான் மற்றொருவன்.

''இவர் குட்டை அம்பலப்படுத்தணும்'' என்றான் இன்னொருவன்.

''எப்படி? நீயே ஒரு யோசனை சொல்லு'' என்றான் அவனருகில் இருந்தவன்.

''நம்ம பிரமன் படுத்தவுடனே தூங்கிடுவான். குறட்டை விட மாட்டான். யானை ஏறினால்கூட தெரியாத கும்பகர்ணன். அவனைத் தூங்க வைத்து சாமியாரிடம் கொண்டு போய் செத்து விட்டான், பிழைக்க வையுங்கன்னு அழுவோம். அவர் முடியாதுன்னா, நாங்களே உயிர் கொடுக்கறோம்னு சொல்லி எல்லாருமாச் சேர்ந்து 'பிரமா'ன்னு கூப்பிடுவோம். பிரமன் எழுந்தவுடன் சாமியார் முகம் பேயறைஞ்ச மாதிரி ஆகிடாதா?'' எனவும் சிறுவர்கள் 'ஹேய்' என ஆனந்தக் கூச்சலிட்டனர்.

''பிரமா! மூச்சை அடக்கிப் படு'' என்று அதட்டினான் ஒருவன். படுத்த பிரமனைத் தூக்கிக்கொண்டு போய் சாமியார் முன் கிடத்தி, ''சாமி! இவன் தாய்க்கு ஒரே பிள்ளை. அப்பா கிடையாது. இவனை நம்பித்தான் இவங்கம்மா இருக்காங்க. திடீர்னு மயக்கமாயிட்டான். பார்த்தா பேச்சு மூச்சே இல்லை! ஆட்டைப் பிழைக்க வைச்ச மாதிரி இவனையும் காப்பாத்தணும்'' என்று கதறினர்.

''ஆடு வாயில்லா ஜீவன். இடையன் ஏழை; அதனால் உதவினேன். இந்தப் பிரமனின் தலையில் இப்படித்தான் மரணம் என்று அந்தப் பிரமன் எழுதி விட்டான். தூக்கிக் கொண்டு போங்கள். என்னால் ஒன்றும் செய்ய முடியாது'' என்றார் குக நமச்சிவாயர்.

''பிரமா நடிச்சது போதும். எழுந்திருடா'' என்றார்கள் நண்பர்கள்.

பிரமன் எழுந்திருக்கவில்லை. நிஜமாகவே இறந்துவிட்டான். சாமியாரின் மகிமையைத் தெரிந்து கொண்ட பையன்கள் அவர் காலில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினர். செய்தி கேட்ட பிரமனின் தாய் வந்து கதறி அழுதாள்.

''அம்மா! தீய செய்கைகளுக்குத் துணை போவதும் தீங்கையே விளைவிக்கும்'' என்ற குக நமச்சிவாயர் யோக நிஷ்டையில் அமர்ந்து விட்டார்.

குருவும் சீடரும் ஒருமுறை சஞ்சீவி பர்வதம் சென்றார்கள். அஷ்டாவதானத்தில் சில அவதானங்களை குக நமச்சிவாயர் கற்காததால் தன் ஆயுள் நீடிக்க வேண்டும் என விரும்பினார். சில அற்புதமான மூலிகைகள் ஆரோக்கியமும் இளமையும் தரும் என்று அறிந்துகொண்ட அவர், சிஷ்யனை சமைக்கச் சொல்லி விட்டு அம்மூலிகைகளைத் தேடி அடர்ந்த காட்டுக்குள் போனார். மலையெங்கும் தேடினார்.

பானையில் சோறு கொதித்தது. பொங்கி வழியாமலிருக்கப் பொருத்தமான ஒரு குச்சியைத் தேடி எடுத்துக் கிண்டினான் சீடன். சாதம் கறுப்பாகி விட்டது. பசியோடு வரும் குரு கோபிப்பாரே என்று பயந்த சீடன் அந்தச் சாதத்தை உப்பிட்டுத் தானே சாப்பிட்டு விட்டான்.


பிறகு பானையைக் கழுவி விட்டு மறுபடி சமைத்தான். தேடியது கிடைக்காமல் ஏமாற்றத்தோடு வந்தார் குக நமச்சிவாயர்.

''தம்பி, நீ யார்? உன்னைச் சமைக்கச் சொல்லிவிட்டு என் சீடன் எங்கு போயிருக்கிறான்?'' என்று கேட்டார்

''நேற்று எதுவரை பாடம் நடத்தினேன்?''

''பெல் அடிக்கிறவரை டீச்சர்!''

— எம். வினோதா



குக நமச்சிவாயர்.

"குருவே! நான் தங்கள் சீடன் தான்! என்னைத் தங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா? தங்கள் பார்வை பழுது பட்டுவிட்டதா? என் முகம் கோரமாகிவிட்டதா?'' எனப் பதறினான் குரு நமச்சிவாயன்.

''இல்லை! என் பார்வை துல்லியமாக இருக்கிறது. நான் போன பின் நடந்ததை ஒளிக்காமல் சொல். இந்த யௌவனமும் தேஜஸும் வந்த ரகசியத்தைச் சொல்'' என்று குரு பரபரத்தார்.

சீடன் நடந்ததைச் சொன்னான்.

"சரி! கிளறிய குச்சி எங்கே? அதுதான் நான் தேடி வந்த சமித்து'' என்றார் குருநாதர்.


"பயந்துபோய் விட்டெறிந்து விட்டேன்'' அவன் காட்டிய இடம் கிடு கிடு பள்ளம். குரு பெருமூச்செறிந்தார். அங்குமிங்கும் ஓடி சில பச்சிலைகளைத் தேடி எடுத்து கசக்கி சீடனிடம் கொடுத்து தின்னச் சொன்னார்.

சீடன் தின்றான்.

"வாந்தி வந்தால் இதில் எடு'' என்று ஒரு கலயத்தைக் காட்டினார்.

சீடன் கலயத்தில் வாந்தி எடுத்தான். குரு அசிங்கம் கொள்ளாமல் அதைச் சாப்பிட்டார். அவரது நரைத்த தாடியும் தலைமுடியும் கறுத்தன. குரு இளைஞனாக மாறியது கண்டு சீடன் மகிழ்ந்தான்.

''குச்சியை எறியாமலிருந்திருந்தால் எத்தனையோ பேருக்கு வாலிபம் திரும்பியிருக்கும்'' என குரு பெருமூச்செறிந்தார். அவர் விரும்பியபடி அஷ்டாவதானமும் கற்று அதை நல்ல வழிக்கே பயன்படுத்தினார் குக நமச்சிவாயர்.



சர்வதேச மாணவர் அடையாள அட்டை!

இன்று உலகில் இந்தியா உட்பட 93 நாடுகளில் யுனெஸ்கோ நிறுவனம் சர்வதேச மாணவர் அடையாள அட்டையை வழங்கி வருகிறது. இந்த அட்டையைப் பெற மாணவ, மாணவியர் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். பள்ளி அல்லது கல்லூரி சான்றிதழ் நகலுடன், போட்டோ ஒன்றையும் கொடுத்து இருநூறு ரூபாய் செலுத்தினால் போதும், மாணவர் அட்டை கிடைத்து விடும். சென்னையில் உள்ள நந்தனம், டெம்பிள் டவர் கட்டடத்தில் ஸ்டூடண்ட் டிராவல் இன்ஃபர்மேஷன் – யுனெஸ்கோ அட்டைகளை வழங்குகிறது. இந்த அட்டையால் கிடைக்கும் சலுகைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் தருகிறது.

இந்த அட்டையால் என்ன பலன்? தமிழ்நாட்டில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நாமக்கல், வேலூர், பாண்டிச்சேரி, தஞ்சாவூர், விருதுநகர், கோவில்பட்டி, ஈரோடு போன்ற இடங்களில் உள்ள கடைகளில் சலுகைகள் பெறலாம். விமானம், ரயில், பேருந்து பயணங்களிலும் சலுகை உண்டு. இந்தியாவில் 800 கடைகளில் மாணவ, மாணவியருக்கு சலுகைகள் கிடைக்கிறது.

வெளிநாடுகளுக்கு மேற்படிப்பிற்குச் செல்லும் மாணவர்களுக்கு இது பெரிதும் உதவுகிறது. நீங்களும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே!

– ப. தனலக்ஷ்மி இராஜேந்திரன்,
சென்னை.

மின்சாரம் தரும் ஊர்!

நேருஜி கண்ட கனவை நனவாக்கி வரும் தொழில் நகரம் எங்கள் ஊர். கையில் வெண்புறாவுடன் நம்மை வரவேற்கும் நேருசிலை; லாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனம்; ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஜாதி, மத, மொழி, இன, வட்டார உணர்வுகளால் சிறிதும் பாதிக்கப்படாத முன்மாதிரி சமத்துவபுரம். அருகிலேயே கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், பண்ருட்டி, பாண்டிச்சேரி. மின்சக்தியினை தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி மற்ற தென்னக மாநிலங்களுக்கும் (1470 மெகா வாட்) வாரி வழங்கும் நகரம் எங்களது நெய்வேலி நகரம். இங்கு பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள், அனல் மின் நிலையங்கள் உரத் தொழிற்சாலை உள்ளன.



இருபதாயிரம் ஊழியர்களும் குடியிருக்க, திட்டமிட்டு அழகாக அமைக்கப்பட்டுள்ள எங்களது நகருக்கு அவசியம் வாருங்கள். நீண்ட சாலைகள் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்கள். ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் தென்னை, மா, பலா, வாழை, முந்திரி, முருங்கை என மரங்கள். இயற்கை எழில் கொஞ்சும் ஏ.ஸி. தேவையில்லாத வீடுகள். தூய்மையான நீர். குறைந்த வாடகை. குறைந்த மின் கட்டணம். மின்தடை என்பதே தெரியாத சொர்க்கம். மிகக்குறைந்த டவுன் பஸ் கட்டணம். செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் உழவர் சந்தை. நகரத்தின் பரபரப்பே காணப்படாத 'அமைதி நகரம்'. மாலையிலே ஓய்வெடுக்க பொன்விழா பார்க் மற்றும் நேரு பார்க்.


அனைத்து மதத்தவர்களுக்குமான கோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள் உள்ளன. உலகிலேயே பெரிய பஞ்சலோக நடராஜர் சிலை உள்ளது இங்கேதான். அருகே தியான மண்டபம். வில்லுடையான்பட்டு முருகன் கோயிலில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழா பிரம்மாண்டமானது. பத்து நாட்களும் நகரமே விழாக் கோலம் காணும்.

குடும்பத்திற்குத் தேவையான அத்தனை பொருட்களும் வாங்க, பெரிய மெயின் பஜார். வெளியூரிலிருந்து வருபவர்கள் தங்க சிறந்த ஹோட்டல்கள் மற்றும் விருந்தினர் மாளிகைகள் உள்ளன.

கடலூர் மாவட்டத்திலேயே-அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அடுத்து

மிகப் பெரிய பொது நூல் நிலையம் இங்குதான் உள்ளது. எல்லா நூல்களும் எல்லா மொழி நூல்களும் கிடைக்கும். வீடு தேடி வரும் நகரும் நூலகமும் உண்டு. குழந்தைகளுக்கென்றே தனி நூலகப் பிரிவும் உண்டு. அங்கே எப்போதும் குழந்தைகளின் கூட்டம் இருக்கும். அத்துடன் ஆண்டு தோறும் புத்தகக் கண்காட்சியும் நடைபெறும்.

விளையாட்டு மைதானங்கள் பல உள்ளன. பல்லாயிரக் கணக்கானவர்கள் கண்டு களிக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது பசும்புல் நிறைந்த பாரதி ஸ்டேடியம். அருகில் நீச்சல் குளம். விடுமுறை நாட்களில் எல்லா விளையாட்டுக்களுக்குமே சிறுவர், சிறுமியர்க்கு வல்லுநர்களைக் கொண்டு இலவசப் பயிற்சி; சான்றிதழ். அத்துடன் பரிசும் உண்டு. யோகாவிற்கு மிகவும் சிறப்பான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டிலேயே 'ஆர்ட்டீஷியன் கிணறுகள் உடைய ஊர் நெய்வேலி மட்டுமே. சுரங்கப் பணிகளுக்காக ராட்சச குழாய்களின் மூலம் நீர் இறைக்கப்படுவதால் தற்போது நீர் மட்டம் குறைந்துள்ளது. சென்னையின் தாகத்தைத் தீர்க்க இங்கிருந்து குடிநீரும் அனுப்பப்படுவது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

இப்படி நவீன வசதிகளும், தூய்மையான சுற்றுப் புறச் சூழலும் இருப்பதால் எங்களூர்வாசிகள், கோடையில் வெளியூர் செல்வதே இல்லை. வீடுகளிலெல்லாம் விருந்தினர் கூட்டம். நீங்களும் வாருங்களேன். நெய்வேலி, மக்கள் தொடர்புத் துறை அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறது.

- வை.அர்விந்த்
நெய்வேலி.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கிக்குக் கிழக்கே 20 கி.மீ. தூரத்தில் உள்ளது எங்கள் ஊரான 'நீர் விளங்குளம்'. நீர் வளமும் நில வளமும் மிகுந்து இருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது என்பது வாய்வழிச் செய்தி.

வரலாற்றுச் சிறப்பு மிக்க விஷயங்கள் எங்கள் ஊரில் இல்லாவிட்டாலும் இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் நிறைய உண்டு. கோடை நாட்களில் கூட நீர்வற்றாத 'பெரிய குளம்' எங்கள் ஊரின் முக்கியச் சிறப்பு. பக்கத்து ஊர்களிலிருந்து கடும் கோடையில் எங்கள் ஊருக்கு வந்து 'பெரிய குளத்தில்' குளித்து மகிழ்ச்சியோடு செல்வர்.

ஸ்ரீபால சுப்பிரமணிய சுவாமி கோயில்தான் எங்கள் ஊருக்கு அருள் பாலித்து வரும் தெய்வம். வருடா வருடம் பங்குனி உத்திரம்போது பத்து நாட்கள் நடக்கும் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும். சமீப காலத்தில் திரைப்படங்கள், நாடகங்கள் என ஏற்பாடு செய்தாலும் சில வருடங்களுக்கு முன்பு வரை எம்.எம்.மாரியப்பா, சூலமங்கலம் சகோதரிகள், டி.ஆர்.மகாலிங்கம் போன்றோர் இங்கு வந்து நிகழ்ச்சிகள் நடத்தியது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு இருந்தும் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகவே உள்ளோம். சாலை வசதி குறைவு. ஒரு நாளைக்கு இருமுறைதான் இங்கு பேருந்தே வருகிறது. என்ன குறைபாடுகள் இருப்பினும் இதைவிடை மோசமான கிராமங்களை நினைத்து சமாதானமடைகிறோம். ஒரு முறையாவது எங்கள்



ஊருக்கு வந்து குளிர்ச்சியான பெரிய குளத்தில் நீராடிச் செல்லுங்கள்!

- ப. காளிதாசன்
நீர்விளங்குளம்.

மோகனூரானது நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த நகரம் ஆகும். நாமக்கல்லில் இருந்து தெற்கில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது மோகனூர்.

பழங்காலந்தொட்டே பெருமை பெற்ற ஊராகும். 'மோகூர்' என்ற பெயரிலும், 'வல்வகிரி க்ஷேத்திரம்' என்ற பெயரிலும் விளங்கி வந்த ஊரே இப்போது மோகனூர் எனப்படுகிறது. சக்தி முதன்முதலாக தன் மகனைக் கண்டதால் 'மகனூர்' என்ற பெயரும் இதற்கு உண்டு.

இவ்வூர் கோவிலில் உள்ள சிவ பெருமானின் பெயர் 'அசலதீபேஸ்வரர்'. இங்கு வீற்றிருக்கும் சிவன் மேற்கு நோக்கியும் அன்னை கிழக்கு நோக்கியும் உள்ளது தனிச் சிறப்பாகும். இராமச் சந்திர நாயக்கர் காலத்தில் கி.பி. 1454-ஆம் வருடம் அமையப் பெற்றது இந்த ஸ்தலம். ஆடி மாதம் 18ந் தேதி சிறப்பான விழா காலமாகும். ஏராளமான பக்தர்கள் ஆற்றில் நீராடி விட்டு இத்திருக்கோயிலில் வணங்குவர்.

'கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்குதன் குமரி துறை யாடிலென்
ஓங்கு மா கடல் ஓத நீராடிலென்
எங்கும் ஈசன் என்னாதவர்க்
கில்லையே'

என்கிற அப்பர் பாடலில் வரும் 'கொங்குதன் குமரி' இந்த ஸ்தலத்தைக் குறிப்பதாகும். எனவே அனைத்து பக்த கோடிகளும் இந்த ஸ்தலத்திற்கு வந்து பயன் பெறுமாறு அன்போடு கேட்டு கொள்கிறேன்.

மற்றும் இங்கு அமைந்துள்ள நாவலடி யான் கோவில் மிகவும் சிறப்புள்ளதாகும். மாதம் தோறும் வருகின்ற அமாவாசை அன்று பல ஊர்களில் இருந்து மக்கள் இங்கு வந்து நாவலடியானை வழிபட்டுச் செல்கின்றனர்.

அ. கோபாலகிருஷ்ணன்
பன்னிரண்டாம் வகுப்பு
அரசினர் மேல் நிலைப்பள்ளி
மோகனூர்.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள திருத் தங்கல் எங்கள் ஊர். சிவகாசிக்கு அருகில் உள்ளது. அந்தக் குட்டி ஜப்பானின் வளர்ச்சியில் எங்கள் ஊருக்கும் பங்குண்டு.

எங்கள் ஊர்ப் பெருமாள் கோவிலுக்கு ஒரு பெருமை உண்டு. பெருமாள் நின்ற நிலையில் (மணக்கோலத்தில்) காட்சி தருகிறார். எனவே இவர் நின்ற நாரா யணப் பெருமாள் எனப்படுகிறார். செங்க மல நாச்சியம்மையை மணந்த கையோடு இங்கு தங்கிச் சென்றதால் திருத்தங்கல் என்று பெயர் வந்தது.

இத்திருக்கோயிலை ஒட்டினாற் போல் முருகன் கோவில் உள்ளது. திருத்தங்கல் முருகனை வழிபட்டால் வருத்தங்கள் தீரும் என்பது ஐதீகம்.

நீங்களும் ஒரு முறை எங்கள் ஊருக்கு வந்து பெருமாளை தரிசித்துச் செல்லுங் களேன்.

அனைவரும் வருக!
திருவருள் பெறுக!

- பி. மணிகண்டன்,
பதினோராம் வகுப்பு,
இ.ரா. அரசு மேல் நிலைப் பள்ளி,
திருத்தங்கல்.

1. புற்று நோயைக் குணப்படுத்த உதவும் கதிர்வீச்சு ________

2. ஐரோப்பாவையும் இங்கிலாந்தையும் பிரிக்கும் கால்வாய் ________

3. குலோத்துங்கன் மன்னரின் புகழ் பாடும் நூல் ________

4. மரபியலின் தந்தை ________

5. உலகின் மிக ஆழமான கடல் ________

6. இந்தியாவின் தேசிய விளையாட்டு ________

7. உடல் பாதுகாப்புப் போர் வீரர்கள் என்பவை ________

8. பறக்கும் பாலூட்டி ________

9. மலேசியாவின் தலைநகர் ________


10. பாரத ரத்னா பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அணுவியல் விஞ்ஞானி ________



கோகுலம் க்விஸ்

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள். விடைகளை அனுப்புவதோடு முகவரிக் கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி **31.7.2000**

கோகுலம் சுழல் கோப்பை



கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது.

சுழல் கோப்பையைக் கைப்பற்ற போட்டி வலுத்து வருகிறது. உங்கள் பள்ளிக்குக் கோப்பையைப் பெற்றுத் தர விரும்பினால் உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் ஐந்து மாதங்களே உள்ளன!

ஆசிரியர்
கோகுலம்
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97





பானைக்குள் என்ன?

சற்றுவாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

சன்னாசி, சாம்பான் என்ற இரு நண்பர்கள் பக்கத்து பக்கத்து வீடுகளில் வசித்து வந்தனர். இரண்டு பேரும் ஒற்றுமையாக மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தனர்.

சானவி ஆற்றில் வளமான மீன்கள் ஏராளம்! சன்னாசி படகை ஓட்டுவான். சாம்பான் படகில் அமர்ந்தவாறு வலையை வீசி மீன்களைப் பிடிப்பான். மாலையானதும் கிடைத்த மீன்களை விற்றுப் பணத்தை இருவரும் சரி சமமாகப் பிரித்துக் கொள்வர். வீட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்கிச் செல்வர். இருவரின் ஒற்றுமையைக் கண்டு ஊரே வியந்தது.

ஒருநாள் அதிகாலை நேரம் வழக்கம் போல சன்னாசியும் சாம்பானும் மீன் பிடிக்க வலையுடன் சென்றனர். சன்னாசி படகை ஓட்டிச் சென்றான். சாம்பான் வலை வீசிப் பிடித்த மீன்களை எடுத்துக் கூடையில் போட்டுக் கொண்டான்.

அன்று வழக்கத்தைவிட அதிக அளவில் மீன்கள் கிடைத்தன. இருவருக்கும் ரொம்ப சந்தோஷம். நிறைய பணம் கிடைக்கும், குழந்தைகளுக்கு நல்ல துணியாக எடுக்க வேண்டும் என்று இருவரும் பேசிக் கொண்டார்கள். ஆற்றின் நடுவில் வந்து கொண்டிருந்தபோது, வலையை வீசிய சாம்பான், கனமான ஏதோ பொருள் சிக்கிக் கொண்டதை உணர்ந்தான். வலையை எடுத்துப் பார்த்தபோது ஒரு பெரிய பானை மூடியுடன் இருந்தது. தூக்கினால் 'கலகல' வென்று சத்தம். நகையோ, நாணயங்களோ இருக்கும் என்று எண்ணிய அவனுக்கு மனதில் சந்தோஷம். ஆனால் ஏனோ இத்தனை நாளுமில்லாமல் விபரீதமாக உள்ளத்தில் கள்ளம் புகுந்தது. 'ஆஹா! எவ்வளவு பெரிய பானை. இதில் உள்ளதை நாமே வைத்துக் கொண்டு பெரிய பணக்காரனாகி விடலாம். கஷ்டப்பட்டு உழைக்க வேண்டாம். நினைத்ததைச் செயல்படுத்த எண்ணி பானையை மறைத்து வைக்க இடம் தேடினான். 'சட்' டென்று திரும்பிப் பார்த்த சன்னாசிக்கு, சாம்பானின் இந்தச் செய்கை வியப்பாக இருந்தது. உடனே அவன், "என்னப்பா! எது கிடைத்தாலும் நம் இருவருக்கும் சம பங்குதானே எப்போதும். இப்போது ஏன் பானையைத் தனியாக மறைத்து வைக்கப் பார்க்கிறாய்" என்று கேட்டான். "நான்தானேப்பா வலையைப் போட்டு எடுத்தேன். அதனால் அது எனக்குத் தான் சொந்தம்" என்றான் சாம்பான்.

"நான் படகை ஓட்டி வராவிட்டால் நடு ஆற்றில் உன்னால் வலை வீச முடியுமா? எனக்கும் அதில் பாதி பங்கு உண்டு" என்றான் சன்னாசி. இருவருக்கும் சண்டை வர கரைக்கு வந்து பானையை எனக்கு, உனக்கு என்று அடித்துக் கொண்டு தகராறு பண்ணியதில் பானை கை நழுவி விழுந்து உடைந்து இரண்டாகப் பிளந்தது. உள்ளே பார்த்தால் கற்களும் மண்ணும் நிறைந்து இருந்தது. ஒரு நிமிடத்தில் தங்களது நட்பைப் பிரித்த அந்த உடைந்த மண்பானையைப் பார்த்து இருவரும் அதிர்ந்து நின்றனர்.

– வி. வெங்கட சுப்ரமணியன்,
சென்னை – 36.



கோகுலம் நியூஸ்!

குழந்தைகள் மாநாடு!

இரண்டாயிரமாவது ஆண்டின் சர்வதேச குழந்தைகள் மாநாடு இங்கிலாந்தில் உள்ள ஈஸ்ட்பர்ன் நகரில் மே மாதம் நடைபெற்றது. 110 நாடுகளைச் சேர்ந்த 800 குழந்தைகள் மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் சுற்றுச் சூழல் குறித்த உரைகளும் விவாதங்களும் நடைபெற்றன. பிளாஸ்டிக்குக்கு மாற்றுப் பொருளைக் கண்டுபிடித்து பயன்படுத்துதல், மறு உபயோகம் மூலம் பொருட்களைப் பயன்படுத்துதல், மோட்டார் வாகனங்கள் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொள்ளுதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குழந்தைகளின் மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட கருத்துகளுக்கு ஸ்வீடன் நாட்டில் நடைபெற்ற சுற்றுச் சூழல் மாநாடு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது.

மாத்திரை அளவு கேமரா!

வயிறு மற்றும் ஜீரண உறுப்புகளில் ஏற்படும் கோளாறுகளைக் கண்டு பிடிக்க நீண்ட வயருடன் இணைந்த கேமராவைத்தான் உடலினுள் செலுத்தி வருகின்றனர். இதனால் நோயாளி மிகுந்த சிரமம் அடையவேண்டியிருக்கிறது. மேலும் இந்த கேமராவால் அனைத்து பகுதிகளையும் சோதனையிட முடியாது.

இப்பிரச்னையைத் தீர்க்கும் வகையில் புதிய கேமராவை பிரிட்டிஷ் மற்றும் இஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த கேமரா கேப்சூல் மாத்திரையை விட கொஞ்சம் பெரியது. 11 மில்லி மீட்டர் அகலமும் 30 மில்லிமீட்டர் நீளமும் கொண்டது.

இதை விழுங்கினால் இரைப்பை, குடல் போன்ற பகுதிகளுக்குச் சென்று படம் பிடித்து ரேடியோ அலைகளாக மாற்றி அனுப்பும். அந்த அலைகளை உடலில் பொருத்தப்பட்டுள்ள ஏரியல்கள் பெற்று வீடியோ ரெக்கார்டருக்கு அனுப்புகின்றன. இதன் மூலம் உள்ளுறுப்புகளில் உள்ள கோளாறு என்ன என்பதைக் கண்டறிய முடியும். இது தொடர்ந்து 6 மணி நேரம் இயங்கக் கூடியது.

அதிசயம்!

பாம்பு தவளையை விழுங்கும். தவளை பாம்பை விழுங்குமா? தேனி மாவட்டத்தில் தவளையின் வாய்க்குள் பாம்பின் தலை அகப்பட்டுக் கொண்டது.

உயர்ந்த கட்டடம்!

உலகிலேயே மிக உயர்ந்த 88 மாடிக் கட்டடம் மலேசியாவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டு டவர்களாக உள்ள இக்கட்டடம் 451.9 மீட்டர் உயரமுடையது. இக்கட்டடத்தின் 42வது மாடியிலிருந்து கோலாலம்பூர் நகரைக் கண்டு களிக்கலாம்.

ஆயுள் முடிந்த ஆய்வகம்

பூமிக்கு மேல் சுற்றி அண்ட வெளியை ஆராய்ந்து வந்தது அமெரிக்காவின் காம்ப்டன் காமாக் கதிர் ஆய்வகம். கோள்கள், நட்சத்திரங்கள் போன்றவற்றை இந்த ஆய்வகம் ஆராய்ந்து பூமியில் உள்ள விஞ்ஞானிகளுக்குத் தகவல்களை அனுப்பி வந்தது. பூமியிலிருந்து 510 கி.மீ. உயரத்தில் சுற்றி வரும் இந்த ஆய்வகம் 2,950 கோடி செலவில் அனுப்பப்பட்டது. 9 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கி வந்த ஆய்வகத்தின் ஆயுள் முடிவடைகிறது. இதையொட்டி ஆய்வகத்தை இறக்கி பசிபிக் பெருங்கடலில் மூழ்கடிக்க அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா முடிவு செய்துள்ளது. ஜூன் மாதம் காம்ப்டன் கடலில் மூழ்கடிக்கப்பட்டு விடும் என தெரிவித்துள்ளது நாசா.

பறவைகள் ஆராய்ச்சி!





காற்றைக் கிழித்துக் கொண்டு அழகாக வானில் பறந்து திரியும் பறவைகளை விரும்பாதவர்களே கிடையாது! பறவை தத்தித்தத்தி நடப்பதும், ஓடுவதும், பாடுவதும், பறப்பதும் என ஒவ்வொரு செயலும் நம்மைக் கவர்கின்றன. விதவிதமான பறவைகளின் நிறம், பழக்கம், உணவு, போன்ற இயல்புகளை அறிந்து கொள்வது சுவாரசியமான பொழுது போக்காகும்.

பறவை ஆராய்ச்சிக்கு ஜூலை மாதம் மிகவும் ஏற்றது. பறவைகளை இனம் கண்டு கொள்ள கூர்மையான கண்களும் காதுகளும் வேண்டும். அது தவிர எழுதுவதற்கு ஒரு நோட்டு, பென்சில், பறவைகளைப் பற்றிய படங்களுடன் கூடிய புத்தகம் ஒன்றும் தேவை. கூடவே நுட்பமாக கவனிக்கும் ஆற்றலும் ஆர்வமும் அதிகம் இருக்க வேண்டும்.



பறவைகளை எங்கு பார்க்கலாம்? மரங்கள் அடர்ந்த சோலைகள், பூங்காக்கள், பறவைகள் வரும் நீர் நிலைகள் ஆகியவற்றில் ஏதாவது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

பறவை ஆராய்ச்சிக்குச் செல்லும் போது கறுப்பு, வெள்ளை போன்று சட்டென்று கண்ணில் படும் நிறங்களுடைய ஆடைகளை அணியக் கூடாது. மங்கிய பச்சை, ஊதா, மங்கிய பிரௌன் போன்ற நிறங்கள் பறவைகளுக்குச் சட்டென்று கண்ணில் படாது. அத்துடன் சத்தம் வராத மென்மையான ரப்பர் செருப்புகளை அணிந்து கொள்ள வேண்டும். பறவைகள் வந்து தங்கும் இடத்தில் பேசிக் கொண்டோ, சருகுகளின் மேல் நடந்து ஒலி எழுப்பவோ கூடாது. சத்தத்தால் பறவைகள் மிரண்டு விடும்.

பறவை ஆராய்ச்சிக்கு இளவேனிற் காலமும் கோடைகாலத் தொடக்கமும் மிகவும் ஏற்றவை. ஜூலை மாதத்தில் இளம் பறவைகள் அதிகமாகக் காணப்படும்.

அதிகாலையும் மாலையும் பறவைகளின் நடமாட்டம் அதிகமிருப்பதால் அந்த வேளைகளே நாம் கவனிக்கப் பொருத்தமாக இருக்கும். பலத்த காற்று வீசும் நேரமும் மழை பெய்யும் நேரமும் ஆராய ஏற்றவை அல்ல.

சோலைக்குள் ஆராய்ச்சிக்கு நுழைந்த உடன் பெரிய மரம், புதர், செடிகள் அடர்ந்த இடமாகப் பார்த்து மறைந்து உட்கார்ந்து கொள்ள வேண்டும். கை, கால்களை அசைக்காமல் சிலை போல் அமர்ந்திருந்தால் பறவைகள் அருகில் வரும். கவனிப்பதற்குச் சுலபமாகவும் இருக்கும். நீர் நிலைகளில் உள்ள பறவைகளைச் சற்று தூரத்தில் கரைக்கு அருகில் உள்ள மறைவிடங்களில் இருந்து தான் கவனிக்க வேண்டும்.

நோட்டுப் புத்தகத்தில் தேதி, நேரம், வானிலை, காற்றின் தன்மை, இடத்தின் தன்மை, இடத்தின் பெயர் போன்றவற்றையும் எழுத வேண்டும். பறவையைப் பார்த்தவுடன் அதன் பருமனைக் குறிப்பிட வேண்டும். அளவுகளில் குறிப்பிடுவது சிரமம் என்றால் நமக்குத் தெரிந்த குருவி, மைனா, காகம், கழுகு போன்ற பறவை







களின் அளவோடு ஒப்பிட்டு எழுதலாம். உதாரணமாக நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பறவை, குருவியை விட பெரியதாக இருந்தால் அதை கு(+) என்றும் மைனாவை விட சிறியதாக இருந்தால் மை(-) என்றும் குறிக்கலாம். ஆரம்பத்தில் சிரமமாக இருந்தாலும் நாட்கள் செல்லச் செல்ல நல்ல திறமை பெற்று விடலாம்!

அதற்குப் பிறகு பறவையின் அலகைக் குறிக்க வேண்டும். அலகு பெரியதா, வளைந்ததா, தட்டையானதா, கனமானதா, கொக்கிப் போன்றதா, சிறியதா என்று கவனிக்க வேண்டும். அலகின் வடிவத்தை வைத்து அது எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பதை ஓரளவு கணித்து விடலாம். உருவம் சிறியதாகவும் அலகு குட்டையாகவும் வளைந்தும் இருந்தால் அது பெரும்பாலும் பூச்சிப் பிடிக்கும் இனப் பறவையாக இருக்கும். அலகின் நிறத்தையும் குறிக்க வேண்டும்.


அடுத்தது கால்களின் அமைப்பு. ஒரு பறவைக்கு நீளமான கால்கள் இருந்தால் அது தண்ணீரில் நடக்கும் பறவையாக இருக்கும். கால் விரல்களில் சவ்வு இருந்தால் வாத்து போன்ற நீந்தும் பறவையாக இருக்கும்.

வாலின் நீளமும் தோற்றமும் முக்கியமானவை. வால் குட்டையானதா, பிளவு பட்டதா, நுனி சதுரமானதா, வட்டமானதா, கூர்மையானதா என கவனிக்க வேண்டும். வாலை மேலே தூக்கி உள்ளதா, கீழ் நோக்கி உள்ளதா, ஆட்டுகிறதா என்று பார்க்க வேண்டும்.

பறவையின் நிறம் மிக முக்கியமானது. பளபளப்பான நிறமுடையதா, மங்கலான நிறமுடையதா, எந்த நிறம் அதிகமாக இருக்கிறது என்று நோக்க வேண்டும். உடலில் புள்ளிகள், கோடுகள் இருந்தால் அவற்றையும் குறித்துக் கொள்ள வேண்டும்.


பறவையின் ஒலியே அது என்ன பறவை எனக் கண்டுபிடிக்கச் சிறந்த வழி. சில பறவைகள் இனிமையாகப் பாடும்; சில கரகரப்பாக இருக்கும். 'கா, கா', 'கீ...கீ', 'கூ...கூ...' என்று கேட்கும் ஒலிகளைப் பிரித்து அறிய வேண்டும்.


















கடைசியாக பறவையின் உணவைக் கவனிக்க வேண்டும். பூச்சி, புழுக்கள், பழங்கள், இறந்த உயிரினங்கள், கொட்டைகள், காய்கள் என சாப்பிடுபவற்றை எழுத வேண்டும்.

பறவை தரையில் நடக்கிறதா? ஓடுகிறதா? தத்தித்தத்திச் செல்கிறதா? மரத்தில் உட்கார்கிறதா? கூட்டமாகச் செல்கிறதா? தனித்துச் செல்கிறதா? வேகமாகப் பறக்கிறதா; மெதுவாகப் பறக்கிறதா? நீரில் நன்றாக நீந்துகிறதா? என பறவைகளைக் கவனிக்க நூற்றுக்கணக்கான விஷயங்கள் உள்ளன.

பறவைகளை இனங்கண்டு கொள்ளும் திறமை வந்தவுடன் முட்டைகள், அடை காத்தல், குஞ்சு பொரித்தல் போன்றவற்றை ஆராயலாம்.


பறவை ஆராய்ச்சி செய்யச் செய்ய மிகவும் சுவாரசியமாகும். பல அரிய உண்மைகள் தெரியவரும். நம்மைச் சுற்றி எந்தெந்த இடங்களில் பறவைகள் வாழ்கின்றன? பருவ காலங்களுக்கேற்ப புதுப் பறவைகளின் வரவு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றை நாம் அறிந்து கொள்ள முடியும்.

நீங்களும் இந்தப் பறவை ஆராய்ச்சியைப் பொழுது போக்குகளில் ஒன்றாக வைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் பைனாகுலர் இருந்தால் மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள்!

அட்டையில்: **விவேக், கீதா**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

சார் தபால்!



✉ கோகுலம் இதழ் மார்ச் 2000ல் இருந்துதான் எனக்கு அறிமுகமானது. கடந்த மூன்று இதழ்களையும் படித்த பிறகு இத்தனை நாள் இப்புத்தகத்தைப் படிக்காமல் விட்டுவிட்டேனே என வருந்தினேன். கோகுலத்தைப் பத்திரப் படுத்த முடியவில்லை. யாராவது நண்பர்கள் வந்தால் எடுத்துச் சென்று விடுகின்றனர். அதனால் ஒவ்வொரு மாதமும் வெளிவரும் புதிர் பகுதியை நோட்டில் எழுதி வைத்து விடுகிறேன்.

– இரா. சோனியா,
பத்தாம் வகுப்பு, ஆண்டரசன்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.

✉ ஜூன் இதழில் 'ஏன் சிரித்தார்கள்?' பரிசுக் கதையைப் படித்தோம். திக்கிப் பேசுவதைக் கிண்டல் செய்யும் பழக்கத்தை நூற்றுக்கு ஐந்து சிறுவர் விட்டாலே போதும். பரிசுக் கதைக்கு அதுவே பெரிய பரிசாகிவிடும்.

– சிறுவர் இலக்கியச் சிறகம்,
புதுச்சேரி.

திருஷ்டி பூசணிக்காய்!

✉ ரசிகனுக்கு அளவிற்கு அதிகமான ரசனை தேவை இல்லை என்பதற்கு 'அன்பளிப்பு...' முட்டாள் தனமான காரியங்கள் செய்தால் நாடு என்ன ஆகும் என்பதற்கு, 'என்ன கிடைக்கும்?'... சிவனுக்கு நெற்றிக் கண் தோன்றியது எப்படி என்பதை விளக்கிய மூன்று படக் கதைகளும் முத்துகள்!

– எம். செல்லையா,
சாத்தூர்.

✉ கோகுலம் நியூஸ் பகுதியில் இடம் பெற்றிருந்த தகவல்கள் பயனுள்ளதாக இருந்தன. இலவுகாத்த கிளி பாடலும் படமும் நன்றாக இருந்தன.

– இரா. மணிமாலாஜோதி,
ஏழாம் வகுப்பு,
சௌராஷ்ட்ரா மேல்நிலைப்பள்ளி,
பரமக்குடி.

✉ பாடகி நித்யஸ்ரீயின் ரசிகை நான். நான் எதிர்பார்க்கா வண்ணம் ஜூன் இதழில் அவருடைய குழந்தைப் பருவ அனுபவங்கள் இடம்பெற்றது எனக்கு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எதையும் நம்பிவிடும் குணம், பாட்டிக்கு இரட்டைப் பின்னல் என நித்யஸ்ரீயின் அனுபவங்கள் படிக்க வெகு ஜோர்!

– உ. கார்த்திகா தேவி,
பத்தாம் வகுப்பு,
கடலூர்.


✉ அழகன், செந்தில், குமரன்! தொடர் கதையில் வரும் செந்திலைப் பற்றி கற்பனையில் எப்படி நினைத்தேனோ அதே போல் ஓவியர் வரைந்திருக்கிறார். முதல் மாதமே செந்தில் மேல் அனுதாபமும் குமரன் மேல் அன்பும் ஏற்பட்டு விட்டது.


– சி. நித்யானந்தம்,
ஈரோடு.

✉ திருஷ்டி சுற்றிப் போட பூசணிக் காயைப் பயன்படுத்துவார்கள். ஆனால் அந்தப் பூசணிக்காயே அழகு என்றால் எதை வைத்துச் சுற்றிப் போடுவது? நான் சொல்வது பூசணி பொம்மை எப்படி செய்யலாம் என்று படத்துடன் விளக்கியிருந்ததைத்தான்! பொம்மை செய்ய முழுப் பூசணிக் காயைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

– கே. பத்மப்ரியா,
அரசவனங்காடு.

விளையாட்டு அரங்கம்!


• பீட் சாம்ப்ராஸ்


• பயஸ் - பூபதி


• மார்ட்டினா

டென்னிஸ் உலகில் இரண்டாவது இடத்தில் இருப்பவர் அமெரிக்காவைச் சேர்ந்த பீட்சாம்ப்ராஸ். இவருக்கு வயது 29. இதுவரை 62 பட்டங்களையும் 12 கிராண்ட்ஸ்லாம்களையும் வென்றிருக்கிறார்.

இதுவரை பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் பட்டத்தை மட்டும் சாம்ப்ராஸ் வென்றதில்லை. சமீபத்தில் நடைபெற்ற பிரெஞ்சு ஓபன் போட்டியில் முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்தார். இது அவரது ரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மார்க் பிலிப் போசிஸியால் இவருக்கு இந்தத் தோல்வி ஏற்பட்டது.

மகளிர் டென்னிஸ் உலகில் மார்ட்டினா நவரத்திலோவாவை யாராலும் மறக்க முடியாது. 56 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களையும் 19 விம்பிள்டன் பட்டங்களையும் வென்றவர்.

43 வயதாகும் மார்ட்டினா 1995ஆம் ஆண்டு டென்னிஸில் இருந்து ஓய்வு பெற்றார். ஐந்தரை ஆண்டுகள் கழித்து விம்பிள்டனில் 20 வது முறையாகப் பட்டம் வென்று சாதனை படைக்கும் நோக்கில் மீண்டும் விளையாட வந்திருக்கிறார்.


'என்னுடைய விளையாட்டு பழைய அளவுக்கு சிறந்ததாக இல்லை. இருப்பினும் மோசமாகவும் இல்லை. சில நேரங்களில் விளையாடும் போது பிரச்னை வருகிறது. இதை வரும் போட்டிகளில் சரிசெய்து விடுவேன்' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் மார்ட்டினா. மார்ட்டினா மீண்டும் விளையாட இருப்பது இரட்டையர் ஆட்டங்களில் மட்டுமே!

சென்ற ஆண்டு இரட்டையர் பிரிவில் விம்பிள்டன் பட்டத்தை வென்று பெருமை தேடித் தந்தவர்கள் மகேஷ் பூபதி-லியாண்டர் பயஸ் ஜோடி. இந்த ஜோடி இணைந்து விளையாடி மேலும் பல பட்டங்களைக் குவிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பயிற்சியாளர்களின் பிரச்னையால் இந்த ஜோடி பிரிந்து விட்டது. இனிமேல் இருவரும் சேர்ந்து விளையாடுவதில்லை என முடிவு செய்திருக்கிறார்கள். இணைந்து ஆடிய போது கிடைத்த வெற்றியைப் போல் தனித்து ஆடும் போதும் வெற்றி கிடைத்தால் மகிழ்ச்சிதான்!

கிரிக்கெட்

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி வங்க தேசத்தில் நடைபெற்றது. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் அணிகள் பங்கு பெற்றன.

இந்தியா மூன்று போட்டிகளில் விளையாடியது. வங்க தேச அணியை மட்டும் வென்று இலங்கை, பாகிஸ்தானிடம் தோல்வி கண்டது. இறுதிப் போட்டியில் இலங்கையும் பாகிஸ்தானும் மோதின. இதில் பாகிஸ்தான் இலங்கையை வென்று முதல் முறையாக ஆசியக் கோப்பையைக் கைப்பற்றியது.



அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் மூன்றாவது பரிசு பெறும் முதல் கட்டுரை.

அறிவியல் முன்னேற்றப் பாதையில் இந்தியா!

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியா அன்னியரிடம் அடிமைப்பட்டிருந்தது. ஆங்கிலேயரின் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு கடந்த ஐம்பதாண்டுகளில் இந்தியா பல துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பிட்ட சில துறைகளில் நம் நாடு அடைந்துள்ள வளர்ச்சியினைக் கண்டு வல்லரசு நாடுகளே அச்சம் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உணவு, விவசாயத் துறையில் மனித ஆற்றலை மட்டுமே நம்பியிருந்த நம் நாடு பல நவீன வசதிகளைப் பெருக்கியுள்ளது. இரும்பு எஃகுத் தொழிற்சாலைத் துறையிலும் மின்னணுத் துறையிலும் குறிப்பிட்ட சாதனை படைத்துள்ளது. ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்களின் கல்வித் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. எல்லோரும் படிப்பறிவு பெற பல திட்டங்கள் நடை முறைபடுத்தப்பட்டு வருகின்றன.

கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தில் நாம் விரைவாக முன்னேறி வருகிறோம். கணிப் பொறி பங்கு பெறாத துறைகளே இல்லை எனலாம். கல்வித் துறை முதல் செயற்கைக் கோள் வரை கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தின் பயன்பாடு பெருகி வருகிறது.

மருத்துவத் துறையில் நாம் சாதித்து வருகிறோம். நோய்கள் கத்தியின்றி ரத்தமின்றி கதிர் வீச்சுகளால் குணப்படுத்தக் கூடிய அளவிற்கு முன்னேறியுள்ளது. மருத்துவத் துறையிலும் கணிப் பொறியின் உபயோகம் அளப்பரியதாகும். ரோபோ எனும் இயந்திர மனிதனைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்யுமளவிற்கு ஆற்றலைப் பெற்றுள்ளது நம் மருத்துவத்துறை.

போக்குவரத்துத் துறை மற்றும் தொலைத் தொடர்புத் துறை இவற்றிலும் இந்தியா பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது. 1930ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட வான்வழிப் போக்குவரத்தும், 1883ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொடர் வண்டிப் போக்குவரத்தும் அதிக அளவு வளர்ந்து வருகின்றன. இன்சாட் IIA, இன்சாட் IIB, பாஸ்கரா I & II போன்ற சக்தி வாய்ந்த, தொலைத் தொடர்பு மற்றும் வானியல் துறைகளுக்கு உதவும் செயற்கைக் கோள்கள் இந்திய நிறுவனத்தால் பூமியின் சுழற்சிப் பாதையில் அனுப்பப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியா பெற்றுள்ள அறிவியல், பொருளாதார, சமுதாய வளர்ச்சி வரும் நூற்றாண்டுகளிலும் சிறந்தோங்கும். அதற்காக உழைக்கும் அறிஞர்கள் நம் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள்!

— சுப்ரதா

பத்தாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நங்கநல்லூர், சென்னை.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

வண்ணம் தீட்டுங்கள்!





விடை : B



விடை : ஸ்குரு டிரைவர், கத்தி, கத்தரிக்கோல்

''நான் கோபு மாதிரி கோள் சொல்ல மாட்டேன்... ரமேஷ் மாதிரி முதுகுக்குப் பின்னாலே பேச மாட்டேன்... பாலு மாதிரி குற்றங் கண்டுபிடிக்க மாட்டேன்... மொத்தத்துல நான் சுரேஷ் மாதிரி மத்தவங்களைப் பத்தி பேசவே மாட்டேன்..''

\- தஞ்சை தாமு



பிருந்தாவனம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 " Registered as a Newspaper in Srilanka

